2833

T.N.L.A Debates

Official Report

Vol IV NO 5

1st April 1985

D
V211,31 N85
N85-4.5
136429

24 ஏப் 1986

301/85

2833

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
செயலக வெளியீடு

# TAMILNADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATE
## OFFICIAL REPORT

**திங்கட்கிழமை, 1985 ஏப்ரல் 1, தொகுதி IV-எண். 5.**

Monday the 1st April 1985—Volume IV-No. 5.

சட்டமன்றப் பேரவை செயலகம், சென்னை-600 009

**Legislative Assembly Department, Fort St. George,**

**Madras-600 009**

விலை-ரூ. *3.50* காசுகள்]

Price Rs. 3-50 paise

V211, 31 'N85

N85.4.5

136429

## உள்ளடக்கம்

### 1-4-1985


| | பக்கங்கள் |
|---|---|
| 1. இரங்கல்குறிப்புகள் : | |
| முன்னாள் உறுப்பினர்களான திருவாளர்கள் எஸ். இராமசாமி தேவர், கே. திருவேங்கடம் ஆகியோர் மறைவு குறித்து .. .. | 561—562 |
| 2. வினாக்கள்—விடைகள் : | |
| உடுக்குறியிட்ட வினாக்கள் .. .. | 562—596 |
| 3. தகவல் கோரல் : | |
| (அ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிக்கை | 596—598 |
| (ஆ) கவன ஈர்ப்பு அறிக்கை மீது அதிகப்படியான உறுப்பினர்களுக்கு கேள்வி கேட்க வாய்ப்பளிப்பது .. .. | 598 |
| 4. கவன ஈர்ப்புகள் : | |
| (அ) குடந்தை அரசினர் ஆடவர் கல்லூரி மாணவர்களுக்கு தற்காலிகச் சான்றிதழ்கள் வழங்குவதில் ஏற்பட்ட காலதாமதம் காரணமாக மாணவர்களுக்கு ஏற்பட்ட பாதிப்பு | 599—600 |
| (ஆ) செங்கல் உற்பத்தியாளர்கள் ஸ்ட்ரைக் .. | 600—605 |
| 5. வரவு-செலவுத் திட்டம் 1985-86 பொது விவாதம் (தொடர்ச்சி) | 605—700 |
| திரு. எஸ். பி. மணவாளன் .. | 605—610 |
| திரு. கோ. பெருமாள் பிள்ளை .. | 510—615 |
| திரு. சு. சிவராஜ் .. | 615—620 |
| திரு. அ. மலர்மன்னன் .. | 620—628 |
| டாக்டர் கே. பி. இராமலிங்கம் .. | 628—636 |
| திரு. எஸ். புருசோத்தமன் .. | 636—645 |
| திரு. டி. தீர்த்தகிரி கவுண்டர் .. | 645—657 |
| திரு. அ. வெங்கடாசலம் .. | 657—667 |
| திரு. கு. தமிழரசன் .. | 667—673 |
| திரு. கே. பி. கே. சேகர் .. | 673—681 |
| திரு. வை. பாலச்சந்திரன் .. | 681—691 |
| திரு. கே. வி. வேணுகோபால் .. | 691—693 |
| திரு. க. சோலைராசு .. | 693—700 |
| 6. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள் .. | 701—702 |

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

---

**1985, ஏப்ரல் 1, திங்கட்கிழமை**

**பங்குனி 19, ரக்தாட்சி — திருவள்ளுவர் ஆண்டு, 2010.**

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9.00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :**

“ இடிக்குந் துணையாரை ஆள்வாரை யாரே
கெடுக்குந் தகைமை யவர்.”

கடிந்து அறிவுரை கூறவல்ல பெரியாரின் துணைக்கொண்டு நடப்பவரைக் கெடுக்கும் ஆற்றலுள்ளவர் யார் இருக்கின்றனர்.

## 1. இரங்கல் குறிப்புகள்.

**முன்னாள் உறுப்பினர்களான திருவாளர்கள் எஸ். இராமசாமி தேவர், கே. திருவேங்கடம் ஆகியோர் மறைவு குறித்து.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முன்னாள் உறுப்பினர்களான திரு. எஸ். இராமசாமி தேவர் அவர்கள் கடந்த 23—12—1984 ஆம் தேதியன்றும் திரு. கே. திருவேங்கடம் அவர்கள் 12—3—1985 ஆம் தேதியன்றும் மறைந்ததை குறித்து இப்பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எஸ். இராமசாமி தேவர் அவர்கள் 1957-ஆம் ஆண்டி லிருந்து 1962 ஆம் ஆண்டு வரை அறந்தாங்கி தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினராக தேர்ந்தெடுக்கப் பெற்று நல்ல முறையில் பணியாற்றியுள்ளார். மதுவிலக்கு குழு, வட்ட விவசாயிகள் முன்னேற்றக் குழு மற்றும் வட்ட நல்வாழ்வு குழு ஆகியவற்றின் உறுப்பினராக சிறந்த முறையில் பணியாற்றி யுள்ளார்.

[பேரவைத் தலைவர்] [1985 ஏப்ரல் 1

திரு. கே. திருவேங்கடம் அவர்கள் 1962 ஆம் ஆண்டிலிருந்து 1967-ஆம் ஆண்டு வரை மதுரை மாவட்டம் திருமங்கலம் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பின ராக தேர்ந்தெடுக்கப் பெற்று நல்ல முறையில் பணியாற்றி யுள்ளார். மதுரை மாவட்ட வளர்ச்சிக் குழுவின் உறுப்பின ராகவும், கள்ளிக்குடி ஊராட்சி மன்றத்தின் தலைவராகவும் சிறந்த முறையில் பணியாற்றியுள்ளார்.

அன்னாரவர்களின் மறைவு குறித்து அவர்களை இழந்துவிட்ட குடும்பத்தினர்களுக்கு ஆழ்ந்த வருத்தத்தையும், அனுதாபத் தையும், இரங்கலையும் இப்பேரவையின் சார்பிலும் என் சார்பிலும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இயற்கை எய்தியவர்களுக்கு மரியாதை தெரிவிக்கும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் இரண்டு நிமிடங்கள் மவுனமாக எழுந்து நிற்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

(உறுப்பினர்கள் அனைவரும் இரண்டு நிமிடங்கள் மவுனமாக எழுந்து நின்றனர்.)

## 2. வினாக்கள்—விடைகள்.

### உடுக்குறியிட்ட வினாக்கள்.

**அரசு பொது நிறுவன ஊழியர்களுக்கு இடைக்கால நிவாரணம்**

34—(*வினா எண் 466) திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் அரசுப் பணியாளர்களுக்கு அறிவிக்கப் பட்ட இடைக்கால நிவாரணம் ரூ. 300 தங்களுக்கும் வழங்கப்பட வேண்டும் எனக் கோரி தமிழக அரசு பொது நிறுவன ஊழியர்கள் முறையீடு ஒன்றை அரசுக்கு அனுப்பி இருக்கிறார்களா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?



1985 ஏப்ரல் 1]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) ஆம்.

(ஆ) இதுதொடர்பாக சில நிறுவனங்களிடமிருந்தும், அவற்றில் பணிபுரியும் ஊழியர்களின் சங்கங்களிடமிருந்தும் கோரிக்கைகள் வந்தன. அவற்றைப் பரிசீலனை செய்து, அரசு ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட தற்காலிக நிவாரணம் அவர்களுக்கு ஒட்டு மொத்தமாக, ஒரு முறை மட்டும் வழங்கப் பட்டது என்பதாலும், அது நான்காவது தமிழ்நாடு ஊதியக் குழுவின் பரிந்துரை செய்யப்படாத நிலையில், அரசு ஊழியர்களின் பல்வேறுபட்ட கோரிக்கைகளையும் கருத்தில் கொண்டு வழங்கப்பட்டதென்பதாலும், தமிழ்நாடு அரசு நிறுவனங்கள் மற்றும் வாரியங்களில் பணிபுரியும் ஊழியர்களுக்கு ஊதிய விகிதங்கள் நிர்ணயம் செய்வது, நான்காவது தமிழ்நாடு ஊதியக் குழுவின் பரிந்துரை வரையறைகளுக்குட்பட்டதல்ல என்பதாலும், அரசு நிறுவனங்கள்/வாரியங்கள் அவற்றின் ஊழியர்களுக்கு அளிக்க வேண்டிய அவசியம் இல்லை என்று ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. எனினும், தங்களுக்கென்று தனிப்பட்ட ஊதிய நிர்ணய முறைகள் மேற்கொள்ளாமல் முற்றிலும் அரசின் ஊதிய விகிதங்களையே நூற்றுக்கு நூறு ஒட்டு மொத்தமாகப் பின்பற்றிவரும் நிறுவனங்களும், வாரியங்களும் தமிழ்நாடு நான்காவது ஊதியக் குழுவின் பரிந்துரைகள் வெளியிடப்பட்டு, அதன் மீது அரசு மேற்கொள்ளும் முடிவான ஊதிய விகிதங்கள் பற்றிய ஆணையின் அடிப்படையில், அரசு அனுமதியுடன், நிறுவன/வாரிய ஊழியர்களுக்கு அமுலாக்கலாம் என்றும் விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக, அரசு ஊழியர்களுக்கு அளிக்கப்படாத போனஸ், கருணைக் கொடை போன்ற வேறு பல சலுகைகளைப் பெறும் நிறுவன/வாரிய ஊழியர்களும், இடைக்கால நிவாரணம் என்று அரசு ஊழியர்களுக்கு வழங்கிய தொகையை தற்போது பெறா விட்டாலும், ஊதியக் குழுவின் பரிந்துரையின் மீது அரசு ஆணைகள் வெளியிடப்பட்டதும், அரசு ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட இடைக்கால நிவாரணத் தொகையின் பாதிக்கு சமமான தொகையை (அதாவது பின்னர் அரசு ஊழியர்களுக்கு அளிக்கப்படப்போகும் ஊதிய உயர்வில் ஊதிய விகிதத்திற்கு ஏற்ப பிடித்தம் செய்யப்படும் பாதித் தொகையான ரூ. 150 அல்லது ரூ. 100-ஐ) எவ்வித பிடித்தமும் இல்லாமல், அரசு

ஊழியர்களின் சம்பள உயர்வின் அனைத்து பயன்கள் பெறுவது போன்று பெறுவர். ஆயின் அரசு ஊழியர்களுக்கு நிவாரணத் தொகையில் பாதி பிடித்தம் செய்யப்படும்.

**திரு. இரா. தாமரைக்கனி:** பேரவைத் தலைவரவர்களே, அரசு ஊழியர்களைப் போலவே அரசு நிறுவன ஊழியர்களும் அரசுத் துறைகளில் பணியாற்றுகின்றார்கள். அரசு ஊழியர்களின் எண்ணிக்கையுடன் ஒப்பிட்டால் அரசு நிறுவன ஊழியர்களின் எண்ணிக்கை மிகவும் குறைவு. எனவே, இவர்களுக்கும் இந்த இடைக்கால நிவாரணம் கொடுப்பதனால் அரசுக்கு மிகவும் சொற்பமான தொகையே கூடுதல் செலவாக ஏற்படும். தாயுள்ளம் கொண்ட புரட்சித் தலைவரவர்களின் அரசு அந்த நிறுவன ஊழியர்களுக்கும் இடைக்கால நிவாரணம் அளிப்பதற்கு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இங்கே வைக்கப்பட்டிருக்கின்ற விவர அறிக்கையில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருக்கின்றது. நியமிக்கப்பட்ட நான்காவது தமிழ்நாடு ஊதியக் குழு அரசு ஊழியர்களைப் பொறுத்துத்தான் அமைந்திருக்கின்றது. நிறுவனங்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு முறையைக் கையாளுகின்றன; தன்னிச்சையாக நடைபெறக் கூடியவைகளும் இருக்கின்றன. அவைகளில் சில நிறுவனங்கள் மட்டுமே அரசு எவ்வெப்பொழுது, என்னென்ன சம்பள விகிதங்களை, படிகளை அறிவிக்கின்றதோ அதை ஏற்பவைகளாக, எவ்வெப்பொழுது அகவிலைப்படி எந்த அளவிற்கு வழங்கப்படுகிறதோ, அந்த அளவிற்கு வழங்கக்கூடிய முறைகளைச் சில நிறுவனங்கள் மட்டுமே கொண்டிருக்கின்றன. ஆனால், பல நிறுவனங்கள், தன்னிச்சையாக, அந்தந்த நிறுவனத்தைப் பொறுத்தவரையில் தொழிலாளர்களுடன் உடன்பாடு செய்து கொண்டு, சம்பளம், படி போன்றவைகளில் அவர்கள் முடிவெடுத்துக் கொள்கிறார்கள். அப்படிப்பட்ட நிறுவனங்களுக்கு இந்த ஊதியக் குழுவினுடைய முடிவுகள் பொருந்தி வராது. இது அரசு ஊழியர்களுக்கு மட்டுமே பொருந்தி வரக் கூடிய ஒன்று. ஆனால், எந்தெந்த நிறுவனங்கள் அரசு பின்பற்றுகின்ற முறைகளைப் பின்பற்றுகின்றனவோ, அந்த



2833

நிறுவனங்கள், ஊதியக் குழுவினுடைய பரிந்துரைகள் வந்த பிறகு அதனுடைய அடிப்படையில் வெளியிடப்படும் அரசு ஆணைகளைப் பின்பற்றி ஊதிய விகிதங்களை அமைக்கலாம் என்றும் அப்போது நிலுவைத் தொகையில் மேற்படி நிறுவன ஊழியர்கள் பிடித்தமின்றி மொத்தமாகப் பெறும் முறையைக் கடைப்பிடிக்கலாம் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. எனவே, அது ஊதியக் குழுவினுடைய பரிந்துரைகள் வந்த பிறகு முடிவு செய்யப்பட வேண்டிய ஒன்று.

**திரு. இரா. தாமரைக்கனி:** பேரவைத் தலைவரவர்களே. அரசு ஊழியர்களுக்கு, அமைக்கப்பட்டுள்ள ஊதியக் குழுவினுடைய பரிந்துரைகள், அரசு நிறுவன ஊழியர்களுக்கும் பொருந்துமா? இல்லையென்றால் அவர்களுக்கும் பொருந்துமாறு ஊதியக் குழுவினுடைய செயல்பாட்டு முறை மாற்றியமைக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவரவர்களே, நான் முதலிலேயே கூறியபடி, எல்லா நிறுவனங்களும் அரசின் ஊதிய நிர்ணய முறைகளைப் பின்பற்றுகின்ற நிறுவனங்களாக இல்லை. சில நிறுவனங்கள் மட்டுமே அரசு பின்பற்றி வரும் சம்பளம், அகவிலைப்படி ஆகியவற்றைப் பின்பற்றி வருகின்றன. அவைகளை ஒட்டி. தமிழ் நாடு நான்காவது ஊதியக் குழுவின் பரிந்துரைகள் அடிப்படையிலே அமையும் ஊதிய விகிதங்களை தமிழ் நாடு அரசு நிறுவனங்கள் மற்றும் வாரியங்களில் பணியாற்றும் ஊழியர்களுக்கும் அமல்படுத்தக் கூடாது என்பது அரசின் நோக்கமல்ல. ஆனால் தங்களுக்கென்று தனிப்பட்ட ஊதிய நிர்ணய முறைகள் மேற்கொள்ளாமல், முற்றிலும் அரசின் ஊதிய விகிதங்களையே நூற்றுக்கு நூறு ஒட்டுமொத்தமாகப் பின்பற்றி வரும் நிறுவனங்களும், வாரியங்களும், தமிழ் நாடு நான்காவது ஊதியக் குழுவின் பரிந்துரைகள் வெளியிடப்பட்டு அதன் மீது அரசு மேற்கொள்ளும் முடிவான ஊதிய விகிதங்கள் பற்றிய ஆணையை எதிர்பார்த்து, பின்னால் அதன் அடிப்படையில் தத்தம் நிர்வாக இயக்குநர்கள் குழுக்களில் அவர்கள் முடிவு செய்து, மேற்படி நிறுவனங்கள், வாரியங்கள், தீர்மானங்கள் நிறைவேற்றி அந்த ஊதிய விகிதங்களை அரசு முன் அனுமதி பெற்று, அவற்றை ஊழியர்களுக்கு அமல்

படுத்தலாம். அகவிலைப்படி அளிக்கும் விஷயத்தில் நூற்றுக்கு நூறு அரசு ஊதிய விகிதங்களை பின்பற்றும் அரசு நிறுவனங்கள் மற்றும் வாரியங்கள் மட்டும் அரசு எப்பொழுது உயர்வு தவணை அளிக்கிறதோ, அவ்வப்போதெல்லாம் அவைகளை வழங்கலாம். அந்த உயர்வு தவணை அகவிலைப் படிகளும் நிறுவன, வாரிய நிர்வாகக் குழுக்களின் தீர்மானங்களாக நிறைவேற்றி, பின்னால் அந்த நிறுவன, வாரிய ஊழியர்களுக்கு வழங்கப்படலாம். அந்த அகவிலைப்படி உயர்வு தவணை அளிப்பதை பொறுத்தவரையில், அரசு ஒப்புதல் பெற வேண்டியதில்லை. ஆகவே, அரசு ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட இடைக்கால தற்காலிக நிவாரணத் தொகையானது அவர்களுக்கு ஒட்டுமொத்தமாக ஒருமுறை மட்டும் வழங்கப்பட்டதாகும். இது நான்காவது தமிழ் நாடு ஊதியக் குழுவின் பரிந்துரைகள் பெறப்படாத நிலையில் அரசு ஊழியர்களின் பல்வேறுபட்ட கோரிக்கைகளையும் கருத்தில் கொண்டு வழங்கப்பட்டதாகும். அதனால் இதனை மேற்கண்ட நிறுவனங்கள், வாரியங்கள் ஊழியர்களுக்கு அளிக்க வேண்டிய அவசியமில்லை.

**திரு. வி. பி. சிந்தன்:** தலைவர் அவர்களே, அரசு ஊழியர்களுக்கும், அரசால் நடத்தப்படுகிற நிறுவனங்களில் பணியாற்றும் ஊழியர்களுக்கும், குறைந்தபட்ச சம்பளத்தை நிர்ணயிக்க அரசிற்கு உத்தேசம் உண்டா? 125 ரூபாய், 150 ரூபாய், 200 ரூபாய் என்று சம்பளம் கொடுக்கிற பல்வேறு நிறுவனங்களுடைய விளக்கத்திற்குள் நான் போகவில்லை. இந்தப் பரிந்துரைகள் வெளியானதற்குப் பின்னாவது இத்தகைய ஊழியர்களுக்கு, அது சத்துணவு மையங்களில் பணியாற்றும் ஊழியர்களாக இருந்தாலும், மின்சார இலாக்காவில், போக்குவரத்துக் கழகங்களில், சின்கோனாவில் பணியாற்றும் ஊழியர்களாக இருந்தாலும் சரி, குறைந்தபட்ச சம்பளம் அவர்களுக்கு நிர்ணயிக்கப்படுமா என்பதை அமைச்சர் அவர்களிடத்திலிருந்து அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, அப்படி நிர்ணயிக்கிற உத்தேசம் இல்லை. ஊதியக் குழுவின் பரிந்துரைகள் அந்த அடிப்படையில் வருமானால், அதற்கு பிறகு அரசு ஆலோசிக்கும்.



**திரு. சா. துரைசாமி:** தலைவர் அவர்களே, தங்களை ஐக்கியநாட்டு சபை பொதுச் செயலாளராக நியமிப்பதாக சற்று முன் செய்தி வந்துள்ளது. அது தங்களுக்குத் தெரியுமா? எனது வாழ்த்துக்களைத் தங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்று ஏப்ரல் மாதம் 1-ம் தேதி. நான் ஏமாற மாட்டேன்.

## சத்துணவு மையங்கள்

35—(*வினா எண் 157) திரு. பொ. உத்திராபதி, திரு. கு. சுப்பராயன், திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு சத்துணவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் உள்ள மொத்த சத்துணவு மையங்கள் எத்தனை?

(ஆ) அதில் வேலை செய்யும் அமைப்பாளர்கள், பணியாளர்கள் எத்தனை பேர்?

(இ) அவர்களை நிரந்தர ஊழியர்கள் ஆக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன்:

(அ) தமிழகத்தில் பாலர் பள்ளி மையங்கள் 27,897 பள்ளி மையங்கள் 37,447-ம் ஆக மொத்தம் 65,344 மையங்கள் உள்ளன.

| | |
|---|---|
| (ஆ) குழந்தைகள் நல அமைப்பாளர்கள் | 27,897 |
| சத்துணவு அமைப்பாளர்கள் | 37,447 |
| மொத்தம் | 65,344 |
| குழந்தைகள் நல உதவியாளர்கள் | 55,794 |
| சமையலர் மற்றும் உதவியாளர்கள் | 76,114 |
| மொத்தம் | 1,31,908 |

(இ) மேற்கண்ட நபர்களை நிரந்தர ஊழியர்களாக ஆக்கும் திட்டம் அரசிடம் இல்லை.

**திரு. பொ. உத்திராபதி:** தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் புள்ளிவிவரத்தை எடுத்துச் சொல்லிவிட்டு, இறுதியாக அந்த ஊழியர்களை நிரந்தர ஊழியர்களாக ஆக்குகிற திட்டமில்லை என்று சொல்கிறார்கள். அந்த ஊழியர்கள் வாங்குகின்ற சம்பளம் 150 ரூபாய்; அங்கே சமைக்கிறவர்கள் 60 ரூபாய் ஒரு மாதத்திற்கு பெறுகிறார்கள். பாத்திரங்களை கழுவிக் கொடுக்கிற அம்மாவிற்கு 30 ரூபாய் கொடுக்கப்படுகிறது. கடுமையாக விலைவாசி ஏறியிருக்கிறபோது, இப்படி குறைந்த சம்பளத்தைப் பெறுவதினால் தான் அவர்கள் குழந்தைகளுக்கு கொடுக்கிற பொருள்களை எடுக்கிற தவறான காரியத்தில் ஈடுபடுகிறார்கள் என்று பொதுமக்கள் மத்தியில் அதிருப்தி இருக்கிறது. அதைப் போக்குவதற்கு எதிர்காலத்திலாவது அமைச்சர் அவர்கள் அந்த மையங்களில் சமைக்கிறவர்களுக்கு மாதத்திற்கு 150 ரூபாயும், பாத்திரங்களைக் கழுவுகிறவர்களுக்கு 100 ரூபாயும், அதேபோல அமைப்பாளர்களுக்கு குறைந்தபட்ச அடிப்படைச் சம்பளமாக 350 ரூபாயும் கொடுப்பதற்கு முன்வருவார்களா? அதற்கு இப்போதே வாக்குறுதி அளிப்பார்களா என்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

(முற்பகல் 9-10)

**மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன்:** தலைவரவர்களே, இந்த சத்துணவுக் கூடங்களில் பணியாற்றுகின்றவர்கள் பகுதிநேர ஊழியர்களாக இருக்கிறார்கள். அவர்கள் ஒரு குறிப்பிட்ட மணி நேரம்தான் பணியில் ஈடுபடுகிறார்கள். அந்த நேரத்திற்கு ஏற்ப இந்த ஊதியம் வழங்கப்படுகிறது. ஆகவே, இதில் வேறு வகையில் ஆலோசிக்கும் இடம் இல்லை.

**திரு. கு. சுப்பராயன்:** தலைவரவர்களே, மனிதாபிமான அடிப்படையில்தான் மதிய உணவு வழங்கப்படுவதாகச் சொல்லப்படுகிறது. ஆனால் மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பதிலிலிருந்து மதிய உணவு வழங்குகின்ற அமைப்பாளர்களுக்கும், இதர பணியாளர்களுக்கும் பணி நிரந்தரமாக்கப்படவில்லை என்று சொன்னார்கள். இது மனிதாபிமான அடிப்படையில் அளிக்கின்ற பதிலாக இல்லை. மேலும் நாடு முழுவதும் பொதுவாக குறைந்தபட்ச ஊதிய நிர்ணயம் என்பது 500 ரூபாயாக உயர்த்தப்பட வேண்டுமென்று கோரிக்கை வைக்கப்





பட்டிருக்கும்போது, இந்த சத்துணவு மையங்களில் பணியாற்றுகின்ற பணியாளர்களின் ஊதியத்தையும் குறைந்தபட்சம் 500 ரூபாய் என்று மாற்றியமைப்பது தான் சரியானது. எனவே அமைச்சரவர்கள் இதை மனிதாபிமான அடிப்படையில் பரிசீலிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன்:** தலைவரவர்களே, மனிதாபிமான உணர்வினுடைய அடிப்படையில்தான் இந்த சத்துணவுத் திட்டமே இன்றைக்குச் செயல்படுகிறது. தமிழகத்தினுடைய முதலமைச்சர் இதயதெய்வம், டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களை மனிதாபிமானத்தின் மொத்த உருவமாக இன்றைக்கு உலகத்தலைவர்கள் எல்லாம் பார்க்கிறார்கள் (மேசையைத் தட்டும் ஒலி). ஆகவே, இன்றைக்கு பணியில் இருக்கக்கூடியவர்கள், அந்தந்த கிராமத்தில் இருக்கக்கூடியவர்கள் தான் ஆங்காங்கே கொஞ்ச நேரம் பணியாற்றுகிறார்கள். இதற்கு என்று அவர்கள் முழு நேரமும் அங்கே பணியாற்றவில்லை. ஆகவே அங்கே பணியாற்றுகின்றவர்கள் வெளியிலே வேறு பணிகள் செய்கிற வாய்ப்பு இருக்கின்ற காரணத்தால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதைப்போல மனிதாபிமான அடிப்படையில் அவர்களுக்கு இது வழங்கப்படவில்லை; மனிதாபிமானத்தோடு அவர்கள் ஆற்றும் பணியைக் கருத்திற்கொண்டு ஊதியம் வழங்கப்படுகிறது.

**திருமதி பா. வளர்மதி:** தலைவரவர்களே, சத்துணவுக் கூடங்களில் பணியாளர்களை நியமிக்கும்போது விதவைகளுக்கு முன்னுரிமை வழங்க அரசு முன்வருமா? இந்தத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டபோது கட்டப்பட்ட சத்துணவுக் கூடங்கள் தற்போது பழுதடைந்து காணப்படுகின்றன. அவற்றை சரிசெய்கின்ற பணியை எந்தத் துறை மேற்கொள்ளவிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன்:** தலைவரவர்களே, சத்துணவுக் கூடங்களில் பணியாளர்களை நியமிக்கும்போது, விதவைகளுக்கு ஏற்கெனவே முன்னுரிமை வழங்கப்படுகிறது. விதவைகள் அந்தந்த ஊரில் இருந்தால் அவர்களுக்கு முதலிடம் தரப்படுகிறது. பழுதுபட்ட சத்துணவுக் கூடங்களைப்பற்றிக் கேட்டிருக்கிறார்கள். அதற்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை

என்றாலும் நகராட்சி, மாநகராட்சி சார்பில் நடைபெறும் சத்துணவுக் கூடங்களாக இருந்தால், அவற்றைப் பழுதுபார்க்கும் பணியை சம்பந்தப்பட்ட நகராட்சியும், மாநகராட்சியும் மேற்கொள்ளும். பள்ளி சத்துணவுக் கூடமாக இருந்தால் பள்ளி நிர்வாகம் அதை சரிபார்க்கும். அதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன.

**திருமதி இரா. சரோஜா:** தலைவரவர்களே, தமிழ்நாடு முழுவதும் எத்தனை சத்துணவுக் கூடங்கள் செயல்படுகின்றன என்ற விவரத்தை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன்:** தலைவரவர்களே, தனிக்கேள்வி போட்டால் விவரமான பதில் கிடைக்கும்.

**திரு. வி. பி. சிந்தன்:** தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதிலிலிருந்து ஒரு முக்கியமான பிரச்சனையை நான் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். நிரந்தரமான வேலை எங்கே இருந்தாலும் அங்கே பணியாற்றுகின்றவர்கள் நிரந்தரமாக்கப்பட வேண்டும் என்று சுப்ரீம் கோர்ட் தீர்ப்பு இருக்கிறது. ஐ.எல்.ஓ. மன்றத்தில் இந்திய அரசு இதை ஒப்புக்கொண்டிருக்கிறது. இந்த சத்துணவுத் திட்டம் ஒரு நிரந்தரமான திட்டமா, இல்லையா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்க வேண்டும். நிரந்தரமான திட்டம் என்றால், அந்தத் தொழிலாளர்கள் நிரந்தரமாக்கப்பட மாட்டார்கள் என்று அரசு சொல்வதற்குக் காரணம் என்ன என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன்:** தலைவரவர்களே, இந்தத் திட்டத்தைக் கொண்டுவரவேண்டுமென்று சொன்னபோது யார் யாரோ சந்தேகப்பட்டார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு இப்போதுதான் சந்தேகம் வந்திருக்கிறது. ஆரம்பிக்கப்பட்ட நாளிலிருந்து நிரந்தரமான நடவடிக்கையாகத்தான் இது நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. ஆகவே, நிரந்தரமாக நடைபெறும் என்பதில் ஐயப்பாடு இல்லை. ஆனால் அங்கே பணியாற்றுகின்றவர்கள் பகுதிநேர ஊழியர்கள் (பார்ட் டைம் ஓர்க்கர்ஸ்). ஆகவே, அவர்களை நிரந்தரமாக்க வழி இல்லை.



**திரு. கே. பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சத்துணவுக்கூடங்களில் வேலை செய்பவர்கள் ஒரு வேளை உணவை அங்கே உண்ணுகிறார்களா? அவர்கள் பகுதி நேர ஊழியர்கள் என்று அமைச்சர் அவர்கள் தெரிவிக்கிறார்கள். அவர்கள் இந்த வேலை நேரம் போக மீதி நேரத்திலே அவர்கள் வேறு வேலையைச் செய்யலாம் என்று சொல்லுகிறார்கள். ஆகவே, அந்தப் பணியாளர்கள் ஒரு வேளை உணவு உண்ணுவது உண்மையா? என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கே பணியாற்றுகிறவர்கள், முதலிலே சமைத்த அந்த உணவு எப்படி இருக்கிறது என்று உண்டுவிட்டுத் தான் குழந்தைகளுக்குப் போடுகிறார்கள். காரணம் அது ஒழுங்காக வெந்திருக்கிறதா அல்லது வேகவில்லையா என்பதை எல்லாம் அவர்கள் பார்க்க வேண்டும். அவர்கள் அதைப் பார்க்கிறார்கள். ருசியெல்லாம் அவர்கள் பார்க்கிறார்கள். பிறகு, குழந்தைகள் எல்லாம் சாப்பிட்ட பிறகு மீதி இருக்குமானால் அதை அவர்கள் சாப்பிடுகிறார்கள்.

**திரு. பொ. உத்திராபதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அமைப்பாளர்கள் அந்தந்த ஊரிலே இருப்பதாகச் சொல்லுகிறார்கள். அந்த அளவிற்குப் பெரும்பாலான இடங்களில் கிடையாது. நான் கேட்டுக் கொள்வது எல்லாம், இப்போது ஒரு குழந்தைக்கு, பருப்பு, அரிசி, எண்ணெய் நீங்கலாக 13 பைசாதான் வழங்கப்படுகிறது. இதிலே விறகு, மல்லி, மிளகாய் இன்னும் மற்றவற்றை எல்லாம் அவர்கள் வாங்க வேண்டும். இப்போது விறகு விலை ஏறிவிட்டது. 1-ஆம் தேதி முதல் மற்ற பொருள்களின் விலைகள் எல்லாம் அதிகமாக ஏறிவிடப்போகிறது. மற்றும் அமைப்பாளர்கள் எந்த ஊரிலே இருக்கிறார்களோ, அந்த ஊரிலேதான் அந்தப் பொருள்கள் இருக்க வேண்டும் என்று அமைச்சர் அவர்கள் உத்தரவு போட்டு இருப்பதாகச் சொல்லுகிறார்கள். எனவே, நான் கேட்டுக் கொள்வது, எங்கே சமைக்கிறார்களோ, அங்கே அந்தப் பொருள்கள் வைக்கப்படுமா? இதனால் பொதுமக்களிடம் சந்தேகம் வருகிறது. தற்போது உள்ள விலைவாசியை கணக்கில்

எடுத்துக்கொண்டு. இன்னும் 7 பைசா உயர்த்தி, 20 பைசாவாகத் தர அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன்:** பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது இந்த எரிபொருள்களுக்காகவும், மற்ற தானியம், காய்கறி போன்றவைகளுக்காகவும் வழங்கப்படுகிற பணம் இப்போது இருக்கின்ற விலைவாசிக்குப் போதுமானதாக இருக்கிறது என்று நம்முடைய சில கல்வி நிறுவனங்கள் கூட அதை ஆராய்ச்சி செய்து அவர்கள் அறிக்கை வெளியிட்டு இருக்கிறார்கள். அவினாசிலிங்கம் மகளிர் கல்லூரியைச் சேர்ந்தவர்கள்கூட இதுபற்றி ஒரு ஆய்வு நடத்தி, அவர்கள் ஒரு அறிக்கையை வெளியிட்டு இருக்கிறார்கள். ஆகவே, உறுப்பினர் அவர்கள் சொல்வது போன்ற பிரச்சனை எதுவும் எழவில்லை.

அதோடு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், வெளியூரிலே இருப்பவர்கள் எல்லாம் நியமிக்கப்படுகிறார்கள் என்று குறிப்பிட்டு இருக்கிறார்கள். சில கிராமங்களிலே எஸ்.எஸ்.எல்.சி. வரையிலும் படித்தவர்கள் கிடைக்காத காரணத்தால், அந்த இடங்களிலே வெளியூரைச் சேர்ந்த சிலரைப் போடக்கூடிய சூழ்நிலை ஏற்படுகிறது. ஆகவே, அப்படிப்பட்ட இடங்கள் ஒன்றிரண்டு இருக்கிறதே தவிர, எல்லா இடங்களிலும் அந்த நிலைமையில்லை.

**திரு. கு. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிறபோது, மனிதாபிமானத்தின் அடிப்படையிலே இது வழங்கப்படுகிறது என்று சொல்கிறார்கள். அதுபற்றி எங்களுக்கு மாறுபாடு இல்லை. ஆனால், குழந்தைகளுக்கு மனிதாபிமான அடிப் படையில் உணவை வழங்கிவிட்டு, அங்கே அமைப்பாளர்களாகவும், பணியாளர்களாகவும் வேலை செய்யும் தாய்மார்களுக்கு நியாயம் வழங்காமல் இருப்பது ஒரு கண்ணுக்கு வெண்ணெயும், மற்றொரு கண்ணுக்கு சுண்ணாம்பும் தடவுவதைப் போல் இருப்பதாக, அமைப்பாளர்களும், பணியாளர்களும் சொல்வது அரசுக்குத் தெரியுமா?



**மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இவர்கள் எப்படிப் பார்க்கிறார்களோ, அப்படித்தான் அவர்களுக்கு ஒரு கண்ணிலே வெண்ணெயும், மற்றொரு கண்ணிலே சுண்ணாம்பும் இருப்பதுபோலத் தெரியும். ஆனால், நாங்கள் பார்க்கிறபோது எல்லாக் கண்களும் ஒரே மாதிரியாகப் பார்ப்பதாகத்தான் தெரியும்.

**திரு. அ. ரகுமான்கான்:** மன்றத்தினுடைய தலைவர் அவர்களே, பாலசேவிகாக்கள், அமைப்பாளர்கள், ஆயாக்கள் சத்துணவுக் கூடங்களில் வேலை செய்கிறார்கள். அவர்களுடைய சம்பள விகிதம் என்ன? சட்டமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், மந்திரிகள் இவர்களுக்கு சம்பள உயர்வு கொடுக்கிறபோது, அவர்களுக்குப் பதவி நிரந்தரம் செய்தால் என்ன? இதற்கு ஓரளவு நிதியும் இருக்கிறது. கலெக்‌ஷன் மூலம் வருகிறது. ஒதுக்கீடு மூலம் வருகிறது. ஆகவே, அவர்கள் பதவியை நிரந்தரம் ஆக்குவதிலே, அரசுக்கும், அமைச்சருக்கும் என்ன சிக்கல் இருக்கிறது என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன்:** பேரவைத் தலைவர் அவர்களே, அவர்கள் எல்லாம் முழு நேரப் பணியாளர்கள் அல்ல. பகுதி நேர, பார்ட் டைம் ஒர்க்கர்ஸ்தான் என்று நான் ஏற்கனவே குறிப்பிட்டேன். அவர்கள் சில மணி நேரங்கள்தான் பணியாற்று கிறார்கள். எனவே அவர்களை நிரந்தரம் செய்யும் உத்தேசம் இல்லை. காலை 9 மணி முதல் 1 மணி வரையில்தான் அவர்கள் பணியாற்றுகிறார்கள். எனவே அவர்களை அரசு ஊழியர்களாக மாற்றி முழு நேர ஊதியம் கொடுப்பது என்பது முடியாது.

**திரு. க. பாலசுப்பிரமணியன்:** பேரவைத் தலைவர் அவர்களே, மகாகவி பாரதி தன்னுடைய உள்ளத்தை வெளிப்படுத்தும்போது, 'வயிற்றுக்கு சோறிட வேண்டும், இங்கு வாழும் மனிதருக்கு எல்லாம், பயிற்று பல கல்வி தந்து இந்தப் பாரை உயர்த்திட வேண்டும்' என்று சொன்ன அந்த பாரதிக்கு, சென்னை கடற்கரையிலே நாம் ஒரு சிலை வைத்து இருக்கிறோம். ஆகவே, உலகம் எல்லாம் பாராட்டுகிற, சத்துணவுத் திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிற புரட்சித் தலைவருக்கு பாரதி சிலைக்குப் பக்கத்திலே

[1985 ஏப்ரல் 1

ஒரு சிலை வைத்து, உலகத்தினுடைய சிறந்த மனிதாபிமானி என்று வெளிப்படுத்துவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9-20)

**மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய தமிழகத்தின் முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்களைப் பற்றி உங்களுக்குத் தெரியும். தன்னுடைய சிலையோ, தன்னுடைய பெயரோ எந்தத் திட்டத்திலும் வரக்கூடாது என்று நினைக்கின்ற தனிப் பெருந்தலைவர் நம்முடைய இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்கள். எனவேதான் வைக்கப்படுகின்ற சிலைகளாக இருந்தாலும், கட்டப்படுகின்ற கட்டடங்களாக இருந்தாலும், நாட்டுக்கு உழைத்த பெருந்தலைவர்களின் பெயர்களையும், சிலைகளையும் வைக்க வேண்டும் என்பதற்கு எடுத்துக் காட்டாகத்தான் பாரதியார், பாரதிதாசன் ஆகியோரின் பெயர்களை எல்லாம் இன்றைக்குச் சூட்டியிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**36—(*வினா எண். 34)—திரு. டி. ஆர். வேங்கடரமணன் :** மாண்புமிகு சத்துணவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

விறகு எரிபொருளைவிட எரிவாயு செலவு குறைவு என்பதால் சமையல் எரிவாயு (Gas) மூலம் சத்துணவு தயாரிக்க அரசு அனுமதி அளிக்குமா ?

**மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன் :** தமிழகத்தில் உள்ள 65,344 முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவு மையங்களில், 80 சத விகிதம் கிராமப்புறங்களில்தான் அமைந்துள்ளன. இந்தக் கிராமங்களில் சமையல் எரிவாயு கிடைக்க வாய்ப்பு இல்லை. சமையல் எரிவாயு கிடைக்கும் பெரிய ஊர்களில்கூட சமையல் எரிவாயு கிடைப்பதில் தாமதமும், தட்டுப்பாடும் நிலவி வருகின்றது. எனவே, சமையல் எரிவாயு மூலம் சத்துணவு தயாரிக்க அரசு திட்டமிடவில்லை. எனினும், கிராமப்புறங்களில் சாண எரிவாயு மூலம் சத்துணவு சமைக்க முடியுமா என்பது பற்றி அரசு ஆய்ந்து வருகிறது.



1985 ஏப்ரல் 1]

**37—(*வினா எண் 765)—திரு. இரா. தாமரைக்கனி :** மாண்புமிகு சத்துணவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

முதலமைச்சர் சத்துணவுத் திட்டத்தில் 70 குழந்தைகளுக்கு ஒரு மையம் என்றுள்ளதால், குழந்தைகள் நீண்ட தூரம் நடந்து சாப்பிடச் செல்வதைத் தடுக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை யாது ?

**மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன் :** ஒரு மையத்திற்கு குறைந்தது 70 பேர் என்றும், அதிகபட்சம் 150 பேர் என்றும் கொள்கை அளவில் இருந்தாலும் மலைப் பிரதேசம் அல்லது ஒதுக்குப்புற இடங்களில் உள்ள குழந்தைகள் வெகு தூரம் நடந்துவர இயலாமலிருக்கும் பட்சத்தில் குறைந்த எண்ணிக்கையாக இருந்தாலும், அந்தப் பிரதேசத்தில் உள்ளவர்களைத் தேர்ந்தெடுத்து ஒரு துணை மையம் ஏற்படுத்த ஆவன செய்யப்பட்டுள்ளது. அந்த துணை மையத்திற்கு, தூக்குக் கூலி ஆட்கள் மூலம் அருகாமையிலுள்ள மூல மையத்திலிருந்து உணவு அனுப்பவும் வழிவகை செய்யப்படுகிறது.

**திரு. டி. ஆர். வேங்கடரமணன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் பெருமான் தன்னுடைய விடையிலே கூறும்போது எரிவாயு கிடைப்பதில் தாமதம் இருக்கின்றது என்று சொன்னார்கள். இப்போது நிலைமை மாறி இரண்டாவது சிலிண்டர் கொடுக்கின்ற அளவுக்கு இன்றைக்கு சிலிண்டர்கள் அதிகமாக இருக்கின்றது. மேலும், கிராமப்புறங்களில் கூட இன்றைக்கு எரிவாயு கிடைக்கின்றது. நீங்கள்கூட ஏற்கெனவே குறிப்பிட்டீர்கள், அங்கே பணியாற்றுபவர்கள் பகுதி நேர ஊழியர்களாகத்தான் இருக்கிறார்கள் என்று. எனவே, அவர்களுடைய நேரத்தை மிச்சப்படுத்தும் வகையிலும், பண மிச்சத்தை ஏற்படுத்தும் வகையிலும், எரிவாயுத் திட்டத்தை மிக விரைவில் அமல்படுத்துவதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதையும், அதற்கு எவ்வளவு காலம் எடுத்துக் கொள்ளப்படும் என்பதையும் அறிய விரும்புகிறேன்.

[1985 ஏப்ரல் 1

**மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கிறபோதே சொன்னார்கள், இந்த எரிவாயு இப்போது சௌகரியமாகக் கிடைக்கிறது என்று. ஆகவே திடீரென்று அது மீண்டும் கிடைக்காத நிலைமை ஏற்பட்டுவிட்டால், சத்துணவுக் கூடங்களில் சமைப்பது ஸ்தம்பித்துவிடும். உணவு வினியோகம் என்பது எந்தக் காலத்திலும் தொடர்ந்து கிடைக்க வேண்டும் என்பதால் எரிவாயுவைப் பயன்படுத்துகின்ற திட்டம் இல்லை.

**திரு. சு. பாலன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கட்டப்பட்டிருக்கின்ற உணவு மையங்கள் மிக மோசமான நிலைமையில், சுகாதாரக்கேடான நிலைமையில் இருக்கின்றது என்பது அரசுக்குத் தெரியுமா? அங்கே சமையல் செய்பவர்களை உள்ளே போய்ப் பார்த்தால் ஒரே உடையை பல வாரங்களாகக் கட்டிக் கொண்டு வருகின்ற நிலைமையைப் பார்க்க முடிகிறது. எனவே சுகாதாரக்கேடான இந்த நிலைமையைப் போக்க, அவர்களுக்கு சீருடை வழங்கவேண்டும் அல்லது அவர்களுக்கு சலவைக்கான பணம் ஏதேனும் கொடுக்கப்படவேண்டும். இந்த வகையில் அரசு ஏற்பாடு செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சத்துணவுக் கூடங்களுடைய சுற்றுப்புற சுகாதாரத்தைக் கவனிக்க வேண்டும் என்ற வகையில், நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு, சுற்றுப்புறங்கள் சரியாக இல்லாத இடங்களில் சுகாதாரக் கேடுகள் ஏற்படாமல் இருப்பதற்கு வழிவகை செய்யப்பட்டிருக்கின்றது. அங்கே வருகின்ற பணியாளர்கள் அழுக்கான உடையைக் கட்டிக் கொண்டு வருகிறார்கள்; அவர்களுக்கு ஏதாவது வழிவகை செய்யப்படுமா என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டார்கள். கந்தையானாலும் கசக்கிக் கட்டு என்ற பழமொழியை அவர்களுக்கு நினைவூட்டலாம்.

**திரு. ந. சிவஞானம் :** தலைவர் அவர்களே, இந்த சத்துணவு மையங்களில் பரிட்சார்த்தமாக கோபார் காஸ் உபயோகிக்க அரசுக்கு உத்தேசமுண்டா?



1985 ஏப்ரல் 1]

**மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன் :** தலைவர் அவர்களே, சாண எரிவாயுவைப் பயன்படுத்தும் ஆய்வுதான் இப்போது நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

**திரு. ஏ. எஸ். ரவீந்திரன் :** தலைவர் அவர்களே, சத்துணவுத் திட்டத்தின்கீழ் பணியாற்றுகிறவர்களை நிரந்தர ஊழியர்களாக்குவது ஒருபுறம் இல்லாவிட்டாலும், அவர்களுடைய பணிக்கு பாதுகாப்பாவது கிடைக்குமா என அறிய விரும்புகிறேன். ஏனென்றால் குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தில் குறித்த இலக்கைக் கொண்டுவரவில்லை என்ற காரணத்தினால் அடிக்கடி, இந்தச் சத்துணவு மையங்களில் வேலைபார்ப்போர் ஸஸ்பெண்ட் செய்யப்படுகிறார்கள், அல்லது வேலைநீக்கம் செய்யப்படுகிறார்கள். எனவே அவர்களுக்கு பணிப்பாதுகாப்பு உத்தரவாதமாவது கிடைக்குமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன் :** தலைவர் அவர்களே, குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தில் நம்முடைய குழந்தைகள் மையங்களில் பணியாற்றுகிறவர்களைப் பயன்படுத்தக்கூடாது என்று அரசாங்கம் ஏற்கனவே அறிவித்திருக்கிறது. ஆனால் அங்கே வருகிற குழந்தைகளை தூக்கிக்கொண்டு வருகிற தாய்மார்களிடம் குடும்ப நலத் திட்டத்தின் சிறப்புகள் பற்றி எடுத்துச் சொல்ல வழிவகை செய்யப்பட்டிருக்கிறது. ஆகவே அவர்கள் வேறுவழியில் பழிவாங்கப்படவில்லை. இதுவரை அவர்கள் பணியாற்றிக் கொண்டுதானிருக்கிறார்கள். அப்படி ஏதாவது ஒருசில இடங்களில் பழிவாங்கப்படுகிறது என்றிருந்தால், அதை அரசின் கவனத்திற்குக் கொண்டுவந்தால் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

**திரு. இரா. தாமரைக்கனி :** தலைவர் அவர்களே, இப்போது சத்துணவு மையங்கள் எல்லாம் ஒரு பஞ்சாயத்துக்கு ஒரு மையம்தான் இருக்கிறது. பல கிராமங்களில் இரண்டு வயதுக் குழந்தைகள், நான்கு வயதுக் குழந்தைகள் எல்லாம் ஒரு கிலோ மீட்டர், 2 கிலோமீட்டர்கள் வரை நடந்து வந்து, சத்துணவு மையத்திற்கு நடந்து வந்து, சாப்பாடு வாங்க வேண்டிய நிலை இருக்கிறது. தாய்மார்கள்கூட வயல்வெளிகளுக்கு வேலைக்குப் போவதை நிறுத்திவிட்டு, அந்தக் குழந்தைகளை கூப்பிட்டுக்

கொண்டு வரவேண்டிய ஒரு சூழ்நிலை உள்ளது. வயதானவர்கள்கூட சில நேரங்களில் மெயின் சென்டருக்கு வர சிரமப்படுகிறார்கள். ஆகவே இந்த சிரமத்தைக் குறைக்கும் வண்ணம் கிராமம் ஒன்றுக்கு ஒரு சத்துணவு மையம் என்று ஆரம்பிக்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன் :** தலைவர் அவர்களே, ஒரு மையம் துவங்க வேண்டுமென்றால், குறைந்தபட்சம் 70 பேர்கள் இருக்க வேண்டும். அப்படி 70 பேர்கள் இல்லாது அவர்கள் நீண்ட தூரம் நடந்து வரவேண்டிய ஒரு நிலைமை இருக்குமானால், குழந்தைகள் நல மையம் பொறுத்தவரையில், மூல மையத்தோடு இணைத்து ஒரு துணை மையமாக ஏற்படுத்த வழிவகைகள் செய்யப்பட்டிருக்கின்றன. அந்த முறையில் இன்று பலயிடங்களில் துணை மையங்கள் துவங்கப்பட்டிருக்கின்றன. அப்படி ஏதாவது இருக்குமானால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்தால் அவைகளை ஏற்படுத்துவதற்கு வாய்ப்பாக அமையும்.

**திரு. இரா. தாமரைக்கனி :** தலைவர் அவர்களே, நிறையக் கிராமங்களில் சத்துணவுக் கூடங்கள் வாடகைக் கட்டடங்களில் இருக்கின்றன. ஆகவே நிரந்தரக் கட்டடங்கள் கட்டுவதற்கு அரசு ஆவன செய்யுமா? இந்த ஆண்டு எத்தனை கட்டடங்கள் கட்ட இருக்கிறது?

**மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன் :** தலைவர் அவர்களே, படிப்படியாக ஒவ்வொரு சத்துணவுக் கூடத்திற்கும் சொந்தக் கட்டடம் கட்டிக்கொண்டு வருகிறோம். ஆகவே விரைவில் ஒவ்வொரு சத்துணவுக்கூடமும் தனக்கு என்று சொந்தக் கட்டிடம் பெறுகிற வாய்ப்பைப் பெறும்.

**திரு. ந. சிவஞானம் :** தலைவர் அவர்களே, சத்துணவுக் கூடங்கள் கட்டுவது தேசிய ஊரக வளர்ச்சித் திட்டத்தில் எடுத்துக்கொள்ளப்படுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன் :** தலைவர் அவர்களே, தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்திலும் சத்துணவுக் கூடங்கள் கட்டப்படுகின்றன.





**டாக்டர் கே. சமரசம் :** தலைவர் அவர்களே, கிராம சத்துணவு மையங்களுக்கு பெண்களைக் கொண்ட கண்காணிப்புக் குழு அல்லது ஆலோசனைக் குழு அமைத்தும், கல்விக்கூடங்களில் உள்ள சத்துணவு மையங்களுக்கு கண்காணிப்புக் குழு அமைத்தும், மாவட்ட அளவில் கிராமம், ஒன்றியம், மாவட்ட அளவில் இப்படிப்பட்ட சத்துணவுத் திட்டங்கள் அமைத்து செயல்படுத்தி, சீராக்குவதற்கு தக்க நடவடிக்கைகளை மேற்கொள்ள அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன் :** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு நல்ல யோசனையை வழங்கியிருக்கிறார்கள். சத்துணவு மையம் செம்மையாக நடைபெறுவதற்கு குழுக்கள் அமைக்க வேண்டுமென்று ஒரு குறிப்பு பரிசீலனையில் இருந்துவருகிறது. நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் யோசனையையும் அதில் சேர்த்து விரைவில் அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ள ஏதுவாக இருக்கும்.

**திரு. கே. அன்பழகன் :** தலைவர் அவர்களே, சத்துணவு மையங்களில் ஐந்து நாட்களுக்கு தொடர்ந்து காய்கறிகள் ஒட்டு மொத்தமாகக் கொடுப்பதால் காய்கறிகள் அழுகிவிடுகின்றன. ஆகவே, இரண்டு நாட்களுக்கு ஒருமுறை காய்கறிகள் வழங்குகிற முறையைக் கொண்டுவருவதற்கு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா?

(முற்பகல் 9-30)

**மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தினசரி காய்கறிகளை வாங்க வேண்டுமென்று நாங்கள் சொல்லியிருக்கிறோம். அங்கே அவர்கள் 5 நாட்களுக்கு ஒரு முறை வாங்கினால், அதை அரசின் கவனத்திற்கு கொண்டுவந்தால், அரசு அதன்மீது நடவடிக்கை எடுக்கும்.

**திரு. ஆர். செங்காளியப்பன் :** தலைவர் அவர்களே, சத்துணவு மையங்களில் அளிக்கப்படுகின்ற அரிசியானது இரண்டு தடவை வேகவைத்து அதைக் கொடுக்கிறார்கள். அந்த அரிசியானது பழுப்பு நிறமாக இருக்கிறது. அதை வேக வைக்கும்போது அதிலே வாடை வருகிறது. சுமார் ஒரு மணி நேரத்திற்கு

வெந்தால்தான், அந்த அரிசி சாப்பிடக் கூடிய நிலைக்கு வருகிறது. ஆகவே, அப்படிப்பட்ட அரிசியை கொடுப்பதினால் சத்துணவு என்று சொல்வதில் பொருள் இல்லை. எனவே, நல்ல அரிசியை, எல்லா மக்களும் உண்ணக்கூடிய வெள்ளையான, தூய்மையான அரிசியை இந்த மதிய உணவுக்கூடங்களில் அளிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பழுப்பு நிற அரிசி என்பது சத்துள்ள அரிசி. மாடர்ன் ரைஸ் மில்களில் அதை அரைக்கிற போது, அப்படித்தான் அதன் நிறம் இருக்கிறது. அந்த அரிசியை நல்லது என்று எல்லோரும் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, வெள்ளை அரிசிதான் நல்ல அரிசி என்று எண்ணிவிட வேண்டாம். தற்போது கொடுக்கப்படுகின்ற அரிசி நல்ல அரிசி என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. ப. பொன்னுரங்கம்:** பேரவைத் தலைவர் அவர்களே, சத்துணவுக்கூடங்களை பழுது பார்ப்பதற்கு, அவைகள் முனிசி பாலிடிகள், கார்ப்பரேஷன்கள் ஆகியவற்றின் பொறுப்பில் விடப் பட்டிருப்பதாகச் சொல்லுகிறார்கள். ஆனால், தனியார் பள்ளிக் கூடங்கள் ஆனாலும், அரசு பள்ளிக்கூடங்கள் ஆனாலும் அவற் றைப் பராமரிப்பதற்கு 4 சதவீதம் கிராண்ட் கொடுப்பதாக எனக்கு ஞாபகம். அந்தக் கட்டிடங்களைப் பராமரிப்பதற்குக் கூடுதல் செலவாகும். ஆகவே, இந்த சத்துணவு மையங்களின் கட்டிடங்களைப் பராமரிப்பதற்கு, அந்த சத்துணவு இலாகாவி லிருந்து கிராண்ட் அந்தப் பள்ளிகளுக்கு செல்லுகிறதா? அதன் மூலமாக அந்தப் பள்ளிக் கட்டிடங்கள் பழுது பார்க்கப்படு கின்றனவா? இல்லையானால், இனிமேலாவது அந்த சத்துணவுக் கூட கட்டிடங்களுக்கு, கல்வி நிறுவனங்களுக்கு 4 சதவிகிதம் மெயின்டனன்ஸ் கிராண்ட் தரப்படுவதுபோல், இந்த சத்துணவுக் கூட கட்டிடங்களைப் பராமரிப்பதற்கும் கூடுதலான மானியம் வழங்க அரசு உத்தேசித்துள்ளது என்று அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது கிராமங்களில் உள்ள சத்துணவுக் கூடங்கள் அந்தந்த ஊராட்சி ஒன்றியங்களினால் பராமரிக்கப்பட்டு வருகின்றன. முனிசிபாலிடிகள், நகரசபைகள் என்றால், அங்குள்ள முனிசிபாலிடிகளும், நகரசபைகளும் அவை களைப் பராமரிக்கின்றன. பள்ளிக்கூடங்களில் சத்துணவுக் கூடங்கள் அமைப்பதற்கான இட வசதி இருக்குமானால், அந்த இடத்தை நாங்கள் பயன்படுத்திக்கொண்டு வருகிறோம். அவற்றைப் பராமரிக்கும் பொறுப்பு டெபுடி இன்ஸ்பெக்டர் ஆஃப் ஸ்கூல்-சிடம் வழங்கப்பட்டிருக்கிறது. அவர்கள் அந்தப் பணி யைச் செய்துகொண்டிருக்கிறார்கள்.

**திரு. ப. ந. இராமச்சந்திரன்:** பேரவைத் தலைவர் அவர்களே, கிராமங்களில் சத்துணவு மைய அமைப்பாளர்கள் எரிவாயுவைச் சமையலுக்கு பயன்படுத்திட மாவட்டத் தலைநகரங்களுக்குச் சென்று எரிவாயுவை எடுத்துச் செல்ல அனுமதி வழங்கும் ஒரு திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா என்று அறிய விரும்பு கிறேன்?

**மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எரிவாயுவைப் பயன்படுத்தும் யோசனை இல்லை.

**திரு. அ. பாலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர் களே, சத்துணவுத் துணை மையம் ஆரம்பிக்க உத்தரவு பிறப் பித்ததாக அமைச்சர் அவர்கள் கூறினார்கள். ஆனால், இப் போது துணை மையம் ஆரம்பித்து, அங்கு சத்துணவு வழங்கப் படாமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா? அப்படியிருந்தால், உடனே அந்தத் துணை மையத்தில் சத்துணவு வழங்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சத்துணவுத் துணை மையம் ஆரம்பித்தும், அது இயங்காமல் இருக்கின்றது என்று சொன்னார்கள். எந்த மையம், எங்கே, எப்போது ஆரம்பிக்கப்பட்டது? எத்தனை நாள் இயங்காமல் இருக்கின்றது என்ற விவரத்தைச் சொல்வார்களானால், அதன் மீது நடவடிக்கை மேற்கொள்ளலாம்.

[1985 ஏப்ரல் 1

**திரு. தி. அன்பழகன்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சத்துணவு மையங்களில் கழுவப்பட்ட அரிசிநீர், வடிக்கின்ற கஞ்சி போன்றவைகள், மாதம் ஒன்றுக்கு 50 ரூபாய்க்கு விற்கப்படுவது அரசுக்குத் தெரியுமா? அது சம்பந்தமாக ஏதாவது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதா? சத்துணவு மையங்களில் 2-லிருந்து 4 வயதுவரை, 5-லிருந்து 9 வயதுவரை, 6-லிருந்து 8, 9-லிருந்து 10 வகுப்புகளில் படிக்கும் பள்ளி மாணவர்களுக்கும், ஓய்வூதியம் பெறுகின்றவர்களுக்கும் என்னென்ன தரப்படுகின்றன என்பதை அறிவிக்க இயலுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கே வடிக்கப்படுகிற கஞ்சி, அரிசியைக் கழுவுகின்ற கழிவுநீர் போன்றவை எல்லாம் விற்கப்படுகின்றன என்ற புது செய்தியை மாண்புமிகு உறுப்பினர் வழங்கி இருக்கிறார்கள். அப்படி விற்கப்படுவதை அவர்களே மனுமூலம் எழுதி அனுப்பினால், நாம் அதன்மீது நடவடிக்கை மேற்கொள்ளலாம்.

தற்போது எந்த அளவு உணவு வழங்கப்படுகிறது என்று கேட்டிருக்கிறார்கள். 2 முதல் 4 வயது வரை உள்ள குழந்தைகளுக்கு அரிசி 80 கிராம், பருப்பு 10 கிராம், எண்ணெய் 3 கிராம், காய்கறி மற்றும் தாளிதம் 50 கிராம்; 5 முதல் 9 வயது வரை உள்ள குழந்தைகளுக்கு அரிசி 100 கிராம், பருப்பு 15 கிராம், எண்ணெய் 3 கிராம், காய்கறி மற்றும் தாளிதம் 50 கிராம்; அதற்குப் பிறகு 10 முதல் 14 வயது வரை உள்ள பள்ளி செல்லும் மாணவர்களுக்கு அரிசி 100 கிராம், பருப்பு 15 கிராம், எண்ணெய் 3 கிராம், காய்கறி மற்றும் தாளிதம் 50 கிராம் வழங்கப்படுகிறது. 9 வது படிக்கிற மாணவர்களுக்கு 120 கிராம் அரிசியும், 15 கிராம் பருப்பும், 3 கிராம் எண்ணெயும், 50 கிராம் தாளிதமும், காய்கறிகளும் வழங்கப்படுகின்றன. முதியோர்களுக்கு இப்பொழுது நாம் வழங்குகின்ற அளவுகள் 200 கிராம் அரிசி, 15 கிராம் பருப்பு, 3 கிராம் எண்ணெய், 50 கிராம் தாளிதமும் மற்றப்பொருள்களும்.



1985 ஏப்ரல் 1]

**திரு. ஏ. தங்கராசு**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சத்துணவு மையங்கள், கிராமப் பகுதிகளில் பாலவாடி கட்டிடங்களில் தனியாகவும் பள்ளியில் நடைபெறுகின்ற மதிய உணவுக் கூடங்கள் தனியாகவும் நடைபெறுகின்றன. கிராமப் பகுதிகளில் ஓராசிரியர், இரண்டாசிரியர்கள் இருக்கிற பள்ளிகளில் மாணவர்கள் வருகை கம்மியாகத்தானிருக்கிறது. அதே அடிப்படையில் பாலவாடி நடக்கிற இடங்களிலும் மாணவர்கள் வருகை கம்மியாகத்தான் இருக்கிறது. ஆகவே, இரண்டு பகுதிகளிலும் வருகை ஏட்டைப் பார்க்கிறபொழுது, நிரந்தரமான மாணவர்கள் வருவதாக பூர்த்தி செய்து விடுகிறார்கள். ஆகவே, நான் அறிய விரும்புவது இப்படிப்பட்ட இடங்களில் இரண்டையும் ஒன்றாகச் சேர்த்து, அரசுக்குச் சிக்கனம் கருதி, அதை நடைமுறைப்படுத்த, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இரண்டையும் சேர்த்து, அந்தச் சத்துணவு மையங்களை ஒன்றாக இணைத்து நடத்துவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2 வயது முதல் 4 வயது வரை உள்ள குழந்தைகளுக்கு நடத்தப்படுவது குழந்தைகள் மையம். அதற்கு மேல் பள்ளி செல்லும் குழந்தைகளுக்காக நடத்தப்படுவது பள்ளிகளில் உள்ள மையம். இந்த இரண்டையும் ஒன்றாக இணைப்பது என்பது முடியாத காரியம். காரணம், தாயினுடைய அரவணைப்பிலே உணவருந்த வேண்டிய பருவத்தில் உள்ளது 2 வயது முதல் 4 வயது வரை உள்ள குழந்தைகள். அதற்கு மேலான வயதிலுள்ள குழந்தைகள் ஆசிரியர்களுடைய அரவணைப்பிலே உணவு அருந்த வேண்டிய பருவத்திலுள்ளவர்கள். எனவே, இரண்டையும் ஒன்றாக இணைக்க முடியாது.

### சைதை பகுதியில் குடிசை மாற்றுப் பணிகள்.

38—(*வினா எண் 918) **திரு. சா. துரைசாமி**: மாண்புமிகு வீட்டுவசதித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 147-வது வட்டம் காமராஜபுரம், ஜந்து பர்லாங்ரோடு, குடிசை, சைதை 146-வது வட்டம் செட்டி தோட்டம், வினாயகாபுரம், நாகிரெட்டி தோட்டம், சாமியார் தோட்டம், பார்த்தசாரதி

மண்டபம், 138-ஆவது வட்டம் தரியா நகர், 139-வது வட்டம் ஜோதியம்மாள் நகர் போன்ற பகுதிகளில் உள்ள குடிசைப் பகுதிகளை குடிசை மாற்று வாரியம் மூலம், அபிவிருத்தி செய்யும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், நடப்பு ஆண்டில் இப்பணிகள் துவக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. என். நல்லுசாமி:** (அ) 147-வது வட்டம் காமராஜபுரத்தில் அட்கோ நிதி உதவியுடன் விரைவுபடுத்தப்பட்ட திட்டத்தின்கீழ் அபிவிருத்திப் பணிகள் செய்வது குறித்த குடிசைப்பகுதி மாற்று வாரியத் திட்டம், அட்கோவின் பரிசீலனையில் உள்ளது. மற்றப் பகுதிகளில் திட்டப்பரிசீலனை தற்போது இல்லை.

(ஆ) 1985-86-ல் காமராஜபுரத்தில் பணிகளைத் துவக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது.

**திரு. சா. துரைசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீண்டகால கோரிக்கையான காமராஜபுரம் குடிசைப் பகுதியை அட்கோ திட்டத்தின்கீழ் எடுத்துக் கொண்டதற்கு நன்றி. ஆனால், மற்ற குடிசைப் பகுதிகளாக இருக்கிற ஐந்து பர்லாங்ரோடு, செட்டித்தோட்டம், விநாயகாபுரம், நாகிரெட்டித் தோட்டம், சாமியார்தோட்டம், பார்த்தசாரதி மண்டபம், சூரியா நகர், ஜோதியம்மாள் நகர் போன்ற பகுதிகள் எல்லாம் ஆற்றோரப் பகுதிகளிலே அமைந்திருக்கின்றன. அப்படி ஆற்றோரப் பகுதிகளிலே அமைந்திருக்கிற குடிசைப் பகுதிகளைச் சீரமைக்க எம்.எம்.டி.ஏ. அனுமதிக்கவில்லையென்று அதிகாரிகள் கூறுகிறார்கள். இப்பொழுது ரூ. 1 கோடியே 30 இலட்சம் மதிப்பீட்டில் அடையாறு கரையோரப் பகுதிகளைச் சீரமைக்கும் திட்டம் பொதுப்பணித் துறையால் எடுக்கப்பட்டிருக்கிறது. இந்தத் திட்டம் நிறைவேறுகிறபொழுது இந்தக் குடிசைப் பகுதிகளை மேம்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு திரு. என் நல்லுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் கேள்வியில் எட்டு பகுதிகளைக் குறித்துக் கேள்விகள் கேட்டுள்ளார்கள். அதிலே, காமராஜபுரத்தைத் தவிர ஐந்து பர்லாங்கு ரோடு பகுதியில் சாலை அபிவிருத்திக்கு இடையூராக இருக்கிற காரணத்தால், அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளப்படவில்லை. செட்டித்தோட்டம் பகுதி ஆற்றங்கரை ஓரத்தில் அமைந்திருக்கிற காரணத்தினால், நீர் தேங்கும் தாழ்வான இடமாக இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னபொழுது அதற்கான தடையும் மற்ற ஏற்பாடுகளும் செய்திருக்கிற காரணத்தினால் பரிசீலனை செய்யவேண்டுமென்று கேட்டுக் கொண்டார்கள். அதற்கென்று ஒரு குழு இருக்கிறது. அந்தக் குழுவின் முடிவு தெரிந்ததற்குப் பிறகு, செட்டித்தோட்டம் பகுதி நிலையை அரசு பரிசீலனை

(முற்பகல் 9-40)

செய்யும். நாகிரெட்டித் தோட்டத்தினைப் பொறுத்தவரை இங் நிறுவனத்திற்குச் சொந்தமான இடமாக இருக்கிற காரணத்தால் அந்த இடம், அபிவிருத்தி வேலைகளை நிறைவேற்றுவதற்காக அரசுக்கு வந்ததற்குப் பிறகு அந்தப் பணி தொடங்கப்படும். சாமியார் தோட்டத்தில் உள்ள அந்த நிலம் தனியாருடையது. அதில் அபிவிருத்திப் பணிகள் செய்யப்படுவதற்கில்லை. பார்த்தசாரதி மண்டபத்தைப் பொறுத்தவரை, அந்த நிலம் சிட்கோ நிறுவனத்திற்குச் சொந்தமானதாக இருக்கிறது. அதைக் கையகப்படுத்துவதற்கான முயற்சிகளை அரசு எடுக்கும். அந்த நிலம் கையகப்படுத்தப்பட்டுவிட்டால், அபிவிருத்திப் பணிகளை துவங்க அரசு முயலும். சூரியா நகரைப் பொறுத்தவரை, அது ஏற்கெனவே நீர்த்தேக்கம் நிறைந்த தாழ்வான பகுதியாக உள்ளதால் அபிவிருத்திப் பணிகளைச் செய்ய இயலாத சூழ்நிலையில் இருக்கிறது. ஜோதி அம்மாள் நகரைப் பொறுத்தவரை, சென்னை காஸ்மா சங்கத்திற்குச் சொந்தமானது. அந்த இடமும் வெள்ளத்தால் பாதிக்கப்படும் குடிசைப்பகுதியாக இருப்பதால், அந்த இடத்தையும் அபிவிருத்திப் பணிகளுக்கு ஈடுபடுத்த முடியாத ஒரு சூழ்நிலை இருக்கிறது.

[1985 ஏப்ரல் 1

**திரு. சா. துரைசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காமராஜபுரம் திட்ட மதிப்பீடு என்ன? எத்தனை குடும்பங்களுக்கு அந்த வசதிகள் செய்து தரப்படுகின்றன என்கிற விவரமும், அதிகாரிகள் சில புள்ளி விவரங்களைக் கொடுத்து அந்தக் குடிசைப் பகுதிகளையெல்லாம் மேம்படுத்த முடியாது என்று சொல்லியிருக்கிறார்கள். ஏறத்தாழ 40, 50 ஆண்டுகளாக அந்த இடத்திலே வாழ்ந்துகொண்டிருக்கிற அந்த குடிசைவாசிகளுக்கு வேறு என்ன மாற்றுத் திட்டத்தை நாம் செய்யப்போகிறோம். அவர்களுக்கு இந்தத் திட்டத்தின் கீழ் செய்ய இயலாது என்று சொன்னால், அவர்கள் தங்கள் வாழ்நாள் முழுவதும் அப்படியேதான் துன்பப்படவேண்டுமா என்பதுதான் என்னுடைய கேள்வி. ஆகவே அந்தப் பிரச்னைகளுக்கு ஒரு பரிகாரம் காண அல்லது அவர்களுக்கு வேறு என்ன ஏற்பாடு செய்யலாம் என்பதற்கு திட்டம் ஏதாவது அரசின் செயற் குறிப்பில் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என். நல்லுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காமராஜபுரத்தை பொறுத்தவரையில் ரூ. 3.02 லட்சம் செலவில் அபிவிருத்திப் பணிகள் உறட்கோ நிறுவனத்தின் உதவியுடன் செய்வதற்காக இருக்கிறது. இதன் மூலம் பயன் அடையப் போகும் குடும்பங்கள் 200. மாண்புமிகு உறுப்பினர் சைதை துரைசாமி அவர்கள் ஆற்றங்கரை ஓரங்களின் பகுதியிலேயிருக்கிற குடிசைவாசிகளுக்கு மாற்றுத் திட்டம் கிடைக்காத சூழ்நிலை இருக்கிறதே, அவர்களுக்கு மாற்று ஏற்பாடு என்னதான் இருக்கிறது என்ற அடிப்படையிலே கேட்டிருக்கிறார்கள். அதற்கு நான் ஏற்கனவே சொன்னது போல, இந்த அரசு குடிசைகளைப் பொறுத்தவரையில், அன்போடு உதவுகிற அரசாகத்தான் இருந்துக் கொண்டிருக்கிறது. அவர்களுக்கு மாற்றுத் திட்டம் தருகிற ஒரு சூழ்நிலை வந்தால் அவசியம் மாற்று இடம் தந்து, அவர்களுக்கு அதில் எல்லா வசதிகளும் செய்து தரப்படும். அப்படி கொடுக்க முடியாத சூழ்நிலையில் அவர்கள் தாங்கள் வாழுகின்ற அந்த இடத்தையே விரும்புகின்ற சூழ்நிலை இருப்பதால், அந்த இடமே மேம்பாடு செய்து தரப்படுமா என்ற எண்ணத்தை மனத்திலே வைத்துத்தான் மாண்புமிகு உறுப்பினர் கேட்கிறார்கள். அதற்குத்தான் நான் ஏற்கனவே சொன்னதைப் போல



1985 ஏப்ரல் 1]

டெக்னிக்கல் அட்வைசரி கமிட்டி இருக்கிறது. அதன்மூலம் மீண்டும் ஒரு முறை பார்த்து, அந்த இடம் தகுதியுள்ள இடமாக இருந்தால், அந்தப் பகுதியிலேயே நம்முடைய மேம்பாட்டுத் திட்டங்களை நிறைவேற்றலாம்.

**திரு. கே. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை நகரில் வேலை செய்வதற்காக வெளி இடங்களிலிருந்து வருகிறவர்களால்தான் குடிசைப் பகுதி அதிகரித்துக் கொண்டே போகிறது. அதனைக் கட்டுப்படுத்துவதற்கு அரசு என்ன நடவடிக்கையை எடுக்க உள்ளது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என். நல்லுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொன்ன கருத்து உண்மையிலேயே வரவேற்கத்தக்க கருத்தாகும். குடிசைப் பகுதியினுடைய நிலையை உயர்த்தினால்தான் நம்முடைய சென்னை நகரத்தில் இருக்கிற கொசுப் பிரச்னை தீரும். அந்த அடிப்படையில்தான் ஆங்காங்கு திடீர் என்று யாராவது குடிசைகளைப் போட்டால், அதை அகற்ற வேண்டும் என்கிற நடவடிக்கையை நம்முடைய துறையும் எடுத்திருக்கிறது.

**திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, சென்னை நகரத்தில் பல பகுதிகளில் தனியார் நிலங்களில் 15, 20 வருடங்களாக குடிசை போட்டுக்கொண்டு வாழக்கூடிய மக்களை திடீர் என்று காலி செய்யச் சொல்லி உத்தரவும் போடப்பட்டிருக்கிறதே, அப்படி காலி செய்கின்ற மக்களுக்கு குடிசைகளை வேறு இடத்தில் அமைத்துக் கொடுக்க அரசு ஏதாவது திட்டம் வைத்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என். நல்லுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்தப் பகுதி என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லவில்லை. பொதுவாக நீண்ட நாட்களாக இருந்து ஏற்கனவே பலமுறை காலி செய்த பகுதியாக இருந்தால், அவர்களுக்கு மாற்று இடங்கள் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றன. ஆனால் திடீர் என்று யாராவது வந்து ஆக்கிரமிப்பு செய்து குடிசை போட்டுக் கொண்டிருந்தால் அவர்களுக்கு உதவுகிற சூழ்நிலையில் அரசு இல்லை.

**திரு. வி. தங்கவேலு:** பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை நகரில் புளியந்தோப்பு என்று சொல்லக்கூடிய குடிசைவாசிகள் அதிகம் வாழக் கூடிய இடத்தில் அரசு வீடுகள் கட்டுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என். நல்லுசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, தனிக் கேள்வி போடவும்.

**திரு. கூடலூர் இ. வி. வேலு:** பேரவைத் தலைவர் அவர்களே, குடிசைமாற்று வாரியத்தின் மூலமாகவும், வீட்டுவசதி வாரியத்தின் மூலமாகவும் நகரங்களில், மாநகரங்களில் வீடுகள் கட்டி வாடகைக்கு விடப்படுகின்றன. கிராமங்களில் இந்தத் திட்டம் விரிவுப்படுத்தி, கட்டிடங்கள் கட்டி வாடகைக்கு விடுவது என்ற திட்டம் அரசுக்கு இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என். நல்லுசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய குடிசை மாற்று வாரியத்தை பொறுத்த வரையில் சென்னையில் 1970-ஆம் ஆண்டு துவங்கப்பட்டு, அதற்கு பிறகு 1983-84-ம் ஆண்டிலிருந்து சென்னையைத் தவிர மற்ற நகரங்களான மதுரை, ஈரோடு, கோயம்புத்தூர், கும்பகோணம் போன்ற நகரங்களுக்கு எல்லாம் குடிசை மாற்று வாரியத்தினுடைய திட்டங்கள் நடைமுறையில் அறிமுகப்படுத்தப்பட்டு இருக்கின்றன. வீட்டு வசதி வாரிய துறையைப் பொறுத்த வரையில், தமிழகம் எங்கும் பல்வேறு நகரங்களில் வீடுகள் கொடுக்கின்ற திட்டங்கள், நிலம் கொடுக்கின்ற திட்டங்கள் ஏற்கனவே உள்ளன.

**திரு. டி. ஆர். வேங்கடரமணன்:** பேரவைத் தலைவர் அவர்களே, குடிசைகள் பெருகுவதைத் தடுக்க வேண்டும் என்ற கருத்து இந்த அவையிலே எல்லோருக்கும் இருக்கிறது. குடிசைகள் பெருகுவதற்கு காரணம், பணியாளர்கள், வேலைக்காரர்கள் அந்த காலனிக்கு அருகிலே குடிசைகள் போடுவதால், புதிய காலனிகளை ஏற்படுத்தும்போது ஒரு குறிப்பிட்ட பகுதிகளுக்கு, சர்வண்ட்ஸ் குவார்ட்டர்ஸ் என்று தனியாக இடம் ஒதுக்குவதை இந்த அரசு பரிசீலிக்குமா என்று நான் அறிய விரும்புகிறேன்.





**மாண்புமிகு திரு. என். நல்லுசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொன்ன கருத்து, ஏற்கனவே அரசின் பரிசீலனையில் இருக்கிறது.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** பேரவைத் தலைவர் அவர்களே, குடிசை மாற்று வாரியம் அதிகாரப்பூர்வமாக சிலருக்கு வீடுகள் வழங்கி அவர்கள் பணமும் கட்டிய பிறகு அந்த வீடுகளில் பலாத்காரமாக சிலர் குடியேறுகிறார்கள். அவர்களை மாற்றிக் கொடுக்க வேண்டுமென்று, குடிசை மாற்று நிர்வாகத்திடம் மனுக்கள் கொடுத்து வேண்டிக்கொண்டாலும், அந்த நிர்வாகம் அவர்களை வெளியேற்றி, அதிகாரப்பூர்வமாக ஒதுக்கப்பட்டவர்களுக்கு வீடுகளை எடுத்து கொடுக்காமல் இருக்கிறதே, அந்த வீடுகளை அவர்களுக்கு எடுத்து கொடுப்பதற்கு அரசு என்ன நடவடிக்கை எடுக்க இருக்கிறது?

**மாண்புமிகு திரு. என். நல்லுசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, குடிசை மாற்று வாரியத்தைப் பொறுத்தவரையில், அதிகாரப் பூர்வமாகத்தான் வீடுகள் கொடுக்கப்படுகின்ற வழக்கம். அதிகாரப்பூர்வம் அல்லாத முறையில் யாருக்கும் கொடுத்து வழக்கம் இல்லை. எங்காவது அதிகாரப்பூர்வமாக பெற்றவர்களுக்கு தொல்லைகள் இருந்தால் யார் யார் அப்படிப் பட்டத் தொல்லைகளில் இருக்கிறார்களோ அவர்களுக்கு அரசு நிச்சயம் உதவும்.

### கோபிச்செட்டிபாளையத்தில் வீட்டு வசதித் திட்டங்கள்.

39—(* வினா எண் 1048) **திரு. கு. அ. செங்கோட்டையன்:** மாண்புமிகு வீட்டு வசதித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பெரியார் மாவட்டம், கோபிச்செட்டிபாளையத்தில் வீட்டு வசதி வாரியத்தின் மூலமாக வீடுகள் கட்டும் திட்டத்தை மேலும் விரிவுபடுத்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**மாண்புமிகு திரு. என். நல்லுசாமி:** ஆம். 1985—86 நிதி ஆண்டில் "குறைந்த வருவாய்ப் பிரிவினருக்கான" வீட்டுவசதி திட்டத்தின்கீழ் ரூ. 15.41 லட்சம் மதிப்பீட்டில் 98 குடியிருப்பு

களும், "உயர் வருவாய்ப் பிரிவினருக்கான" வீட்டுவசதி திட்டத்தின்கீழ் ரூ. 11.74 லட்சம் மதிப்பீட்டில் 14 குடியிருப்பு களும் கட்ட திட்டமிடப்பட்டுள்ளது.

**திரு. கு. அ. செங்கோட்டையன்:** பேரவைத் தலைவர் அவர்களே, கோபிச்செட்டிபாளையத்தில் கட்டப்படுகின்ற வீடுகள் மிகக் குறைவாக இருக்கின்றன. இது பெரியார் மாவட் டத்தின் இரண்டாவது பெரிய நகரமாக இருப்பதால், அந்த நகரத்தில் எதிர்காலத்தில் மேலும் இந்தத் திட்டங்களை விரிவு படுத்துகின்ற செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இருக்கிறதா முன்னுரிமை தந்து வாடகைக்கு விடப்படுமா?

**மாண்புமிகு திரு. என். நல்லுசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, கோபிச்செட்டிபாளையத்தைப் பொறுத்தவரையில் மாண்புமிகு உறுப்பினர்கள் கேட்டதற்கு ஃபியூச்சர் புரோக்கிராம் என்ற அடிப்படையில் ஒருங்கிணைந்த நகர்ப்புற அபிவிருத்தி திட்டத்தின் கீழ் ரூ. 18.51 இலட்சம் செலவில் 10.48 ஏக்கர் நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டது. 3.20 ஏக்கர் நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டு ஃபேஸ் ஒன்றில் (பகுதி ஒன்றில்) அந்தப் பணிகள் முடிக்கப்பட்டுவிட்டன. மேலும் ரூ. 12 இலட்சத்திற்கு மேல் 6.78 ஏக்கர் நிலங்கள் ஆர்ஜிதம் செய்து அபிவிருத்தி செய்யப்பட உள்ளன.

**திரு. கு. அ. செங்கோட்டையன்:** பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே கட்டப்படுகின்ற வீடுகள் நலிந்த பிரிவினருக்கு முன்னுரிமை தந்து வாடகைக்கு விடப்படுமா

**மாண்புமிகு திரு. என். நல்லுசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே சொன்ன பதிலிலே இருக்கிறது. குறைந்த வருவாய்ப் பிரிவினருக்கான திட்டத்தின் கீழ் ரூ. 15.41 இலட்சம் மதிப்பீட்டில் 98 குடியிருப்புகளும், உயர் வருவாய் பிரிவினருக் கான திட்டத்தின் கீழ் ரூ. 11.74 இலட்சம் மதிப்பீட்டில் 14 குடியி ருப்புகளும் கட்டி முடிக்கப்படும்.

**திரு. எஸ். புருசோத்தமன்:** பேரவைத் தலைவர் அவர்களே, அரசு ஊழியர்களுக்கு 1985—86 ஆம் ஆண்டிற்கான வீட்டு வசதி கடன் இந்த மாதம் அதாவது ஏப்ரல் மாதம் வழங்கப்படுமா அல்லது எப்போது வழங்கப்படும் என்று அறிய விரும்புகிறேன்.



(முற்பகல் 9-50)

**மாண்புமிகு திரு. என் நல்லுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திட்டங்களின் அடிப்படையில் பகுதிவாரியாக முடிவெடுத்து அப்படிப்பட்ட செலவினங்கள் முறைப்படி செய்யப் படும்.

**திரு. ஈ. வே. கி. ச. இளங்கோவன்:** தலைவர் அவர்களே, பெரியார் மாவட்டம் கோபிசெட்டிபாளையத்திற்கு அருகிலே சத்தியமங்கலம் நகரம், தாளவாடி மலைப்பகுதி ஆகிய இடங்களிலே இந்தத் திட்டம் விரிவாக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. என். நல்லுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே போடப்பட்டுள்ள கோபி செட்டிபாளையத்திற்கான திட்டங்கள் முடிவடைந்ததற்குப் பிறகு அந்த மக்களுடைய கோரிக்கைகள்படி அதிகமான வீடுகள் தேவைப்பட்டால் அரசு அதைப்பற்றிப் பரிசீலனை செய்யும்.

**திரு. மு. பிச்சை:** தலைவர் அவர்களே, தம்முடைய தமிழகத்திலே மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே ஆதிதிராவிட மக்களுக்கு இனாமாக 6 ஆயிரம் ரூபாயில் வீடுகள் கட்டிக்கொடுக்கப்படுகின்றன. அதேபோன்று பின்தங்கிய சமுதாயத்தைச் சேர்ந்தவர்களுக்கு கிராமங்களிலே நிலம் இல்லாமல் குடியமர்த்துவதற்கு முடியாமல் இருக்கிறது என்பதையும் மனதிலே வைத்து ஆதி திராவிட மக்களுக்கு இனாமாக வீடுகள் கட்டிக்கொடுப்பதைப்போன்று அவர்களுக்கும் வீடுகள் இனாமாகக் கட்டிக்கொடுக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. என். நல்லுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது நேரடியாக என்னுடைய துறையில் இல்லாவிட்டாலும் இந்தக் காலத்திலே நிலம் அல்லது வீடு இனாமாகக் கொடுப்பது என்று ஆரம்பித்தால் அது நாட்டிலே உள்ள ஜனத்தொகையின் அடிப்படையில் எந்த அரசும் செய்ய முடியாத காரியமாக இருக்கிறது.

[1985 ஏப்ரல் 1

**திரு. ஜி. ஆனந்த கிருஷ்ணா:** தலைவர் அவர்களே, சென்னையிலே விருகம்பாக்கம், மதுரவாயல் போன்ற பகுதிகளிலே வீட்டு வசதி வாரியத்திற்கு ஒதுக்கப்பட்ட நிலங்கள் தனியார்களுக்கு விற்கப்பட்டு அங்கே தனியார்கள் வீடுகளைக் கட்டுகின்ற நிலைமை இருப்பதால் அது குறித்து விட்டுவசதி வாரியம் நடவடிக்கை எடுக்க முன்வருமா?

**மாண்புமிகு திரு. என். நல்லுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதற்கு தனிக் கேள்வி போடவும்.

**திரு. ஏ. எஸ். ரவீந்திரன்:** தலைவர் அவர்களே, இப்போது வீட்டு வசதி வாரியத்தின் மூலமாக கட்டும் திட்டத்திற்கு எவ்வளவு கடன் உதவி அளிக்கப்படுகிறது? தற்போதுள்ள விலைவாசியைப் பொறுத்து அந்தக் கடன் தொகையை உயர்த்துவதற்கான எண்ணம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**மாண்புமிகு திரு. என். நல்லுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்கு தனிக் கேள்வி போடவும்.

**திரு. கே. எஸ். எம். இராமச்சந்திரன்:** தலைவர் அவர்களே, மாவட்டத் தலைநகரங்களில் அரசு அலுவலகங்கள் இருப்பதால் சட்டமன்ற உறுப்பினர்கள் அடிக்கடி பொதுமக்கள் குறைகளைத் தீர்ப்பதற்காக அந்த அதிகாரிகளைச் சந்திக்க வேண்டியிருப்பதால் மாவட்டத் தலைநகரங்களிலே சட்டமன்ற உறுப்பினர்களுக்கு வீட்டு வசதி செய்து கொடுக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. என். நல்லுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டதில் சட்டமன்ற உறுப்பினர்களைப் பொறுத்தவரையில் வாடகைக்கு என்றோ அல்லது வீடு முழுமையான உரிமையுடனா என்ற விவரத்துடன் கேட்கவில்லை. இருந்தாலும் அவர்களும் பொது மக்களில் ஒருவராக இருக்கிற காரணத்தினால் வருகின்ற மனுக்களில் மற்றவர்களின் மனுக்கள் மீது எந்த முடிவு எடுக்கப்படுகிறதோ அந்த முடிவுதான் அவர்களுடைய மனுக்களுக்கும் இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். சென்னையிலே லாட் சிஸ்டம் மூலமாக போடப்பட்டிலே உறுப்பினர் சிவப்பிரகாசத்திற்குக்கூட விழுந்திருக்கிறது.



1985 ஏப்ரல் 1]

ஆகவே அப்படிப்பட்ட திட்டம மாவட்டத் தலைநகரத்திற்கு என வரும்போது நீங்கள் முயற்சி செய்து பார்க்கலாம். அது உங்களுடைய அதிர்ஷ்டத்தைப் பொறுத்தது.

**திரு. சு. சிவராஜ்:** தலைவர் அவர்களே, சென்னை நகரத்திலே கொரட்டூரிலே வீட்டு வசதி வாரியத்தினாலே கட்டப்பட்ட வீடுகளில் விரிசல் விழுந்துள்ளது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

**மாண்புமிகு திரு. என். நல்லுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேரடியாக வரவில்லை. எந்த குறைபாடுகளாக இருந்தாலும் அரசு அவைகளைப் போக்குவதற்கான முயற்சியில் ஈடுபடும்.

**திரு. எச். ஜி. ஆறுமுகம்:** தலைவர் அவர்களே, சென்னை, கோயம்புத்தூர், திருச்சி போன்ற மாவட்டத் தலைநகரங்களிலே குடிசைகள் மாடிவீடுகளாக மாற்றப்படுகின்ற திட்டத்தை அரசு செயல்படுத்திக்கொண்டு வருகிறது. சேலம் பஸ் ஸ்டாண்டை விட்டு இறங்கியவுடனேயே பார்த்தால் குடிசைகள் மாடி வீடுகளாக மாற்றப்பட்டிருக்கிற நிலைமையைப் பார்க்கிறோம். ஆனால் தர்மபுரி மாவட்டம் தொடங்கப்பட்டு பல ஆண்டுக்காலமாகியும் தர்மபுரி நகரத்திலே உள்ள குடிசைவாசிகளுக்கு மாடிவீடுகள் கட்டிக் கொடுக்கப்படவில்லை. எனவே அங்கே குடிசைவாசிகளுக்கு மாடிவீடுகள் கட்டுவதற்கு அரசிடம் திட்டம் உண்டா?

**மாண்புமிகு திரு. என். நல்லுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது இருக்கின்ற திட்டத்தில் தர்மபுரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில் இல்லை. ஏற்கனவே பதில் சொல்லும்போது 10 நகரங்கள் எடுத்துக்கொள்ளப்படுவதாக சொல்லியிருக்கிறேன். அதற்கு அடுத்த ஆண்டில் அவருடைய அன்பு வேண்டுகோளை ஏற்று ஏதாவது ஒரு நல்ல பகுதியை அரசு எடுத்துக் கொள்ளும் முயற்சியில் ஈடுபடும்.

**திரு. எல்ல. இராசமாணிக்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாம்பரம் பகுதியில் 2 ஆண்டு காலமாக 2 ஆயிரம் வீடுகள் கட்டுவதற்காக ஒரு திட்டம் வீட்டு வசதி

வாரியத்தின் ஆலோசனையில் இருந்தது. இப்போது அது கைவிடப்பட்டதாக அறிகிறேன். காரணம் என்ன என்பதை அமைச்சர் அவர்கள் விளக்குவார்களா?

**மாண்புமிகு திரு. என். நல்லுசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனிக்கேள்வி போடவும்.

**திரு. டி. ஆர். வேங்கடரமணன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வீட்டுவசதி வாரிய வீடுகள் கட்டும்போது அதில் கட்டுமான சிமெண்டு கலவை 1:12 என்ற அளவில் சிமெண்டும் மணலும் கலக்கப்படுவதால் அந்த வீடுகளில் விரிசல் ஏற்படுகிறது என்பது அரசின் கவனத்திற்கு வந்திருக்கிறதா? இதற்கான அதிகாரிகள் இருந்தாலும் கூட இந்த கலவை மிகவும் மோசமாக இருக்கிறது என்று பல புகார்கள் அரசுக்கு கூறப்பட்டும். பத்திரிகைகள் பக்கம் பக்கமாக எழுதியும் படம் போட்டும் காண்பிக்கிறார்கள். ஆகவே இதைப் போக்க என்ன நடவடிக்கை எடுக்க அரசு உத்தேசித்துள்ளது என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என். நல்லுசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த குறைபாடு இருப்பதாக அவர்கள் கருதி சொல்கிறார்கள். அதற்கு பதிலாக அதைவிட நல்ல யோசனையாக இருந்தால் அதைச் சொன்னால் அது அரசுக்கு உபயோகமாக இருக்கும். அப்படிப்பட்ட யோசனையை நான் துறைக்கு அனுப்புவதற்குத் தயாராக இருக்கிறேன்.

**திரு. மா. சுந்தரதாஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வீட்டுவசதி வாரியம், குடிசை மாற்று வாரியம் குமரி மாவட்டத்தில் இல்லை. அந்த மாவட்டத்தில் அந்தத் திட்டங்களை கொண்டுவரும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என். நல்லுசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்த வரையில் வீட்டுவசதி வாரியத்தைப் பொறுத்தவரையில் அவசியம், வருகின்ற ஆண்டுகளில் திட்டங்களை நிறைவேற்றுவதற்கு முயற்சிகள் எடுபடும். குடிசை மாற்று வாரியத்தைப் பொறுத்தவரையில் ஏற்கனவே சொன்னது போல் 10 நகரங்களில்





இப்போது எடுத்துக்கொள்ளப்படும். அடுத்த ஆண்டு வரும் போது குமரி மாவட்டத்தில் ஏதாவது ஒரு பகுதியை எடுத்துக் கொள்வதற்கு அரசு முயற்சிக்கும்.

**திரு. எம். அண்ணாதாசன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வீட்டுவசதி வாரியம் எங்கள் திருச்சி மாவட்டத்தில் நன்கு செயல்படுகிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 10 மாவட்டங்களில் இந்த முறை குடிசைமாற்று வாரியம் செயல்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். தமிழ்நாட்டின் மத்திய பகுதியில் திருச்சி மாவட்டம் இருப்பதால் குடிசைமாற்று வாரியம் அங்கே அமல்செய்வதற்கு அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என். நல்லுசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் திருச்சி-2 தொகுதியிலிருந்து வெற்றி பெற்று வந்தவன். எனக்காக பரிந்து பேசிய மாண்புமிகு உறுப்பினருக்கு நன்றி. திருச்சியில் இப்போது ஒரு 10, 15 நாட்களுக்கு முன்னால் 5 இடங்களில் குடிசைமாற்று வாரியத்தின் மூலம் ஏதாவது ஒரு திட்டத்தை நடைமுறைப்படுத்த இருப்பதாக மதுரையிலிருந்து எஸ்.ஈ. மூலமாக தகவல் வந்துள்ளது.

**திரு. இரா. தாமரைக்கனி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை போன்ற நகரங்களில் கடல் ஓரங்களில் வீட்டுவசதி வாரியத்தின் மூலமாகவோ குடிசை மாற்று வாரியத்தின் மூலமாகவோ வீடுகள் கட்டும்போது அந்த கடல் காற்று, உப்பு காற்று அந்த வீடுகளின் மேல் படுவதால் அந்த வீடுகள் எல்லாம் கீழே விழும் நிலையில் உள்ளது. ஆகவே வீட்டுவசதி வாரியத்தின் மூலமாகவும், குடிசைமாற்று வாரியத்தின் மூலமாகவும் இனிமேல் வீடுகள் கடல் ஓரங்களில் கட்டுவதற்குத் தடை விதிக்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என். நல்லுசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லுவது ஒரு குறையாக இருந்தாலும் உலகம் முழுவதும் அந்த கடல் ஓரமான இடம் எல்லோராலும் விரும்பத்தக்கதாக இருக்கிறது. அது அனைவராலும் விரும்பத்தக்க இடமாக இருப்பதால் அப்படிப்பட்ட யோசனையை எடுத்துக் கொள்ளுவதற்கு அரசு முன்வந்திருக்கிறது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

[1985 ஏப்ரல் 1

(முற்பகல் 10-00)

**திரு. எஸ். வேணுகோபால்** : மாண்புமிகு தலைவர் அவர்களே, எங்கள் கட்சி உறுப்பினரவர்கள் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு மாவட்டங்களிலே வீடுகள் ஒதுக்கப்படுமா என்று கேட்டதற்கு வாடகையா என்று அமைச்சரவர்கள் கேட்டார்கள். தயவு செய்து வாடகைக்காக இருந்தாலும் முன்னுரிமை கொடுத்து சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அளிக்கப்படுமா என்று கேட்கிறேன்

**மாண்புமிகு திரு. என். நல்லுச்சாமி** : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, முன்னுரிமை அளிக்கின்ற அடிப்படையில் 10 சதவீதம் இருக்கிறது. அது அவரவர்களுடைய தனிப்பட்ட வகையில், குடும்பம் மற்ற சூழ்நிலைகளின் தகுதி அடிப்படையில் முடிவெடுக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடம் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 3. தகவல் கோரல்.

### (அ) உறுப்பினர் கொடுத்துள்ள அறிவிக்கை.

**திரு. கு. ரமணி** : தலைவரவர்களே, சென்னை நகரத்திலே போலீசுக்கு ஆள் எடுக்கும்பொழுது பெரிய தகராறு ஏற்பட்டு சாவே நடந்திருக்கிறது. நான் அதுபற்றி ஒத்திவைப்புத் தீர்மானமே கொடுத்திருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : நீங்கள் தீர்மானம் கொடுத்திருக்கலாம்; எனக்குத் தகவல் ஒன்றும் வரவில்லை. பதில் வந்தவுடன் உடனே எடுத்துக்கொள்கிறேன்.

**திரு. அ. ரகுமான்கான்** : தலைவரவர்களே, நேற்று முன் தினம் சனிக்கிழமை இந்தச் சம்பவம் நடைபெற்றுள்ளதாகத் தெரிந்தவுடன் பிற்பகல் 1 மணிக்கே, நம்முடைய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட்





கட்சியைச் சேர்ந்த ரமணி அவர்கள், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியைச் சார்ந்த உத்திராபதி அவர்கள், பாலன் அவர்கள் ஆகிய நாங்கள் அத்தனைபேர்களும் சேர்ந்து ஒத்திவைப்புத் தீர்மான அறிவிப்பு கொடுத்திருக்கிறோம். இரண்டாவதாக, நேற்றே அது சம்பந்தமாக கமிஷனர் மறுப்பு அறிக்கை வெளியிட்டிருக்கிறார்கள். சம்பவம் நடந்த இடம் சென்னை; உடனடியாக அதுபற்றிய விவரங்களை எல்லாம் கமிஷனரிடத்திலேயிருந்து வாங்குவதற்கு சிரமம் இராது. நாங்கள் என்ன எழுதிக் கொடுத்திருக்கிறோம் என்றால். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : அதை வாசிக்க வேண்டாம்; அலுவலகத்தில் கொடுத்திருப்பதால் அதற்குப் பதில் வந்ததும் எடுத்துக் கொள்ளலாம். (குறுக்கீடு).

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்** : மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவரவர்களே, அவர்கள் கொடுத்துள்ள தீர்மானத்திற்கான பதில் விவரங்களை அரசு தயாரித்தாக வேண்டும்; நாளைக்கு எடுத்துக்கொண்டால், அதற்கு முன் விவரத்தைப் பெற்றுச் சொல்லலாம். (குறுக்கீடுகள்).

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : திரு. ரகுமான்கான் உட்கார வேண்டும். பேரவை முன்னவர் சொல்லிவிட்டார். திரும்பவும் நான் ஏதாவது சொல்லி, **I do not want to precipitate the matter.** அதை நாளைக்கு எடுத்துக்கொள்ளலாம்.

**திரு. அ. ரகுமான்கான்** : நான் இந்த சப்ஜெக்டிற்குள் போகவில்லை. ஒத்திவைப்புத் தீர்மானம் சம்பந்தமான ஒரு புரசீஜரைத் தங்கள் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். பேரவை விதி 58-இன்படி "முன்னறிவிப்பில் எழுப்பப் பெற்றுள்ள நிகழ்வினைப்பற்றி விவாதிக்க தமது இசைவினைக் கொடுப்பதற்கு அல்லது மறுப்பதற்கு முன்னர் அது குறித்து முடிவெடுப்பதற்குத் தகுந்த போதிய விவரங்கள் தம்மிடத்தில் இல்லையெனப் பேரவைத் தலைவர் கருதுவாரேயானால், வந்துள்ள அறிவிப்பினைப் பேரவைக்கு அறிவித்து, உரிய உறுப்பினரிடமும் அமைச்சரிடமும் அதுபற்றிச் சுருக்கமானதொரு விளக்கம் கேட்டு அதனை அனுமதிப்பது பற்றிய தமது முடிவைப் பேரவைத் தலைவர் தெரிவிக்கலாம்" என்று இருக்கிறது. தாங்கள் அதைப் பரிசீலித்துப் பார்த்து. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நான் பார்த்துச் சொல்வதாக இருந்தால் It may go against you அவை முன்னவர் அவர்கள் சொன்னதோடு இருங்கள். உங்களுக்கு நல்ல வாய்ப்பு இருக்கின்றது.

**(ஆ) கவன ஈர்ப்பு அறிக்கைமீது அதிகப்படியான உறுப்பினர்களுக்கு கேள்வி கேட்க வாய்ப்பளிப்பது.**

**திரு. ப. பொன்னுரங்கம் :** பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு சின்ன பிரச்சினை. இப்போது நீங்கள் இரண்டு கவன ஈர்ப்புத் தீர்மானங்களை எடுத்துக்கொள்ளப் போகிறீர்கள். அதில் ஒன்று திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் கொண்டு வருவது. அதைப் பொறுத்த வரையில் நாங்கள் 6, 7 பேர் தந்திருக்கிறோம். இங்கே கொஞ்சம் முன்பு கூட மாண்புமிகு உறுப்பினர் திரு. செங்கோட்டையன் அவர்கள் எழுப்பிய கேள்விக்குக் கூட பத்து, பன்னிரண்டு பேர்கள் துணைக் கேள்வி கேட்டு பதில் கிடைக்கக்கூடிய வாய்ப்பு உள்ளது. தாங்கள் ரூல் பிரகாரம்தான் நடந்து கொள்கிறீர்கள் என்றாலும் கவன ஈர்ப்பைப் பொறுத்த வரையில் கட்சிக்கு ஒருவர் என்பதால். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** கேள்வி நேரம் என்பதற்கு ஒரு மணி நேரம் ஒதுக்கி வைத்திருப்பதால், அந்த ஒரு மணி நேரத்தையும் எடுத்துக்கொள்ளவேண்டும் என்பதற்காக இன்று பலருக்கும் துணைக் கேள்வி கேட்க வாய்ப்பு கொடுக்கப் பெற்றது. இதிலே ஒருவருக்குக் கொடுக்க வேண்டும், மற்றவருக்குக் கொடுக்கக்கூடாது என்ற உள்நோக்கம் எதுவும் இல்லை. நான் நினைத்திருந்தால் நான்கு கேள்விகளையும் 40 நிமிடங்களில் முடித்திருப்பேன் . . . (குறுக்கீடு) . . . கவன ஈர்ப்பு என்கிறபோது ரூல்ஸ் பிரகாரம் 5 பேருக்குத்தான் கொடுக்கலாம் என்று இருக்கிறது. வேண்டுமானால் உங்களை ரூல்ஸ் கமிட்டியிலே போடச் சொல்லலாம். நீங்கள் ரூல்ஸ் கமிட்டியிலே அந்த விதியை மாற்றுவதற்கு ஆலோசனை சொல்லுங்கள். (குறுக்கீடு) அந்த விதியை பின்பற்றவேண்டாம் என்று மாண்புமிகு உறுப்பினர் கூறினால் விதிகளைத் தளர்த்தி விடலாம்.



## 4. கவன ஈர்ப்புகள்.

**(அ) குடந்தை அரசினர் ஆடவர் கல்லூரி மாணவர்களுக்கு தற்காலிக சான்றிதழ்கள் வழங்குவதில் ஏற்பட்ட காலதாமதம் காரணமாக மாணவர்களுக்கு ஏற்பட்ட பாதிப்பு.**

**திரு. கி. கிருஷ்ணமூர்த்தி :** பேரவைத் தலைவர் அவர்களே, "குடந்தை அரசினர் ஆடவர் கல்லூரி மாணவர்கள் 317 பேர் தற்காலிகச் சான்றிதழ்கள் (ப்ரவிஷனல் சர்டிஃபிக்கேட்ஸ்) பெறுவதற்காகக் கல்லூரி முதல்வர் மூலம் கடந்த 1984 ஏப்ரல் மாதமே சென்னைப் பல்கலைக் கழகத்திற்கு பணம் செலுத்தியும் இன்று வரை அவை அளிக்கப்படாததால் குடந்தை கல்லூரி மாணவர்களிடையே ஏற்பட்டுள்ள நிலை குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கல்வி அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** பேரவைத் தலைவர் அவர்களே, இதுகுறித்து சென்னைப் பல்கலைக்கழகத்துடன் தொடர்பு கொள்ளப்பட்டது. 1984 ஏப்ரல் மாதத்தில் பி.ஏ., பி.எஸ்.ஸி. மற்றும் பி.காம்., பட்ட வகுப்பு தேறிய கும்பகோணம் அரசினர் ஆடவர் கலைக் கல்லூரியைச் சார்ந்த 317 மாணவர்களுக்கு தற்காலிக பட்டச் சான்றிதழ் (Provisional Certificate) வழங்குவதற்காக, ஒவ்வொருவருக்கும் ரூ. 30 வீதம் கட்டணம் செலுத்தி, பட்டியலும் அனுப்பியிருப்பதாக கும்பகோணம் அரசினர் ஆடவர் கல்லூரி முதல்வர் பல்கலைக்கழகத்திற்கு தெரிவித்துள்ளார். பணம் செலுத்தியதற்கான வங்கிச் சலான்கள் அனுப்பிவைக்கும்படி பல்கலைக் கழகம், கல்லூரி முதல்வரைக் கேட்டுக் கொண்டது. ஆனால் 14—5—1984 அன்று, வங்கிச் சலான்கள் ஏற்கெனவே அனுப்பிவைக்கப்பட்டன என்று கல்லூரி முதல்வர் பல்கலைக்கழகத்திற்கு தெரிவித்துள்ளார். எனவே, பணம் செலுத்தியதற்கான சான்றிதழ்களை (Certificate of Payment) பெற்றனுப்புமாறு பல்கலைக்கழகம் மீண்டும் கேட்டுக் கொண்டது. அவை இதுவரையில் கிடைக்கப் பெறாததால், பணம் செலுத்தியதற்கான சான்றிதழ்களைப் பெற்று அனுப்புவதை எதிர்நோக்கி, தற்காலிக பட்டச் சான்றிதழ்கள் (Provisional Certificate) மாணவர்களுக்கு வழங்கிட கல்லூரி முதல்வருக்கு 20—3—1985 அன்று அனுப்பப்பட்டுவிட்டதாக பதிவாளர் தெரிவித்துள்ளார்.

[1985 ஏப்ரல் 1

**திரு. கி. கிருஷ்ணமூர்த்தி :** பேரவைத் தலைவர் அவர்களே, இந்த விளக்கவுரை எனக்கு முன்னதாக அளிக்கப்படவில்லை. 14—5—1984 அன்று வங்கிச் செலான்கள் அனுப்பப்பட்டன என்று நான் 16—3—1985 அன்று கால் அட்டென்ஷன் கொடுத்ததற்குப் பிறகு 20—3—1985 அன்று அனுப்பப்பட்டுவிட்டதாக அமைச்சர் அவர்கள் பதில் சொல்லியிருக்கிறார்கள். எனவே இவ்வாறு ஒரு ஆண்டு தாமதம் ஏற்பட்டதற்குக் காரணமான அதிகாரிகள் மீது இந்த அரசு நடவடிக்கை எடுப்பதோடு அதனால் பாதிக்கப்பட்ட மாணவர்களை அரசு கவனத்தில் எடுத்துக்கொள்ளுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** பேரவைத் தலைவர் அவர்களே, தாமதத்திற்கு என்ன காரணம் என்பதை விசாரித்து காரணமானவர்கள் மீது அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(முற்பகல் 10-10)

**(ஆ) செங்கல் உற்பத்தியாளர்கள் ஸ்ட்ரைக்.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திருவாளர்கள் டி. ஆர். வேங்கடராமனன், சா. துரைசாமி, ப. பொன்னுரங்கம், ஜி. ஆனந்த கிருஷ்ணா, எஸ். வேணுகோபால், சோ. மா. இராமச்சந்திரன் மற்றும் இரா. தாமரைக்கனி ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சரின் கவனத்திற்கு அதைக் கொண்டு வருவார்.

**திரு. டி. ஆர். வேங்கடராமனன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தனியார் நிலங்களில் இருந்து சவுடு மணல் எடுத்துவரும் லாரிகளை அதிகாரிகள் பறிமுதல் செய்துவருவதால் தமிழ்நாட்டில் 25—3—1985 முதல் செங்கல் உற்பத்தியை நிறுத்துவது என தமிழ்நாடு செங்கல் உற்பத்தியாளர்கள் சங்கம் எடுத்துள்ள முடிவு குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.



1985 ஏப்ரல் 1]

**மாண்புமிகு திரு. ஆனூர் பு. கோ. ஜகதீசன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

**அறிக்கை.**

1. 'சவுடு' என்பது களிமண் அடங்கிய சிறுமணல் வகையாகும். இது இந்திய அரசின் சுரங்கங்கள் மற்றும் கனிமங்கள் (வகைப் படுத்துதல் மற்றும் மேம்படுத்துதல்) சட்டம், 1957 பிரிவு 3 (இ)-ல் அறிவிக்கப்பட்டுள்ள விளக்கப்படி சிறு கனிமமாகும். 1959 ஆம் ஆண்டின் தமிழ்நாடு சிறு கனிம சலுகை விதிகளில் ஏனைய விதிகளோடு குறிப்பாக விதி எண் 3(1)-ன் கீழ் அரசு நிலங்களிலுள்ள கனிமங்களையும் விதி 19-ன்படி தனியார் நிலங்களிலுள்ள கனிமங்களையும் வெட்டியெடுப்பது முறைப்படுத்தப்பட்டுள்ளது.

2. தேவைப்படும் கனிமத்தின் மதிப்பைப் பொறுத்து மாவட்ட ஆட்சித் தலைவர் அல்லது அவரின் கீழ் பணியாற்றும் வருவாய்த் துறை அதிகாரிகள் அல்லது ஊராட்சி ஆணையர்களிடமிருந்து அனுமதியோ அல்லது உரிமமோ பெற்றுத்தான் "சவுடு" மணலையும் வெட்டியெடுக்க வேண்டும். எனவே அனுமதியோ, உரிமமோ பெறாமல் 'சவுடு' மணல் வெட்டி எடுப்பதும் போக்குவரத்து அனுமதியின்றி எடுத்துச் செல்வதும் 1959-ஆம் ஆண்டின் தமிழ்நாடு சிறு கனிம சலுகை விதிகளில் விதி எண் 3(3)(சி) இன் படியும், 21-ன் படியும் தண்டிக்கப்படக்கூடிய குற்றமாகும்.

3. செங்கற்பட்டு மாவட்டத்தில் சைதாப்பேட்டை, திருபெரும்புதூர் வட்டங்களில் பெருமளவில் கள்ளத்தனமாக சவுடு மணல் எடுப்பதாக பொது மக்களிடமிருந்து புகார்கள் வந்தன. மூன்று அடிக்கு மேல் பள்ளம் தோண்டி மணல் எடுப்பது கண்டுபிடிக்கப்பட்டது. இப்படி நிலங்களை பள்ளமாக்கி பாழ்படுத்துவது பொது பாதுகாப்புக்கே ஊறு விளைவிப்பதாகும். எனவே இதைத் தடுப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டதில் திருபெரும்புதூர் வட்டத்தில் 14 லாரிகள் கைப்பற்றப்பட்டன. ரூ. 32,000 அபராதமாக விதிக்கப்பட்டது. செங்கல் உற்பத்தியாளர்கள் கூறுவது போல தொந்தரவு எதுவும் அவர்களுக்கு கொடுக்கப்படவில்லை. இந்த நடவடிக்கை எடுக்கப்பட்ட பின்னர்தான் மணல் எடுக்க அனுமதி கோரி பெருமளவில் மனுக்கள் பெறப்பட

136429

26—2—1985 லிருந்து இதுவரை மொத்தம் 38 மனுக்கள் பெறப்பட்டுள்ளன. மனுக்களில் போதிய விவரங்கள் இல்லாதபோதிலும் அவை செங்கல் உற்பத்தியாளர்களிடமிருந்து பெறப்பட்டு விரைவில் பரிசீலிக்கப்பட்டு ஆணைகள் பிறப்பிக்கப்படும்.

4. இப்பொருள் குறித்து 27—3—1985 இல் தலைமைச் செயலாளர் அவர்கள் தொழில் துறை செயலாளர் மற்றும் செங்கல் உற்பத்தியாளர்கள் சங்கத்தின் பிரதிநிதிகளுடன் 27—3—1985 அன்று பேச்சு வார்த்தை நடத்தினார்கள். இதைத் தொடர்ந்து 28—3—1985 நாளிதழ்களில் செங்கல் உற்பத்தியாளர்கள் சங்கம் செங்கல் விற்பனை நிறுத்தத்தை கைவிட்டது என்ற செய்தி வெளியிடப்பட்டுள்ளது.

**திரு. டி. ஆர். வேங்கடரமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'ஆப்பரேஷன் சக்சஸ், பட் தி பேஷன்ட் டைட்' என்று சொல்வார்கள். இந்த வேலை நிறுத்தத்தைப் பற்றி 19—3—1985 அன்றே நான் ஒரு கவன ஈர்ப்புப் பிரேரணை கொடுத்தும் 15 நாட்கள் கழித்து இந்த விவர அறிக்கை வைக்கப்பட்டிருக்கிறது. இந்த அறிக்கை வருவதற்கு முன்னாலே அந்த வேலை நிறுத்தம் அங்கே நிறுத்தப்பட்டிருக்கிறது என்ற முறையிலே 'ஆப்பரேஷன் சக்சஸ்' என்று மகிழ்ச்சியோடு இருந்தாலும் கூட, இந்த விவர அறிக்கையிலே முழுமையான விவரங்கள் இல்லை என்பதற்காக ஒரு கேள்வியை இந்த அவையிலே எழுப்ப நான் விழைகின்றேன். இந்த விவர அறிக்கையிலே, செங்கல் உற்பத்தியாளர்கள் கூறுவது போல் தொந்தரவு எதுவும் அவர்களுக்கு கொடுக்கப்படவில்லையென்று சொல்லப்பட்டிருக்கிறது. அடுத்தபடியாக, அந்தச் செங்கல் உற்பத்தியாளர் பிரதிநிதிகளுடன் 27—3—1985 அன்று பேச்சு வார்த்தை நடத்தப்பட்டதாகவும் அந்த வேலை நிறுத்தம் வாபஸ் பெறப்பட்டதாக செய்தித்தாள்களில் அறிவிக்கப்பட்டிருப்பதாகவும் இங்கே சொல்லப்பட்டிருக்கிறது. அந்த அடிப்படையிலே பார்த்தால் இந்த வேலை நிறுத்தமே அந்தத் தொந்தரவின் காரணமாகத்தான் ஏற்படுத்தப்பட்டது என்பது தெரிகிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்தச் சங்க உரிமையாளர்களிடம் பேசியபொழுது அதிகாரிகள் தவறு செய்தார்கள் என்பதை ஏற்றுக்கொண்டு. இனிமேல் ஹாரஸ்மென்ட் இருக்காது என்று உறுதிமொழி அளித்ததாகவும்,



6 அதிகாரிகளை இடமாற்றம் செய்யப்போவதாகவும் அதற்கான உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டதாகவும் உறுதிமொழி அளித்ததாகவும் சங்கத்திடமிருந்து எனக்குத் தகவல் வந்திருக்கிறது. அந்தச் செய்திகள் இந்த அறிக்கையிலே குறிப்பிடப்படவில்லை. ஆகவே, இந்த அவையினுடைய கவனம் திசை திருப்பப்பட்டு, தவறான செய்திகள் இந்த அவையிலே தரப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொண்டு, உண்மையான நிலைமையை அமைச்சர் பெருமகனார் விளக்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. ஆனூர் பு. கோ. ஜகதீசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொடுக்கப்பட்ட அறிக்கையில் தந்திருக்கிற அனைத்தும் உண்மை என்பதுதான் உறுதியானது. ஆனால், 27-ம் தேதி அன்று செங்கல் தொழில் செய்கின்ற உற்பத்தியாளர்களும் நம்முடைய தலைமைச் செயலாளர் அவர்களும் மற்றும் இருக்கிற முக்கியஸ்தர்களும் ஒன்றாகக் கூடிப் பேசி ஒரு நல்ல முடிவை எடுக்க வேண்டுமென்பதற்காகச் சம்பந்தப்பட்ட அனைத்தையும் பரிசீலனை செய்ய வேண்டுமென்ற நிபந்தனைக் குட்பட்டு அது பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது. பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படுவதிலே சுமுகமான தீர்வு ஏற்படும் என்ற நம்பிக்கையோடுதான் செங்கல் உற்பத்தியாளர்களும் லாரி உரிமையாளர்களும் அந்த வேலை நிறுத்தத்தைக் கைவிட்டார்கள் என்பதுதான் உண்மை.

**திரு. சா. துரைசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பிரச்னையை இந்த அளவிற்கு விரைவாக, சுமுகமாக முடித்தமைக்கு அரசுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். அதைப் போலவே பல்வேறு பிரச்னைகளை நாம் உடனுக்குடன் கவனித்து சுமுகமாகத் தீர்த்தால் நலமாக இருக்கும் என்று சொல்லி இந்த அளவிற்கு விரைவாக நடவடிக்கை எடுத்து லாரி உரிமையாளர்கள் மத்தியிலேயும் தொழிலாளர்களுக்கும் பாதுகாப்பு வழங்கியதற்கு மீண்டும் நன்றி சொல்கிறேன். (பதில் இல்லை.)

[1985 ஏப்ரல் 1

**திரு. ப. பொன்னுரங்கம்**: பேரவைத் தலைவர் அவர்களே, செங்கல் உற்பத்தி செய்கின்ற தொழிலில் சென்னையைச் சுற்றியுள்ள 400-க்கு மேற்பட்ட யூனிட்டுகள் வேலை செய்வதாக அறிகிறேன். அதிலே பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்கள் செங்கல் உற்பத்தி செய்யவும் மற்றும் லாரித் தொழிலாளர்கள் என்று இப்படிப் பார்க்கும்போது, அந்தத் துறையிலே மட்டும் 40,000-க்கு மேற்பட்ட தொழிலாளர்கள் பணியாற்றுகிறார்கள் என்று நான் அறிகிறேன். இப்படிப்பட்ட ஒரு தொழில் இடையிலே முடக்கம் ஆவதற்குக் காரணமே சவுடு மணல் எடுப்பது தான் என்று சொல்லப்படுகிறது. அந்த மணல் எடுப்பதற்கு லைசன்ஸ் வாங்க வேண்டுமென்று சொல்லப்படுகிறது. லைசன்ஸ் வாங்குவதற்கு அப்ளை செய்தால் ரெவின்யூ டிபார்ட்மெண்டில் லைசன்ஸ் கிடைக்க 2 வருஷம் ஆகிறது. ஆனால், 2 வருஷம் தொழில் நடக்கவேண்டும். அந்தத் தொழிலாளர்கள் என்ன செய்வார்கள்? அந்தத் தொழிலிலே ஈடுபட்டிருக்கிற உற்பத்தியாளர்கள் என்ன செய்வார்கள்? அந்த இரண்டு வருட காலத்திற்கு அந்தத் தொழிலாளர்களை 'ஃபீட்' பண்ண வேண்டும். நாம் தான் வேலை கொடுப்பது கிடையாது. தனிப்பட்ட முதலாளிகள் அவர்கள் வேலை கொடுக்கிறார்கள். ஆகவே அந்த இரண்டு வருடக் காலத்திற்கு அவர்கள் திருட்டுத்தனமாக காரியங்களைச் செய்வதற்கு நாமே வழிவகுத்துக் கொடுக்கிறோம். ரெவின்யூ டிபார்ட்மெண்டிலே, கலெக்டர் அலுவலகத்திலே இருக்கிற அதிகாரிகள் இதைச் செய்கிறார்கள். ஏனென்றால் அவர்கள் தொழிலை தொடர்ச்சியாகச் செய்ய வேண்டும். தொழிலாளர்களுக்கு வேலை கொடுக்க வேண்டும். உங்களுடைய அறிக்கையிலே மூன்று அடிக்கு மேலே பள்ளம் தோண்டுகிறார்கள் என்று சொல்லி இருக்கிறீர்கள். அப்படி தோண்டப்பட்டது கண்டுபிடிக்கப்பட்டு எத்தனை பேர்களுக்கு தண்டனை கொடுத்தீர்கள்? அதுகுறித்து என் அறிக்கையிலே சொல்லப்படவில்லை? ஆகவே இது சாக்குப்போக்கு சொல்கிற அறிக்கையாகத் தான் இருக்கிறது. நம்முடைய கைகை துரைசாமி அவர்கள் கூட ஒரு கருத்தைச் சொன்னார்கள். உடனடியாக நடவடிக்கை எடுத்திருந்தால் இதுபோன்ற அசம்பாவிதங்களைத் தவிர்க்கலாம்; உடனடியாக நடவடிக்கை எடுத்திருந்தால் விபத்து வந்திருக்காது என்று சொன்னார்கள் விபத்து வந்த பின்னாலே தான்



1985 ஏப்ரல் 1] [திரு. ப. பொன்னுரங்கம்]

இதில் நடவடிக்கையே வருகிறது. ஆகவே பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்கள் பிழைக்கிற இந்தத் தொழிலில் உற்பத்தியாளர்களுக்கு மீண்டும் எதிர்காலத்தில் அவர்களுக்கு சங்கடங்கள், ஹாரஸ்மெண்ட் வராமல், அந்தத் தொழிலாளிகள் வயிற்றில் அடிக்காமல், அதுபோன்ற நிலைமைகள் ஏற்படாத வண்ணம் அதிகாரிகள் நடந்துகொள்ள வேண்டும். அந்த வகையில் நம்முடைய இலாக்கா எச்சரிக்கை செய்து, "in future licence must be given as early as possible" ஆனால் நீங்கள் என்ன சொல்லி இருக்கிறீர்கள். 26—2—1985-லிருந்து இதுவரை மொத்தம் 83 விண்ணப்பங்கள் வந்திருக்கின்றன என்று சொல்கிறீர்கள். இன்றைக்கு தேதி ஏப்ரல் 1 ஆகிறது. ஒரு மாதத்திற்கு மேலாகி விட்டது. இதுவரையில் No licence has been issued இந்த ஒரு மாதகாலத்தில் மண் எங்கேயிருந்து கிடைக்கும்? கல் எப்படி உற்பத்தியாகும்? தொழிலாளிகள் எப்படி பிழைப்பார்கள்? ஆகவே இதன்மீது உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும். இதுபோன்ற பிரச்னைகளில் அரசு தக்க நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆனூர் பு. கோ. ஜகதீசன்**: பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன கருத்தை ஏற்று விரைவாக அனுமதி தர நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் 85 விண்ணப்பங்கள் தற்போது நிலுவையில் இருக்கிறது. உடனடியாக அனுமதி தராமல் ஒரு மாதகாலம் ஆகிவிட்டதே என்று கேட்டார்கள். அனுமதி கோரிய அந்த விண்ணப்பங்களில் முழுமையான விவரங்கள் இல்லை. அந்த விவரங்கள் மீண்டும் கேட்கப்பட்டுள்ளன. அவை கிடைத்தவுடன் நடவடிக்கை எடுக்கப்படும்.

## 5. வரவு-செலவுத் திட்டம், 1985-86 பொது விவாதம் (தொடர்ச்சி).

* **திரு. எஸ். பி. மணவாளன்**: மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்களே, உலக அரங்கிலே வலிமைமிக்க பாரதத்தை உருவாக்கி, இந்தியத் திருநாட்டின் ஒருமைப்பாட்டிற்காக தன் கடைசித் துளி ரத்தத்தையும் சிந்தி தன் உயிரை நீத்த அன்னை இந்திரா காந்தி அவர்களுக்கும், பெருந்தலைவர் காமராஜரின் தொண்டனாகவும், உற்ற தோழனாகவும் விளங்கிய

வரும் திருப்பத்தூர் இடைத் தேர்தல் மூலம் என்னை இச்சட்ட மன்றத்திலே ஓர் உறுப்பினராக அமர வாய்ப்பளித்தவரும், சென்ற பொதுத் தேர்தலில் வெற்றி பெற்ற அமரரான திரு. ஓய். சண்முகம் அவர்களுக்கும் என்னுடைய அஞ்சலியை காணிக்கையாக்கி இந்தக் கன்னிப்பேச்சை துவக்குகிறேன்.

நடைபெற்ற திருப்பத்தூர் இடைத் தேர்தலில் என்னை காங்கிரஸ் கட்சியின் வேட்பாளராக போட்டியிட தேர்வு செய்தவரும், சர்வதேச இளைஞர் ஆண்டாக கடைப்பிடிக்கும் இந்த நேரத்தில், இளைஞர்களின் நம்பிக்கை நட்சத்திரமாக திகழும் இளம் சிங்கம் மதிப்பிற்குரிய பாரதப் பிரதமர் இராஜீவ் காந்தி அவர்களுக்கும், நடைபெற்ற பொதுத் தேர்தலின் முடிவு அனுதாப அலை, அனுதாப அலை என மாற்றுக் கட்சியினர் அலறியபோதும், அது அனுதாப அலை அல்ல, என்றுமே ஓயாத நிரந்தர அலை என என்னைத் தேர்ந்தெடுத்த வாக்காளப் பெருமக்களுக்கும் குறிப்பாக தாய்க்குலத்திற்கும் என் இதயம் கனிந்த நன்றியை இம்மன்றத்தின் வாயிலாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் 1985-86 ஆம் ஆண்டிற்குரிய நிதிநிலை அறிக்கையை இம்மன்றத்தின் முன்வைத்து ஆற்றிய உரையில், அன்னை இந்திரா காந்தியின் 20 அம்சத் திட்டத்தினை முழுமையாக அமல்படுத்துவதோடு மாண்புமிகு முதல்வர் அவர்களின் சத்துணவுத் திட்டம், பள்ளி மாணவர்களுக்கு இலவச சீருடை மற்றும் பாடப் புத்தகங்கள் வழங்கும் திட்டம், கைத்தறி வளர்ச்சி திட்டம், அரசுப் பணியாளர் குடும்ப நலநிதி வரம்பு உயர்த்தல், பத்திரிகை காகிதம், எழுதுதாள் உற்பத்தியை தொடங்குவதன் வாயிலாக பத்திரிகைத் தொழில் வளர்ச்சிக்கு உதவுவது போன்ற பல திட்டங்கள் வரவேற்கத்தக்கவையாக உள்ளன. அரசின் பல திட்டங்களை வரவேற்கின்ற அதே நேரத்தில் என்னுடைய சில கருத்துக்களை அவை முன் வைக்க விரும்புகிறேன். தமிழ்நாட்டில் பலமுனை விற்பனை வரி விதிக்கப்பட்ட எல்லாப் பொருள்களுக்கும் ஒருமுனை விற்பனை வரி விதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.





(முற்பகல் 10.20)

கைத்தறித் துணி தேக்கத்தை அகற்றுகின்ற வகையில் விழாக் காலங்களில் தள்ளுபடி செய்கின்ற கழிவு போக ஆண்டு முழுவதும் நிரந்தரமாக 10 சதவீதம் கழிவு கொடுத்து, கைத்தறி வளர்ச்சிக்கு உதவ வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கல்வியைப் பொறுத்தவரையில் தமிழ்நாட்டிலே பள்ளி வகுப்புகள் திறந்த வெளியிலும் மரத்து நிழலிலும் நடைபெற்று வருகிறது. பள்ளிக் கட்டிடங்கள் கட்டுவதற்கு இந்த நிதி ஆண்டில் ஒரு கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இது 'யானைப் பசிக்கு சோளப்பொரி போடுவது' போன்றிருக்கிறது. எனவே இந்த நிதி ஒதுக்கீட்டை அதிகப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேதகு ஆளுநர் அவர்கள் உரையில் சொல்லிய இவ்வாண்டில் அமைந்துள்ள திருப்திகரமான உணவு நிலைமையைக் கருதி, பொது விநியோக ஏற்பாட்டின் மூலம் வழங்கப்படுகின்ற அரிசியின் அளவு திங்கள் ஒன்றுக்கு 20 கிலோ என்பதை நாள் ஒன்றுக்கு ஒரு கிலோ வீதம் கிடைக்கின்ற வகையில் திங்கள் ஒன்றுக்கு 30 கிலோவாக உயர்த்தித்தர வேண்டுகிறேன்.

அதேநேரத்தில் கிராமப்புறத்தில் 1,000 குடும்பங்களுக்கு ஒரு நியாயவிலைக்கடை என்பதை 500 குடும்பங்களுக்கு ஒரு நியாய விலைக்கடை வீதம் அதிகப்படுத்தி, தாய்மார்கள் நீண்டதூரம் நடந்துசென்று உணவுப் பொருட்கள் வாங்குகின்ற நேரத்தில் ஏற்படுகின்ற இன்னலைப் போக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாநில தன்னாட்சி அமைப்பு ஏற்பட வேண்டும் என மாண்புமிகு நிதி அமைச்சர் நிதிநிலை அறிக்கையில் கூறியுள்ளார். அதற்கு முன்பாக தமிழகத்தில் உள்ள ஊராட்சிகள், நகராட்சிகளில் அதிகாரிகளின் ஆட்சியை போக்குகின்ற வகையில் மக்களின் பிரதிநிதிகளால் தன்னாட்சி செய்கின்ற வகையில் உடனடியாகத் தேர்தல்களை நடத்திட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. எஸ். பி. மணவாளன்] [1985 ஏப்ரல் 1

இறுதியாக என்னைத் தேர்ந்தெடுத்த திருப்பத்தூர் தொகுதி மக்களின் நல்வாழ்விற்காக சில வசதிகளைச் செய்து தரும்படி மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களையும் மற்ற அமைச்சர் பெருமக்களையும் மன்றப் பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக மிகவும் விரும்பி வேண்டி கேட்டுக்கொள்ளுகிறேன்.

திருப்பத்தூர் தொகுதி மிகவும் பின்தங்கிய பகுதி. தொழில்கள் இல்லை. மக்கள் விவசாயத்தையே நம்பி உள்ளார்கள். வேலை இல்லாத் திண்டாட்டம் அதிகமாக உள்ளது. இதனால் நக்சலைட் என்கிற பேரால் அருவருக்கத் தக்க நிகழ்ச்சிகள் பல சென்ற சில ஆண்டுகளில் நடந்துள்ளன. ஆகவே, இப்பகுதியில் வேலைவாய்ப்பளிக்கும் வகையில் ஒரு தொழிற்பேட்டை அமைக்க வேண்டுகிறேன்.

மேலும் மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் சென்ற 27—3—1985 ஆம் தேதியில் வெளியிட்ட அறிக்கையில் 'ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் மின் அணுக் கருவிகள் தயாரிக்க 300 கோடி ரூபாய் செலவில் புதிய தொழிற்சாலைகள் துவக்கப் போவதாக கூறியுள்ளார்கள். அதே நேரத்தில் " அணுவியல் தொழில் வளர்ச்சிக்குத் தேவையான குளிர்ந்த தட்பவெட்ப நிலை உடைய உதகை, கொடைக்கானல், ஏற்காடு மற்றும் ஏலகிரி போன்ற மலை வாசஸ்தலங்களை தமிழகம் பெற்றிருப்பது பெருமைப்பட வேண்டிய ஒன்றாகும்" எனவும் கூறியுள்ளார். அவர் குறிப்பிட்டுள்ள மலை வாசஸ்தலங்களில் ஒன்றான ஏலகிரி மலை எனது தொகுதியில்தான் உள்ளது. எனவே மலைப் பிரதேசத்தில் மின் அணுக் கருவிகள் தயாரிக்கத் தொடங்கும் முதல் தொழிற்சாலையாக ஏலகிரி மலை இருக்க வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்.

திருப்பத்தூர் நகரத்தைப் பொறுத்த அளவில் பெண்களுக்கென தனியாக கல்லூரியோ, பாலிடெக்னிக்கோ இப்பகுதியின் 50 மைல் சுற்றளவில் இல்லை. இப்பகுதி மக்களின் பல ஆண்டுகளாக உள்ள கோரிக்கையை ஏற்று, பெண்களுக்கென தனியாகக் கல்லூரியோ அல்லது பாலிடெக்னிக்கோ அரசு சார்பில் அமைத்திட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



1985 ஏப்ரல் 1] [திரு. எஸ். பி. மணவாளன்]

திருப்பத்தூர் தொகுதிக்கு உட்பட்ட ஜோலார்ப்பேட்டை பேரூராட்சி மக்கள், குறிப்பாக தாய்க்குலத்தினர் பல ஆண்டுக் காலமாக குடிநீர் வசதி இல்லாமல் அவதியுறுகிறார்கள். தாய்க் குலத்தையே பெரிதும் நம்புகின்ற இவ்வரசு இந்த அவதி நிலையைப் போக்குகின்ற வகையில் உடனடியாக பாலாற்றிலிருந்து குடிநீர் வழங்கும் திட்டத்தைச் செயல்படுத்திட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேநேரத்தில் தமிழகத்திலேயே, ஏன் இந்தியாவிலேயே அதிகமான சந்தன மரங்கள் மூலம் தமிழக அரசுக்கு பல கோடி ரூபாய் வருவாய் தரும் ஜவ்வாது மலையும் திருப்பத்தூர் தொகுதியில்தான் உள்ளது. இருப்பினும் இந்த மலைவாழ் பழங்குடி மக்களின் அடிப்படை வசதிகள் பல ஆண்டுக்காலமாக நிவர்த்தி செய்யப்படாமல் இருக்கின்றன. குறிப்பாக குடிநீர், மின்சாரம், மருத்துவம், சாலைகள் மற்றும் பஸ் வசதிகள் போன்றவை. எனவே அங்கே உள்ள மலைவாழ் மக்களின் மேம்பாட்டிற்காக இந்த அடிப்படை வசதிகளை உடனடியாக செய்து தரவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, திருப்பத்தூர் அரசு பொது மருத்துவமனையில் படுக்கை வசதிகளை அதிகப்படுத்தவும், மற்றும் பிற வசதிகளையும் செய்து, அதனை விரிவுபடுத்த வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

திருப்பத்தூரிலிருந்து புறப்படுகின்ற வகையில் நீண்ட தூர பேருந்துகளை, திருப்பதி, பாண்டிச்சேரி, திருச்சி, மதுரை போன்ற நகரங்களுக்கு விடவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

இறுதியாக திருப்பத்தூரைச் சுற்றி 50 மைல் வட்டாரத்தில் சுமார் 5 சர்க்கரை ஆலைகள் உள்ளன. இப்போது பத்திரிகை காகிதம், எழுதுதாள் தயாரிப்பில், கரும்புச் சக்கையைப் பயன் படுத்தும், புதிய தொழில் நுட்பத்தை அறிமுகப்படுத்தியிருக்கிறார்கள். இதைப் பயன்படுத்தி எங்கள் பகுதியிலும் இந்த மாதிரியான ஒரு தொழிற்சாலையை அமைத்துத் தரவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இந்த வரவு-செலவுத் திட்டத்தின் மீது பேச வாய்ப்பு அளித்த மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவருக்கு நன்றி தெரிவித்து விடைபெறுகிறேன், நன்றி, வணக்கம்.

**திரு. கோ. பெருமாள் பிள்ளை:** மாண்புமிகு சட்டபேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1985-86 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையின் மீது எனக்கு இந்த மன்றத்திலே பேசுவதற்கு ஒரு வாய்ப்பை உருவாக்கித் தந்த என்னுடைய இதய தெய்வம், புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களுக்கும், அறநிலையத் துறை அமைச்சர் ஆர். எம். வீ. அவர்களுக்கும் என்னுடைய தொகுதியைச் சேர்ந்த வாக்காளப் பெருமக்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, இந்த நிதிநிலை அறிக்கையின் மீது என்னுடைய கருத்துக்களைத் தெரிவித்துக் கொள்ள அனுமதி வழங்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

நடந்து முடிந்த தேர்தலுக்குப் பிறகு, மாண்புமிகு புரட்சித் தலைவருடைய அரசு இந்த மன்றத்திலே அமைகின்ற நேரத்திலே இரண்டு முறை ஆட்சியை அமைத்து, பின் மூன்றாம் முறையாக ஆட்சியை அமைக்கின்ற காட்சி இடைவெளிக்குப் பின்னால் ஏற்படுகின்ற காட்சியாக இருக்கிறது என்று மாண்புமிகு உறுப்பினர்கள் விவரித்தார்கள். அப்படி இடைவேளைக்குப் பின்னால் ஆரம்பிக்கிற காட்சியாக இருந்தால், அடுத்த 5 ஆண்டுகளுக்குப் பிறகு நடைபெறுகிற தேர்தலிலே, புரட்சித் தலைவருடைய அரசு தான் இந்தத் தமிழகத்தை ஆட்சி செய்யப் போகிறது என்பதை தான் சார்ந்திருக்கின்ற இயக்கத்தினுடைய தலைவருக்கு மறைமுகமாக இட்டுக்காட்டிய மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கான் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டு இருக்கிறேன்.

பொதுவாக இந்தச் சட்டமன்றத்திலே பேசுகின்ற நேரத்திலே எதிர்க்கட்சி உறுப்பினர்கள், புரட்சித் தலைவருடைய ஆட்சியிலே சட்டம் ஒழுங்கு சீர்கெட்டுவிட்டதாக பொதுவான ஒரு குற்றச் சாட்டைக் கூறினார்கள். நான் அவர்களுக்கு ஒரு சிறு சம்பவத்தை, இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட கடமைப்பட்டு இருக்கிறேன். நடந்து முடிந்த தேர்தலிலே, 234 சட்டமன்றத் தொகுதிகளில், தேர்தல் நடந்தபோது, கொலை நடந்த ஒரே தொகுதி





என்னுடைய கன்னியாகுமரி சட்டமன்றத் தொகுதிதான் என்பதை நான் இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். கொலை செய்யப்பட்டவர் என்னுடைய இயக்கத்தைச் சார்ந்த பாலகிருஷ்ணன் என்ற உறுப்பினர், எதிராளிகளால் கொலை செய்யப்பட்டார். நாங்கள் கட்டியிருந்த கொடிகளை மாற்றுக் கட்சியைச் சேர்ந்தவர்கள் பிய்த்து எறிந்த நேரத்திலே அதைத் தடுக்க முயற்சித்தபோது எங்களுடைய இயக்கத்தைச் சேர்ந்த 35 வயதான இளமையான தோழர் பாலகிருஷ்ணன் என்பவர் மாற்றுக்கட்சியினரால் பலாத்காரமாக தாக்கப்பட்டு, அரசு மருத்துவமனையிலே அனுமதிக்கப்பட்டு தன்னுடைய உயிரை விடக்கூடிய சூழ்நிலையை யார் ஏற்படுத்தியது என்பதை இந்த தமிழகத்தில் உள்ள மக்கள் நன்றாக அறிவார்கள். குறிப்பாக, கன்னியாகுமரி தொகுதியைச் சேர்ந்த மக்கள் நன்றாக அறிவார்கள் என்பதை நான் இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அந்த நண்பர் இறந்த நேரத்திலே அந்த நண்பருடைய தாயாரையும், மனைவியையும் சென்று பார்ப்பதற்காக நானும் மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் ஆர். எம். வீ. அவர்களும் அங்கே சென்று இருந்தோம். அந்த பாலகிருஷ்ணனுடைய மனைவி விட்ட கண்ணீர்தான் இன்றைக்கு என்னைப் போன்றவர்கள் சட்டமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டு இங்கே பேச வாய்ப்பளித்தது. ஆனால் சட்டம் ஒழுங்கு சீர்குலைந்துவிட்டது என்று பேசுகின்றவர்கள்தான் இன்றைக்கு 20 ஆக ஜெயித்து வருகின்ற நிலைமைக்கு ஆளாக்கப்பட்டு இருக்கிறார்கள் என்பதை நான் சுட்டிக்காட்ட கடமைப்பட்டு இருக்கிறேன். அதேபோன்று சட்டம் ஒழுங்கைப்பற்றி குறிப்பிடுகிற நேரத்திலே மாவட்டம் முழுமையிலும் உள்ள அடிஷனல் டிஸ்டிரிக்ட் முன்சீப் கோர்ட் என்று சொல்லக்கூடிய கோர்ட்டுகள் மூடிக் கிடக்கின்ற சூழ்நிலை இருந்து வருகிறது என்பதைச் சுட்டிக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அந்தக் கோர்ட்டுகளை மிக விரைவில் திறப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசை நான் கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. கோ. பெருமாள் பிள்ளை] [1985 ஏப்ரல் 1

(முற்பகல் 10-30)

அடுத்து, 1985-86 ஆம் ஆண்டின் இந்த நிதிநிலை அறிக்கையிலே, வேளாண்மை உற்பத்திக்காக தொடர்ந்து ஆராய்ச்சி செய்வதற்கும், சிறந்த தொழில் நுட்பங்களை அறிமுகம் செய்து விரிவு படுத்துவதற்கும் ஒரு வேளாண்மைக் கல்லூரியை ஏற்படுத்த அனுமதி வழங்கியிருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அதைப் பாராட்டி வரவேற்கிற நேரத்தில் என்னுடைய கன்னியாகுமரி மாவட்டத்தில் இதுவரையில் எந்தவிதமான கல்லூரியையும் அரசு நிறுவவில்லை என்று சுட்டிக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆகவே துவக்க இருக்கிற வேளாண்மைக் கல்லூரியை என்னுடைய கன்னியாகுமரி தொகுதியில் அதுவும் திருப்பதிசாரம் என்ற பகுதியில் தொடங்கித் தருமாறு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். காரணம் அங்கே ஏற்கெனவே ஒரு விதைப் பண்ணையும், ஒரு விவசாய ஆராய்ச்சிக்கூடமும், அக்ரிகல்சுரல் ட்ரெயினிங் இன்ஸ்டிட்யூட்டும் அங்கே இயங்கி வருவதால், இந்த வேளாண்மைக் கல்லூரியை அங்கேயே அமைப்பது பொருத்தமாக இருக்கும் என்ற காரணத்தால், அந்தக் கல்லூரியை எங்கள் பக்கத்திலேயே அமைத்துத் தரவேண்டும் என்று மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களை நான் கேட்டுக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

1985-86 ஆம் ஆண்டில் 11.11 இலட்சம் செலவில் கயிறு உற்பத்தி மேம்பாட்டு திட்டத்தினை மேற்கொள்ள அரசு முனைந்துள்ளது என்ற கருத்தும் நிதிநிலை அறிக்கையிலே தெளிவாக எடுத்துக் காட்டப்பட்டிருக்கிறது. என்னுடைய தொகுதியைப் பொறுத்த மட்டில் நெல்லுக்கு அடுத்தபடியாக பயிரிடப்படுவது தென்னை, ரப்பர் ஆகியவைதான். ஆகவே கயிறு உற்பத்தி செய்வதற்கான மூலப் பொருள் முக்கியமாக அங்கே கிடைப்பதால் என்னுடைய பகுதியில் ஒரு கயிறு தொழிற்சாலையை நிறுவித் தரவேண்டும் என்று இந்த மாமன்றத்தின் மூலமாகக் கேட்டுக் கொள்கிறேன். அதேபோல ஒரு ரப்பர் தொழிற்சாலையையும் எங்களுடைய பகுதியிலே அமைத்துத் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். காரணம் இந்தியாவிலேயே கூடுதலாக ரப்பர் விளைவது எங்களுடைய மாவட்டம்தான். அதிலும் குறிப்பாக என்னுடைய தொகுதியிலேதான் ரப்பர் ஏராளமான அளவுக்குக் கிடைக்கிறது என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.



1985 ஏப்ரல் 1] [திரு. கோ. பெருமாள் பிள்ளை]

1985-86 ஆம் ஆண்டில் கல்வியின் தரத்தை உயர்த்துவதற்காக கூடுதலாக ஆசிரியர்களை நியமனம் செய்வதற்காகவும், பள்ளிக் கட்டிடங்களைக் கட்டுவதற்கு தனிக் கவனம் செலுத்த நடவடிக்கை எடுத்துக் கொண்டிருப்பதற்காகவும் நான் புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த நேரத்திலே என்னுடைய தொகுதியிலே ஒரு பொறியியல் கல்லூரியை நிறுவித் தரவேண்டும் என்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். அதற்காக எங்களுடைய பகுதியைச் சார்ந்த மக்கள் கலைவாணர் என்.எஸ்.கே. பொறியியல் கல்லூரி என்ற பெயரில் ஒரு கல்லூரியை நிறுவுவதற்காக முயற்சிகளை எடுத்துக்கொண்டு வருகிறார்கள். அந்தக் கல்லூரியை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என்றும், அதற்கான அனுமதியைத் தரவேண்டும் என்றும் இந்த நேரத்தில் அரசை நான் கேட்டுக் கொள்கிறேன்.

கல்வியினுடைய தரத்தை உயர்த்துவதோடு மட்டுமல்லாமல் அதை வாழ்க்கையோடு இணைந்த முறையில், ஒன்றிய நிலையில் மாற்றுவதற்காக தொழில்கல்வி திட்டம் என்ற புரட்சிகரமான திட்டத்தை இந்த நிதிநிலை அறிக்கையிலே கொண்டு வந்திருப்பதை மனதாரப் பாராட்டுகிறேன். காரணம் லட்சக்கணக்கான இளைஞர்கள் படித்துவிட்டு வேலை இல்லாமல் இருக்கிற நிலையை மாற்றுவதற்கு புரட்சித் தலைவர் அவர்களுடைய இந்தத் திட்டம் மிகவும் உதவிகரமாக இருக்கும் என்பதை இந்த நேரத்திலே சுட்டிக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். 6-வது ஐந்தாண்டுத் திட்டத்தின் இறுதியில் 107.69 கோடி செலவில் குடிதண்ணீர் பற்றாக்குறையைப் போக்குவதற்காக திட்டங்கள் தீட்டப்பட்டிருப்பதாக இந்த நிதிநிலை அறிக்கையிலே தெளிவாகச் சுட்டிக் காட்டியிருப்பதை நான் பாராட்டுகிறேன். இந்த நேரத்திலே என்னுடைய தொகுதி இந்தியாவின் கடைக்கோடியில் அமைந்திருக்கும் கன்னியாகுமரி என்பதையும் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். என்னுடைய பகுதியில் வாழ்கின்ற பெரும்பாலான மக்கள் மீனவ மக்கள். அந்த மக்களுக்கு நல்ல தண்ணீர் கிடைக்காத சூழ்நிலை இருக்கிறது. கன்னியாகுமரி சுற்று வட்டாரத்தில் எங்காவது கிணறு தோண்டினாலும் உப்பு தண்ணீர் கிடைக்கின்ற சூழ்நிலை இருக்கிறது. அவர்களுக்கு, நாகர்கோவில் முனிசிபாலிட்டியிலிருந்து, தண்ணீர் விடப்படு

கிறது. அது இரவு 2 மணிக்கு விடப்படுகிறது. இரவு இரண்டு மணிக்கு தாய்மார்கள் தண்ணீர் எடுப்பது என்பது மிகவும் கஷ்டமான நிலை. மீனவ மக்கள் இரவு நேரத்தில் கடலில் மீன் பிடிப்பதற்காக சென்று விடுகிறார்கள். அந்த நேரத்தில் அங்கேயுள்ள பெண்களுக்கு துணை இல்லாமல் இரவு 2 மணிக்கு வெளியிலே வந்து தண்ணீர் எடுக்க வேண்டும். இது சற்று வருந்தத்தக்க செயலாக இருப்பதால், இதனை மாற்றி அமைத்து உடனடியாக குடிநீர்த் திட்டத்தை ஏற்படுத்தித் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். குறிப்பாக அந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு உலக்கை ஏரித் திட்டம் நீண்ட காலமாக இருந்து வருகிறது. அந்தத் திட்டம் நிறைவேற்றப்படுமானால், கன்னியாகுமரி, நாகர்கோயில் நகரங்களில் முழுவதுமாக 24 மணி நேரமும் தண்ணீர் கிடைப்பதற்கு ஏதுவாகும்.

அதுமட்டுமல்லாமல் கன்னியாகுமரி நகரத்தினை ஒரு இன்டர்நேஷனல் டூரிஸ்ட் சென்டராக மாற்றித்தர வேண்டும் என்று நம்முடைய மாநில அரசு மத்திய அரசினை கேட்டுக் கொள்ள வேண்டும். கன்னியாகுமரி நகரத்தில் ஒரு ஆகாய விமான தளத்தை ஏற்படுத்துவதற்கு நம்முடைய அரசு மத்திய அரசைக் கேட்டுக்கொள்ள வேண்டும்.

எங்களுடைய பகுதியில் பெரும்பான்மையான மக்கள் விவசாயத்தை நம்பி இருக்கின்ற மக்கள். அந்த மக்களுக்கு இன்றைய தினம் 'நாஞ்சில் நகரம் என்று சொல்லும்போதினிலே, இன்பத் தேன் வந்து பாயுது காதினிலே' என்ற அந்த சூழ்நிலை மாறி இன்றையதினம் வறட்சி கொடுமை நடமாடுகின்ற சூழ்நிலை இருக்கிறது. அதைப் போக்குகின்ற பொய்கையாறு திட்டத்தையும், சர்வையாறு திட்டத்தையும், கடைவரம்பு நிலங்கள் கருகுகின்ற நிலையை மாற்றி, அங்குள்ள விவசாயிகள் முகங்களில் மலர்ச்சியை ஏற்படுத்துகின்ற ஒரு சூழ்நிலையை உருவாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கையை பாராட்டுகின்ற நேரத்தில் ஒன்றை குறிப்பிட விரும்புகிறேன். வரியை விதிக்கின்ற நேரத்திலும் சரி, சலுகை அளிக்கின்ற நேரத்திலும் சரி, ஏழை எளிய மக்களைப் பாதிக்காத விதத்தில் இந்த அறிக்கை தயார் செய்யப்பட்டிருப்பதால் நான் மனப்பூர்வமாக பாராட்டுகிறேன். மது





பானத்திற்கும், மோட்டார் வாகனங்களுக்கும் வரி உயர்த்தி இருப்பதை பாராட்டாமல் இருக்க முடியாது. காரணம் இத்தகைய வரிகளை உயர்த்துவதினால் ஏழை எளிய மக்கள் எந்தவிதத்திலும் பாதிக்கப்பட மாட்டார்கள் என்பதைத் தெளிவாகச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

என்னுடைய கன்னியாகுமரி மாவட்டத்தில் இரண்டு துறை முகங்கள் — சின்னமுட்டம், குளச்சல் — என்று இருக்கின்றன. இவற்றை விரிவுபடுத்தி கப்பல்கள் அடிக்கடி வந்து போகின்ற ஒரு சூழ்நிலையை உருவாக்கித் தந்தால், தொழில் துறையிலே வளர்ச்சி அடைகின்ற சூழ்நிலையை உருவாக்கும். ஆரல்வாய் மலையில் ஒரு கோ-ஆப்பரேட்டிவ் ஸ்பின்னிங் மில் இருக்கிறது. அது போன்று என்னுடைய அகஸ்தீஸ்வரம் பகுதியில் ஒரு கோ-ஆப்பரேட்டிவ் ஸ்பின்னிங் மில்லை இந்த அரசாங்கம் ஏற்படுத்தித் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இந்த நேரத்தில் எனக்கு நிதிநிலை அறிக்கையின்மீது பேசுவதற்கு ஒரு வாய்ப்பினை தந்ததற்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. சு. சிவராஜ்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தியத் திருநாட்டின் ஏற்றத்திற்கு பாடுபட்டு தன்னுடைய இன்னுயிரைத் தியாகம் செய்த அன்னை இந்திரா காந்தியை நினைவு கூர்ந்து, பாரதப் பிரதமர் ராஜீவ் காந்தி அவர்களுக்கும், என்னுடைய ரிஷிவந்தியம் தொகுதி வாக்காளப் பெரு மக்களுக்கும் என்னுடைய நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்துக்கொண்டு இந்த நிதிநிலை அறிக்கையின்மீது ஒரு சில கருத்துக்களை பேச விழைகின்றேன்.

(பிற்பகல் 10-40)

இந்த நிதிநிலை அறிக்கையிலே ஏழை எளிய குழந்தைகளுக்கு 13.5 கோடி ரூபாய் செலவில் சீருடை வழங்குவதும், ஏழை எளிய மாணவ மாணவியருக்கு 11.5 கோடி ரூபாய் செலவில் இலவசப் பாடப் புத்தகங்கள் வழங்குவதும் ஆகிய திட்டங்களைக் கொண்டு வந்திருக்கிற மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களின் தாயுள்ளத்தை நான் பாராட்டுகிறேன். அதைப்போலவே ஆதிதிராவிடர் மேம்பாட்டிற்காக 125.60 கோடி ரூபாய் ஒதுக்கியிருப்பதும் வர

[திரு. சு. சிவராஜ்] [1985 ஏப்ரல் 1

வேற்கத்தக்கது. 1985-86 ஆம் ஆண்டிலே 500 இடைநிலை ஆசிரியர்கள், 75 தமிழாசிரியர்கள், 50 உடற்பயிற்சி ஆசிரியர்கள், 150 பட்டதாரி ஆசிரியர்கள், 75 பட்ட மேற்படிப்பு ஆசிரியர்களை நியமிக்க வகை செய்திருப்பது வரவேற்கத்தக்கது. ஆனால் படிக்கும் மாணவர்களைக் கணக்கில் கொண்டு பார்க்கும்போது புதிய ஆசிரியர்களை நியமித்த பின்னரும் ஆசிரியர்கள் பற்றாக் குறை நீடிக்கும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

1985-86 ஆம் ஆண்டிலே புதிய தொழில்கள் தொடங்குவதன் மூலமாக சுமார் 840 பேர்களுக்கு வேலைவாய்ப்புக் கிடைக்க இருக்கிறது என்ற செய்தி வரவேற்கத்தக்கது. ஆனால் படித்துவிட்டு வேலையில்லாமல் இருக்கின்ற இளைஞர் கணக்கில் எடுத்துப் பார்த்தால் இந்தத் திட்டம் யானைப் பசிக்கு சோளப் பொரி போன்றுதான் இருக்கும். ஆகவே மேலும் புதிய தொழில்களைத் தொடங்கச் செய்து அதன் மூலமாக வேலைவாய்ப்புகளை உயர்த்த அரசு முன்வர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து கூட்டுறவுத் துறையின் மூலமாக 7-வது ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் இந்த ஆண்டு 10 சர்க்கரை ஆலைகள் தொடங்குவதாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அப்படி அமைய இருக்கிற ஆலைகளிலே ஒன்றை ரிஷிவந்தியத்திலே அமையச் செய்யவேண்டுமென்று தாழ்மையோடு நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து ஒரு சில பொருட்களுக்கு பலமுனை வரியாக இருந்ததை ஒருமுனை வரியாக மாற்றியிருப்பது வரவேற்கத்தக்கது. ஆனால் அதே சமயத்தில் மீதம் உள்ள பொருட்களுக்கும் ஒருமுனை வரியைக் கொண்டு வரவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். அப்படிச் செய்வதன் மூலம் வியாபாரிகளும் பலன் பெறுவார்கள், அரசுக்கும் இதன் மூலமாக அதிக வருவாய் கிடைக்கும்.

அடுத்து என்னுடைய தொகுதியிலே உள்ள சில குறைபாடுகளைக் கூற விரும்புகிறேன். திருக்கோயிலூர் அரசு மருத்துவமனையை விரிவுபடுத்தி, அங்கே நவீன அறுவை அரங்கம், எக்ஸ்ரே பிரிவு ஆகியவற்றை ஏற்படுத்தி அங்கே அதிகமான படுக்கைகளை ஏற்படுத்தித் தரவேண்டுமென்று நான் மக்கள் நல் வாழ்வுத்துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.



1985 ஏப்ரல் 1] [திரு. சு. சிவராஜ்]

திருக்கோயிலூரில் உள்ள கோட்டாட்சித் தலைவர் அலுவலகத்தை விழுப்புரத்திற்கு மாற்றுகிற எண்ணம் அரசுக்கு இருப்பதாகத் தெரிய வருகிறது. அங்கே இருக்கின்ற அந்த கோட்டாட்சித் தலைவர் அலுவலகம் வெள்ளையர் காலத்திலிருந்தே அங்கே இயங்கிக்கொண்டிருக்கிறது. தென் ஆற்காடு மாவட்டத்தை இரண்டாகப் பிரித்து ஒன்றிற்கு விழுப்புரத்தை தலைநகராக்குகின்ற திட்டம் அரசின் பரிசீலனையில் இருப்பதால் இந்த இடமாற்றம் அவசியமற்றது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் ரிஷிவந்தியம் ஒன்றியம் மிகவும் பின்தங்கிய பகுதியாக இருக்கிறது. அதற்கு அதிகமான நிதி உதவிகளைச் செய்து வளர்ச்சித் திட்டங்களை உருவாக்க வேண்டுமென்று நான் தாழ்மையோடு கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியிலே பல கட்டடங்கள் பழுதடைந்த நிலையிலே இருக்கின்றன. அவைகளையெல்லாம் புதுப்பிப்பதற்கு ஆவன செய்யவேண்டும். திருக்கோவிலூரில் உள்ள பெண்கள் ஆண்கள் மேல்நிலைப் பள்ளிகளில் போதிய கட்டட வசதி இல்லாமல் அங்கே இருக்கிற மரத்தடியில் மாணவ மாணவியர் படிக்கின்ற பரிதாபகரமான காட்சியைப் பார்க்கிறோம். ஆகவே அங்கே போதிய கட்டட வசதிகளை ஏற்படுத்தித்தரவேண்டுமென்று அதற்குத் தேவையான நிதி ஒதுக்குமாறு நான் கல்வி அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியிலே நெடுமுடையான், கனகநந்தல், துவான தாங்கல், மேல்தாழனூர், வரியான்குப்பம் போன்ற கிராமங்களுக்கு மின் இணைப்புக் கொடுக்கப்படவில்லை. ஆகவே நெடுமுடையான், கனகநந்தல், துவானதாங்கல், மேல்தாழனூர், வரியான்குப்பம் போன்ற கிராமங்களிலே புதிய மோட்டார்களுக்கு மின்னிணைப்புக் கேட்டு மனுக்கள் கொடுத்து 10 ஆண்டுகளுக்கு மேலாகியும் அதைப்பற்றி பரிசீலனை செய்யவில்லை. எந்தவிதமான தகவலும் வரவில்லை. ஆகவே அந்தக் கிராமங்களுக்கு புதிய மின் இணைப்புக்களை கொடுக்க மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் தாழ்மையோடு கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. சு. சிவராஜ்] [1985 ஏப்ரல் 1

என்னுடைய தொகுதியிலே அதிகமான கிராமங்களுக்கு குடிநீர் வசதி செய்து கொடுக்கப்படாமல் இருக்கிறது. இந்த வருடத்திற்குள்ளே அதிகமான நிதியை ஒதுக்கி குடிநீர் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து திருக்கோவிலூர் நகரத்திலே துணை மின்நிலையம் அமைப்பதற்கு நிலம் வாங்கப்பட்டு கடந்த 3 ஆண்டுகளுக்கு மேலாகியும்கூட இன்னும் ஆரம்பக் கட்ட வேலையைக்கூட தொடங்காமல் அப்படியே கிடப்பில் போடப்பட்டு இருக்கிறது. ஆகவே அங்கே ஒரு துணை மின்நிலையம் அமைப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்து இந்த வருட இறுதிக்குள்ளாக அதைப் பூர்த்தி செய்ய வேண்டுமென்று நான் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து கிராமப்புறங்களை நகர்ப்புறங்களோடு இணைக்கின்ற திட்டத்திலே மாண்புமிகு முதல்வர் அவர்கள் தீவிர கவனம் செலுத்தி வருகிறார்கள். ஆனால் என்னுடைய தொகுதியிலே பல கிராமங்களிலே இன்னும் ஆரம்பக் கட்டமாக மண்சாலைகூட போடாத நிலைமை இருக்கிறது. ஆகவே அரசு இதையெல்லாம் கவனித்து ஆவன செய்யவேண்டும்.

ஆதி திராவிட மக்களுக்கு கட்டித் தரப்பட்டுள்ள வீடுகள் என்னுடைய தொகுதியில் மிகவும் குறைந்த அளவில் உள்ளது. என்னுடைய தொகுதியில் சுமார் 30 ஆயிரத்திற்கும் அதிகமான ஆதி திராவிட அரிசன மக்கள் வாழ்கிறார்கள். அவர்களுக்கு வீடுகள் கட்டித் தரும் திட்டத்தின்கீழ் என்னுடைய தொகுதிக்கு அதிகமான நிதியை அளித்து அவர்கள் பயன்பெற செய்ய வேண்டுமாய் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

திருக்கோவிலூர் பேரூராட்சி நகராட்சியாக அறிவிக்கப்பட்டும் அந்த பேரூராட்சியில் நிதி இல்லாத காரணத்தால் எந்தவிதமான வளர்ச்சிப் பணியும் மேற்கொள்ளப்படவில்லை. அங்கே இருக்கும் ஊழியர்களுக்கு இரண்டு மாத காலமாக சம்பளம் வழங்க முடியாத நிலையில் அங்கே இருக்கிறது. இதை அரசின் கவனத்திற்கு கொண்டு வருகிறேன். அந்த பேரூராட்சிக்கு அதிகமான நிதியை அளிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.



1985 ஏப்ரல் 1] [திரு. சு. சிவராஜ்]

திருக்கோவிலூர் பெண்ணை ஆற்றின் நடுவில் சங்க கால புலவர் கபிலர் வாழ்ந்து மறைந்த குன்று உள்ளது. அந்த குன்று மிகவும் சீர்கெட்டு உள்ளது. அந்த குன்றினை சீர்படுத்தி அங்கு ஆண்டுதோறும் கபிலர் விழா நடத்த ஏற்பாடு செய்யவேண்டும என்று மாண்புமிகு சுற்றுலா அமைச்சர் அவர்களை மிகவும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன். திருக்கோவிலூர் நகரத்தில் கலைக்கல்லூரி ஒன்றையும், தொழில் கல்வி நிலையம் ஒன்றையும் ஏற்படுத்தித் தர வேண்டும் என்று கல்வி அமைச்சர் அவர்களை பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன். மணலூர்பேட்டை, தியாகதுர்கம் இரண்டு சாலையையும் இணைத்து பெண்ணை ஆற்றின் குறுக்கே மேம்பாலம் கட்ட ஏற்கனவே ஒரு கோடி ரூபாய் செலவில் ஒரு திட்டம் தீட்டப்பட்டு அரசின் நிதி பற்றாக்குறை காரணமாக அந்தத் திட்டம் கைவிடப்பட்டு இருப்பினும் தற்போது 30 லட்சம் ரூபாய் செலவில் ஒரு தரைப் பாலம் கட்டுவதற்கு அரசின் பரிசீலனையில் உள்ளது. அந்த பரிந்துரையை ஏற்றுக்கொண்டு அரசு அதற்கு ஆவன செய்து அந்த தரைப்பாலத்தை உடனே கட்டித் தருவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அந்த பாலம் கட்டி முடிக்கப்பட்டால் மதுரை, திருச்சி, தஞ்சாவூர் போன்ற இடங்களிலிருந்து திருவண்ணாமலை, வேலூர், சித்தூர், திருப்பதி போன்ற இடங்களுக்கு செல்பவர்களுக்கு பயண தூரம் 20, 25 கிலோ மீட்டர் குறையும் என்பதை அரசின் கவனத்திற்கு நான் கொண்டு வர விரும்புகிறேன்.

தென் ஆர்க்காடு மாவட்டத்திலே செஞ்சி, திருக்கோவிலூர் ஆகிய இரண்டு தாலுக்கா தலைநகரங்களில் இன்னும் நகர பேருந்து விடவில்லை. ஆகவே, பெரியார் போக்குவரத்து கழக பணிமனை ஒன்றையும் நகர பேருந்தையும் விடுவதற்கு மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

தென் ஆர்க்காடு மாவட்டத்தில் பூமிக்கு அடியில் சுமார் 800 அடிக்கு கீழ் கடல் போன்ற நீர் வளம் இருப்பதாக ஒரு ஆய்வில் கண்டுபிடித்து இருக்கிறார்கள். அந்த ஆய்வின்படி அங்கே ஆழ்துளை குழாய் கிணறுகள் அமைத்து அந்த நீரை வெளியே

கொண்டு வந்து கூட்டுறவுத் துறையின் மூலம் கூட்டுறவு பாசன வசதி செய்து கொடுத்தால் அந்த மாவட்டத்தில் உள்ள விவசாயிகள் அனைவரும் மிகுந்த பயன்பெறுவார்கள் என்பதை நான் மிகவும் பணிவன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன.

பெண்ணை ஆற்றிலிருந்து புதிய கால்வாய் ஒன்றினை முகளாறு வரை வெட்டுவதன் மூலம் கரடி, தொட்டி, கனகநந்தல், வடியான்குப்பம், நெடுங்குடையான், செட்டித்தாங்கள், வேங்கூர், பழுங்கூர், ஆளூர் ஆகிய கிராமங்களில் உள்ள சுமார் இரண்டு ஆயிரம் ஏக்கர் நிலம் பாசன வசதி பெறும். இந்த பகுதிகளில் மிகவும் பின்தங்கிய பகுதியாகவும், வறண்ட பகுதியாகவும் இருப்பதால் இந்த வாய்க்கால் வெட்டும் வேலையை தொடங்கி அவர்களுக்கு பாசனவசதி செய்து கொடுத்தால் அந்த பகுதியில் உள்ள விவசாயிகள் மிகுந்த பயன்பெறுவார்கள் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன். இந்த வளர்ச்சித் திட்டங்களை என்னுடைய தொகுதியில் மிக விரைவாக மேற்கொண்டு தொகுதி மக்களுக்கு ஆவன செய்து தர வேண்டும் என்று நான் இந்த அரசை கேட்டுக்கொண்டு விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

(முற்பகல் 10-50)

* **திரு. அ. மலர்மன்னன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, தமிழக அரசின் 1985-86-வது ஆண்டின் நிதி நிலை அறிக்கையின்மீது என் கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகின்றேன். நான் தமிழகத்தின் நடுநாயகமாக விளங்குகின்ற திருச்சி மாநகரிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளேன். பேரறிஞர் அண்ணா அவர்கள் தனது வாழ்க்கையில் பல வரலாற்றுச் சிறப்புமிக்க அரசியல் முடிவுகளை அறிவிப்பதற்குத் தேர்ந்தெடுத்த இடமே திருச்சி மாநகராமாகும். இன்றையதினம் இந்த மாமன்றத்திலே அமைச்சர் பெருமக்களாகவும், சட்டமன்ற உறுப்பினர்களாகவும் இருக்கின்றோம் என்றால் அந்த முடிவினை மேற்கொண்ட இடமே திருச்சி மாநகரம்தான் என்பதனை இந்த நேரத்திலே பெருமையோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். பேரறிஞர் அண்ணா அவர்கள் வழியிலே வந்ததாகக் கூறிக் கொள்ளும் இந்த அரசு அண்ணாவின் கொள்கைகளுக்கு விரோதமாக நடந்து வருகிறது என்பதனை இந்த நேரத்திலே





நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். எந்த மதுவிலக்குக் கொள்கையை அண்ணா அவர்கள் தீவிரமாக ஏற்றுக் கொண்டிருந்தார்களோ அந்தக் கொள்கையைக் காற்றிலே பறக்க விட்டு தமிழகமெங்கும் சாராய சாம்ராஜ்யத்தை நடத்திக் கொண்டிருக்கின்றீர்கள்.

நமது மாண்புமிகு முதலமைச்சரவர்கள் சில மாதங்களுக்கு முன்பு இந்த ஆண்டு செப்டம்பர் 15 ஆம் தேதி—நம்முடைய இதய தெய்வம் பேரறிஞர் அண்ணா அவர்கள் பிறந்த தினத்திலிருந்து மதுவிலக்குக் கொள்கையை மீண்டும் அமல் படுத்துவேன் என்று கூறுரைத்தார்கள். ஆனால் இந்த நிதிநிலை அறிக்கையிலே பார்த்தால் மதுவிலக்கைத் தீவிரமாக அமல் படுத்துவதற்கு எந்தவிதமான அறிகுறிகளும் தென்படவில்லை என்பதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஆனால் அதற்கு முரணாக நமது நிதியமைச்சர் நாவலர் அவர்கள் சாராயத்திற்கு உற்பத்தி வரியையும், விற்பனை வரியையும் கூட்டியுள்ளார்கள். இந்த நிதியாண்டின் அறிக்கையிலே எக்சைஸ் வரியாகக் கிட்டத்தட்ட ரூபாய் 220 கோடி கிடைக்கும் என்றும், வரும் நிதி ஆண்டிலே ரூபாய் 230 கோடி கிடைக்கும் என்றும் மதிப்பிடப்பட்டுள்ளது. ஏழையின் சிரிப்பிலே இறைவனைக் காண்போம் என்று நமது அறிஞர் அண்ணா அவர்கள் சொன்னார்கள். ஆனால் இன்றைய ஆட்சியிலே ஏழைத் தாய்மார்களின் கண்ணீரிலேதான் நீங்கள் இறைவனைக் கண்டு கொண்டு இருக்கின்றீர்கள்.

வறுமைக் கோட்டிற்கு கீழே உள்ள மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு மத்திய அரசும், மாநில அரசுகளும் கோடிக் கணக்கான ரூபாய்களைச் செலவு செய்கின்றன. ஆனால் வறுமை ஒழிந்ததா என்றால் அது கேள்விக்குறியாகத்தான் இன்றையதினம் இருந்துகொண்டிருக்கிறது.

வந்தே மாதரம், வந்தே மாதரம் என்று சொல்லுவார்கள்; இன்றைக்கு வந்து ஏமாற்றிக் கொண்டிருக்கிறார்கள். "ஆடுவோமே பள்ளுப் பாடுவோமே, ஆனந்த சுதந்திரம் அடைந்து விட்டோமே" என்று பாடினார்கள். ஆனால் 38 ஆண்டுக்

காலமாக நாம் பாடிக் கொண்டும் ஆடிக்கொண்டும் இருக்கிறோமே தவிர வறுமை ஒழிந்ததா என்பதை இந்த நேரத்தில் கேட்க விரும்புகிறேன்.

கிராமங்களிலேயும், நகரங்களிலேயும் பாடுபடுகின்ற ஏழைப் பாட்டாளி 7 ரூபாய் அல்லது 10 ரூபாய் கூலி பெறுகின்ற தொழிலாளி அந்தப் பணம் முழுவதையும் சாராயக் கடைகளிலே சீரழித்து விடுகிறான் என்பது இன்றைக்கு நாட்டிலே நடைபெறுகின்ற உண்மையாகும்.

காகிதப் பூ மணக்காது, காங்கிரஸ் சோஷலிசம் இனிக்காது என்று நம்முடைய பேரறிஞர் அண்ணா அவர்கள் எடுத்துச் சொல்வார்கள். உங்கள் கட்சியிலே, கரும்புச் சக்கையை மூலப் பொருளாக வைத்து மிகப் பெரிய காகித ஆலையைத் துவக்கப் போவதாக அறிவித்தீர்கள். இந்தத் திட்டத்தை நான்காண்டுகளுக்கு முன்பு துவக்கியபொழுது இதனுடைய செலவு 150 கோடி ரூபாய் என்று மதிப்பிடப்பட்டது. ஆனால் இப்பொழுது இந்தத் திட்டத்தின் மொத்தச் செலவு 230 கோடி என்று சொல்லப்படுகிறது. ஆனால் இந்தத் திட்டம் முடிவடையும்போதே எவ்வளவு தொகை ஆகும் என்று தெரியாது. இந்தத் தொழிற்சாலை எங்கள் மாவட்டத்திலே உள்ள புகளூரிலே அமைக்கப்பட்டிருக்கிறது. 1984-ஆம் ஆண்டே இந்தத் தொழிற்சாலை உற்பத்தியைத் தொடங்கும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனால் உற்பத்தி தொடங்கப்படும் என்பது குறித்து இன்னும் தெளிவாகத் தெரியவில்லை. இதில் இன்னும் ஒரு வேடிக்கை என்னவென்றால் இந்தத் தொழிற்சாலைக்குத் தேவையான கரும்புச் சக்கைகளை 5 சர்க்கரை ஆலைகளிலிருந்து பெற்று அதற்குப் பதிலாக அந்த ஆலைகளுக்கு நிலக்கரியிலே இயங்கும் பாய்லர்கள் வழங்கப்படும் என்று கூறப்பட்டிருக்கிறது. இது எப்படி இருக்கின்றது என்றால் கொக்கு தலையிலே வெண்ணை வைத்து அது உருகி வழிந்தபிறகு அந்தக் கொக்கைப் பிடிப்போம் என்று சொல்வது போல் இருக்கின்றது. அனல் நிலையங்களுக்கு நிலக்கரி தட்டுப்பாடு அடிக்கடி ஏற்பட்டு மின் உற்பத்தி தடைபடுகின்ற காரணத்தால் திருச்சி போன்ற பெருநகரங்களில் இரண்டு மணி நேரம்தான் மின்சாரம் தரப்பட்டுக் கொண்டிருக்கிறது. அதன் காரணத்தால் தமிழகத்தின் மின்சார வாரியம் அண்மையிலே மத்திய அரசிடம் ஆஸ்திரேலியாவிலிருந்து நிலக்கரி இறக்குமதி செய்ய அனுமதி கேட்டிருக்கின்றது. இப்படிப்பட்ட சூழ்நிலையில் காகிதத் தொழிற்சாலைக்குக் கரும்புச் சக்கை அளிக்கும் சர்க்கரை ஆலைகளுக்கு எப்படி நீங்கள் நிலக்கரி தரப் போகிறீர்கள். இதற்கு என்ன உத்திரவாதம் அளிக்கப் போகிறீர்கள். இந்தத் தொழிற்சாலை கரூர் மாவட்டத்தில் அமைந்திருந்தாலும், கரூர் மக்களுக்கு வேலைவாய்ப்பில் முன்னுரிமை அளிக்கப்படவில்லை என்ற குற்றச்சாட்டை நான் சுமத்துகிறேன்.





இந்தத் தொழிற்சாலை பொருளாதார ரீதியில் வெற்றிகரமாக அமையுமா என்று பொறியியல் வல்லுநர்கள் எல்லாம் சந்தேகத்திற்குரிய வகையில் இன்றைக்குச் சொல்லி கொண்டிருக்கிறார்கள். எனவே புதிய தொழிற்சாலை உங்களுடைய ஆட்சியிலே ஏற்படாவிட்டாலும் இருக்கின்ற தொழிற்சாலைகளாவது உங்களுடைய ஆட்சியிலே ஒழுங்காக நடக்கிறதா என்றால் அதுவும் சரியாக இல்லை என்பது குறித்து ரிசர்வ் வங்கியில் அறிக்கை ஒன்றிலே சொல்லப்பட்டிருக்கின்றது. 1983-84 ஆம் ஆண்டிலே தமிழகத்திலே 46 பெரிய தொழிற்சாலைகள் நலிந்த நிலையில் சிக் யூனிட்டாக ஆகிவிட்டதாக சொல்லப்பட்டிருக்கின்றது. அதுபோலவே சிறிய தொழிற்சாலைகளைப் பொறுத்தமட்டில் 1983-ஆம் ஆண்டுத் தொடக்கத்தில் நமது நாட்டில் 58,549 சிறிய தொழிற்சாலைகள் நலிவு இழந்து சிக் யூனிட்டாக இருந்தன. ஆனால் இன்றைக்கு தமிழகத்தில் மட்டும் 8 ஆயிரம் சிறிய தொழிற்சாலைகள் நலிவுற்று இருந்தன என்று நான் கூறவில்லை. ரிசர்வ் வங்கி கூறியிருப்பதை எடுத்துக்காட்டாக இந்த மன்றத்தில் வைக்க நான் விரும்புகிறேன்.

அடுத்து வறுமைக்கோட்டிற்குக் கீழே வசிக்கின்ற மக்களின் எண்ணிக்கை உங்களுடைய ஆட்சியில் குறைத்திருக்கிறதா என்றால் அதுவும் இதே நிலையில்தான் இருந்து கொண்டிருக்கிறது. அதற்கு சான்று தேவைப்பட்டால் அதையும் சொல்கிறேன். நேஷனல் சாம்பிள் சர்வே அறிக்கைப்படி தமிழக மக்கள் தொகையில் 57-2 விழுக்காடு மக்கள் வறுமைக்கோட்டின் கீழ் வசித்துக்கொண்டிருக்கிறார்கள் என்று இன்றையதினம் சொல்லப்படுகின்றது. ஆனால் தேசிய சராசரி விழுக்காடு 48.13-ஆக இன்றையதினம் இருந்துகொண்டிருக்கிறது. தமிழகத்தில்

[திரு. அ. மலர்மன்னன்] [1985 ஏப்ரல் 1

மட்டும் 237.06 இலட்சம் மக்கள் வறுமைக்கோட்டிற்குக் கீழே வாழ்கிறார்கள் என்று நேஷனல் சாம்பிள் சர்வே அறிக்கையில் கூறப்பட்டிருக்கின்றது.

நீங்கள் உங்களுடைய கொள்கைக் குறிப்பிலேயே இந்தப் புள்ளிவிவரங்களைச் சுட்டிக்காட்டியிருக்கிறீர்கள். வறுமைக் கோட்டின் கீழ் வாழ்பவர்களைப் பொறுத்தவரையில் ஒவ்வொரு குடும்பத்திலும் ஒவ்வொருவருக்கு வேலைவாய்ப்பு கொடுக்க இருப்பதாகச் சொன்னீர்கள். ஆனால் தமிழகத்தில் கிட்டத்தட்ட 120 இலட்சம் குடும்பங்களுக்குக் குடும்பக் கார்டு வழங்கியிருக்கிறீர்கள். தமிழக அரசின் கணக்கெடுப்பின்படி இந்த மாநிலத்தில் 58 சதவீதம் மக்கள் வறுமைக்கோட்டிற்குக் கீழே வாழ்கிறார்கள். எனவே உங்கள் கணக்கின்படி குடும்பத்திற்கு ஒருவருக்கு வேலை வாய்ப்பு கொடுப்பதாக இருந்தால் 60 லட்சம் பேர்களுக்கு நீங்கள் வேலை வாய்ப்பு கொடுத்திருக்கவேண்டும். இந்த 60 இலட்சம் பேர்களுக்கும் எப்படி நீங்கள் வேலைவாய்ப்பை அளிக்கப் போகிறீர்கள் என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். இது குறித்து இந்த நிதிநிலை அறிக்கையில் எதுவும் குறிப்பிடப்படவில்லை என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அண்ணா அவர்கள் 'காகிதப் பூ மணக்காது' என்று சொன்னதுபோல் இந்தக் காகிதத் திட்டங்கள் மணக்காது என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

(முற்பகல் 11-00)

தமிழகத்திலே ஆசிரியர் பயிற்சி நிலையங்களில் பயிற்சி பெற்ற பல்லாயிரக்கணக்கான செகண்டரி கிரேட் ஆசிரியர்கள் இன்றைக்கு வேலைவாய்ப்பின்றி இருந்துகொண்டிருக்கிறார்கள். அது போலவே பி.எட். படித்துவிட்டு ஆயிரக்கணக்கான பேர் வேலையில்லாமல் அவதிப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் இந்த நிதிநிலை அறிக்கையில் யானைப்பசிக்கு சோளப்பொறி என்பது போல் 500 இடைநிலை ஆசிரியர்களுக்குத்தான் இந்த ஆண்டு வேலைவாய்ப்பு அளிக்கப்படும் என்று கூறியிருக்கிறீர்கள். அதைப் போலவே, பி.எட். பட்டம் பெற்ற 150 பேர்களுக்குத்தான் வேலை



1985 ஏப்ரல் 1] [திரு. அ. மலர்மன்னன்]

வாய்ப்பு கிடைக்கும் என்று இந்த நிதிநிலை அறிக்கையிலே கூறியிருக்கிறார்கள். 4, 5 ஆண்டுகள் பாலிடெக்னிக்கிலே படித்து டிப்ளமோ பெற்று வெளியேறி பட்டதாரிகள் இன்றையதினம் வேலை வாய்ப்பு அலுவலகத்திற்கு நடந்து கொண்டிருக்கின்றனர். அந்த நிலையிலே இந்த ஆண்டு 57 சுயநிதி பாலிடெக்னிக்குகளுக்கு அங்கீகாரம் அளித்திருக்கிறார்கள். நீங்கள் ஒன்றை அவர்களுக்குத் தெளிவாகச் சொல்லியிருக்கிறீர்கள். இந்த பாலிடெக்னிக் நிர்வாகிகள் நன்கொடை பெறக் கூடாது என்ற உத்தரவாதத்தைக் கேட்டு வாங்கியதற்குப் பின்னால் அனுமதி அளித்திருக்கிறீர்கள். ஆனால், இன்றையதினம் பாலிடெக்னிக் நடத்துகின்ற நிர்வாகிகள் 15,000, 20,000 என்று நிதியைப் பெற்றுக் கொண்டுதான் சீட்டுகளை வழங்கிக் கொண்டிருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். 15,000, 20,000 கொடுக்கக்கூடிய நிலையிலே இந்த நாட்டிலே மக்கள் இருக்கிறார்களா என்பதை இந்த நேரத்திலே நினைத்துப் பார்க்க வேண்டும். ஆகவே, ஏழையின் சிரிப்பிலே இறைவனைக் காண்பேன் என்று சொன்ன அண்ணாவின் கொள்கை எந்த அளவிற்கு உங்களால் சீர்குலைக்கப்பட்டிருக்கிறது என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

படித்த இளைஞர்களிடத்திலே வேலையில்லாத் திண்டாட்டம் நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டு வருகிறது. தமிழக அரசு கொடுத்துள்ள புள்ளி விவரங்களைப் பார்த்தாலே அது நன்கு புலப்படும். 1983 ஆம் ஆண்டு துவக்கத்திலே வேலை வாய்ப்பகத்திலே பதிவு செய்துகொண்ட படித்த இளைஞர்கள் எண்ணிக்கை 14,15,918 என்று இருந்தது. ஆனால், சென்ற ஆண்டு துவக்கத்திலே அது 15,36,391 ஆக உயர்ந்திருக்கிறது. இந்த ஆண்டு துவக்கத்திலே இந்த எண்ணிக்கை மேலும் உயர்ந்திருக்க வேண்டுமென்பதனை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன். அவர்களுக்கெல்லாம் இந்த அரசு எப்படி வேலை வாய்ப்புத் தரப் போகிறது என்பதை இந்த நேரத்திலே நான் கேட்க விரும்புகிறேன்.

தமிழக அரசுக்கு வருமானம் தருகின்ற மிக முக்கியமான ஒன்று விற்பனை வரியாகும். இந்த விற்பனை வரியின் மூலம் ஆண்டு ஒன்றுக்கு ரூ. 900 கோடி வருமானம் கிடைத்துக் கொண்டிருக்கிறது. அந்த வியாபார மக்களது நியாயமான கோரிக்கை

[திரு. அ. மலர்மன்னன்] [1985 ஏப்ரல் 1

கேட்டுக் கொள்கிறேன். இந்த நிதிநிலை அறிக்கை திருப்தி யளிக்காத அறிக்கையாக இருக்கிறது என்று தெரிவித்து, வாய்ப் பிற்கு நன்றி கூறி முடித்துக் கொள்கிறேன்.

**டாக்டர் கே. பி. இராமலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு டாக்டர் நாவலர் அவர்கள் கொண்டு வந்துள்ள புரட்சித் தலைவர் அரசின் 1985-86-ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கையை வரவேற்று என்னுடைய உரையைத் துவக்குகிறேன். 1977 ஆம் ஆண்டிலிருந்து இது வரையில் எட்டு நிதிநிலை அறிக்கைகளைத் தந்து, இன்றைக்கு ஒன்பதாவது நிதிநிலை அறிக்கையாக புரட்சித் தலைவரின் அண்ணாவின் அரசு இன்றைக்கு தமிழகத்திற்கு தந்திருக்கிறது. இந்த நாட்டு மக்களுக்கு நல்ல பல திட்டங்களை, நலம் பயக்கும் திட்டங்களைத் தாங்கி இந்த அறிக்கை இருக்கிறது. அடித் தளத்து மக்களின் எண்ணங்களுக்கும், அடித்தளத்து மக்களின் பால் பேரன்பும், மதிப்பும், பாசமும் கொண்டிருக்கிற புரட்சித் தலைவர் இன்றைக்கு நாட்டு மக்களுக்கு, உழைக்கும் வர்க்கத் திற்கு, தொழிலாளர் நண்பர்களுக்கு, அனைத்துத்தர மக்க ளுக்கும் நலம் பயக்கிற விதத்திலே, முந்தைய காலங்களில் எப்படி திட்டங்களைத் தீட்டினார்களோ, அதேபோல இந்த முறையும் திட்டங்களைத் தீட்டி, முந்தைய காலத் திட்டங்களுக்கெல்லாம் முன்னேற்றத்தை உருவாக்கி, தமிழ் திருநாட்டை வளமுடைய தாக்க இந்த நிதிநிலை அறிக்கையை கொண்டு வந்திருக்கி றார்கள். மிகப்பெரிய இந்த முயற்சியை நான் நெஞ்சார பாராட்ட கடமைப்பட்டிருக்கிறேன். குறிப்பாக டாக்டர் நாவலர் அவர்கள் இன்றைக்கு கொண்டு வந்திருக்கிற இந்த நிதி நிலை அறிக்கையில் மக்களுக்கு அதிக பளு இல்லாமல், ஏற்கனவே மத்திய அரசு வரிகளை இந்திய மக்கள் மீது சுமத்தியிருக்கிற இந்த நேரத்தில், அவர்கள் மீது மேலும் பாரத்தை ஏற்றாமல் சர்வஜாக்கிரதையாக பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் இதே நிலையில் நாம் போனால் நாம் இன்றைக்கு சிறந்த மாநிலம் என்றிருக்கிற நிலை மாறி பின்னோக்கி தள்ளப்பட்டு விடுவோமோ என்ற அச்சத்தின் காரணமாக சிலவற்றை குறிப்பிட விரும்பு கிறேன்.

இந்திய துணைக் கண்டத்திலேயே சிறப்பான நிர்வாகத்தை, சிறந்த ஆட்சியை நாட்டுமக்களுக்கு செய்கிற வகையிலே நல்ல ஒரு முன்னேற்றத்தைக் கொண்டிருக்கிற மாநிலம் இந்தியாவி லேயே தமிழகம்தான் என்று அனைவராலும் பாராட்டப்படுகிறது. அந்தத் தமிழகத்திற்கு வழங்கப்படுகிற நிதியோ, அவ்வப்போது குறைந்து கொண்டே வருகிறது என்பதை ஒவ்வொரு முறையும் குறிப்பிட்டுக் கொண்டு இருக்கிறோம். அதற்கு காரணம் வரி வசூலிக்கிற அதிகாரங்களையும், அதிக வரத்துக்கள் இருக்கிற அனைத்து வரிகளையும் மத்திய அரசாங்கமே வைத்துக் கொண்டிருக்கிறது. மாநிலங்களுக்கு வருவாய் வருகிற சிற்சில வரிகளையும் மத்திய அரசாங்கம் படிப்படியாக எடுத்துக்கொண்டு வருகிறபோது, அந்தந்த மாநிலங்கள் தங்கள் தேவைகளுக்கேற்ப போடுகிற திட்டங்கள் பாழ்பட்டு போகிற சூழ்நிலை ஏற்பட்டுக் கொண்டே இருக்கிறது. இந்த

(முற்பகல் 11-10)

நிலை மாற்றப்பட்டாக வேண்டுமென்று இந்த மன்றத்திலே பேரறிஞர் அண்ணா அவர்களும் தமிழக ஆட்சிப் பொறுப்பிலே வந்திருக்கிற அண்ணாவின் கொள்கையை இதயத்திலே தாங்கியிருக்கிற மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களும் சொல்லிக் கொண்டு வந்திருக்கிறார்கள். ஆனாலும் இதற்கு ஒரு முடிந்த முடிவாக இல்லாமல், பாரபட்சம் காட்டுகிற நிலைமையில்தான் மத்திய அரசு செயல்பட்டுக்கொண்டிருக்கிறது என்பதை எடுத்துக்காட்டி, இந்த நிலை இனிமேலும் நீடிக்கக்கூடாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதே நேரத்தில் ஒவ்வொரு மாநிலத்திலிருந்தும் மத்திய அரசு வசூல் செய்கின்ற வரித் தொகை எவ்வளவு, அதைப்போன்று மத்திய அரசு மாநில அரசுக்குத் திருப்பிக் கொடுக்கின்ற சலுகை அல்லது பிளானிங் கமிஷன் ஒதுக்கீடு செய்கின்ற பணம் எவ்வளவு என்கிற விகிதாச்சாரத்தைப் பார்க்கும் நிலை ஏற்பட்டுவிடுமோ என்று நான் எண்ணுகிறேன். காரணம் இந்தியத் துணைக் கண்டத்திலேயே மத்திய அரசுக்கு ஒழுங்காக வரி செலுத்துகின்ற, அதிகமாக வரி செலுத்துகின்ற மாநிலம் தமிழகமாகத்தான் இருக்கிறது. ஆனால் மாநில அரசுக்குத் திருப்பித் தரும்போது வேறு மாநிலங்களுக்கு அதிகமாகக் கொடுத்துவிட்டு, அதற்கு

[டாக்டர் கே. பி. இராமலிங்கம்] [1985 ஏப்ரல் 1

காரணம் அவை பாதிக்கப்பட்ட மாநிலங்கள் என்று கூறி, நம்மைப் பாரா முகமாக் இருக்கிறார்கள். இனிமேல் இந்த மாதிரி இருக்கக்கூடாது என்று நாம் வலியுறுத்த வேண்டும்.

நான் இதைச் சொல்வதற்குக் காரணம் இந்த அதிகாரங்கள் பகிர்ந்து அளிக்கப்படுவது சம்பந்தமாகத்தான் சர்க்காரியா கமிஷன் அமைக்கப்பட்டிருக்கிறது. மாநிலங்களுக்கு எந்த எந்த வகையிலே அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டும், அதிகாரங்கள் எல்லாம் பரவலாக்கப்பட வேண்டும் என்று தென் மாநில முதலமைச்சர்கள் கூட்டத்திற்குப் பின்னால் இந்த அதிகாரங்கள் பற்றி வரையறை செய்ய மறைந்த பிரதமர் அன்னை இந்திரா காந்தி அவர்கள் சர்க்காரியா கமிஷன் நியமித்தார்கள். அந்தக் கமிஷன் அறிக்கையை விரைவிலேயே மத்திய அரசு வெளியிட்டு, மாநிலங்களுக்குத் தேவையான அதிகாரங்களை அளிக்க வேண்டுமென்று இந்த மாமன்றத்தின் வாயிலாக மத்திய அரசை வலியுறுத்திக் கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அதைப்போன்று நேரு அவர்கள் தந்த இருமொழிக் கொள்கை இருக்கிறது. இன்றைக்குக்கூட அதுகுறித்து வாக்குறுதி அளிக்கிறார்கள், உறுதிமொழி கூறுகிறார்கள். ஆனால் அதை எல்லாம் மாற்றுகின்ற எண்ணம் உடையவர்கள் இன்றைக்கு நம்முடைய மாமன்றத்தில்கூட இருக்கிறார்கள். நான் இப்படிக் கூறுவதற்குக் காரணம் என்னவென்றால் 6,000 மைல்களுக்கு அப்பால் இருக்கிற ஆங்கில மொழியைக் கற்கும்போது இந்திய நாட்டிலே இருக்கிற இந்தி மொழியைக் கற்கக்கூடாதா என்று கேட்கிறார்கள். இது எதைக் காட்டுகிறது என்றால் படிப்படியாக நாம் மத்திய அரசை ஆணித்தரமாக வாதாடிக் கேட்கவேண்டிய கட்டாயத்திற்கு வந்துவிட வேண்டுமோ என்ற நிலை வந்திருக்கிறது.

நேற்றைக்கு பஞ்சாப் மாநிலத்திலே ஒரு பல்கலைக் கழக விழாவில் ஒருவர் பேசும்போது இந்தியை ஆட்சிமொழியாக ஆக்க வேண்டும்; அதற்கு விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும். எந்த மாநிலமாக இருந்தாலும் இந்தியை தலையாய மொழியாக வைத்து ஆட்சி நடத்த வேண்டுமென்று பேசியிருக்கிறார். அது ஒரு பெரும் பயத்தை உருவாக்கியிருக்கிறது. இந்தநிலை எங்கே போய் முடியும் என்றால் இந்தியத் துணைக்கண்டத்தில்



1985 ஏப்ரல் 1] [டாக்டர் கே. பி. இராமலிங்கம்]

முழுவதும் இந்தியே வந்துவிடுமோ என்கிற அச்சம் நமக்கு ஏற்படுகிறது. இந்த அச்சத்தைப் போக்குகிற வகையில்தான் தேர்தலுக்கு முன்னால் இன்றைய பிரதமர் இராஜீவ் காந்தி அவர்களும் அதற்கு முன்னால் அன்னை இந்திரா காந்தி அவர்களும் நேரு கொடுத்த உறுதிமொழியில் மாற்றம் இருக்காது என்று உறுதியளித்திருந்தார்கள். உறுதிமொழி என்று சொன்ன பின்னால், ஒவ்வொரு தடவையும் நமக்கு அச்சம் ஏற்படுகின்ற முறையிலேயே செயல்கள் நடைபெறுகின்றன, பேச்சுக்கள் அமைகின்றன. எனவே அந்த உறுதிமொழி சட்டமாக்கப்பட வேண்டும். மத்திய அரசு நேரு உறுதிமொழியைச் சட்டமாக ஆக்க வேண்டுமென்று மாநில அரசு வலியுறுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேநேரத்தில் நாங்கள் எல்லாம் ஏதோ மத்திய அரசுக்கு வால் பிடிக்கிறோம் என்று சொன்னார்கள். அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன் எங்கும் எதையும் நாங்கள் பிடிக்கவில்லை. மத்திய அரசை நாங்கள் தட்டிக்கேட்கவில்லை என்று எதிர்க் கட்சி உறுப்பினர்கள் பேசினார்கள். மத்திய அரசு புலிவேசம் போடுகிறது என்றும் மாநில அரசு வால் பிடித்து ஆடுகிறது என்றும்; புலி வேசம் போடுவது தொல்லையில்லாதது. ஆனால் வால் பிடித்து ஆடுவது தொல்லையானது, கஷ்டமானது என்றும் சொன்னார்கள். மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சிக்கு வந்த பின்னால், தமிழ் நாட்டின் தலைமைப் பொறுப்பை புரட்சித் தலைவர் அவர்கள் ஏற்ற பின்னால், மாண்புமிகு புரட்சித் தலைவர் தலைமையில் இருக்கிற இந்த மாநில அரசு என்றைக்குமே பிரச்சனைகளை எடுத்து வைப்பதில் பின்வாங்கியதில்லை. இந்த அரசு புலி வேடம் அல்ல, புலியாகத்தான் இருக்கிறதே தவிர, வேடம் போடவில்லை. அவர்கள் வால் பிடிக்கிறார்கள் என்று சொன்னால், வால் பிடிப்பதில் எவ்வளவு கஷ்டம் என்பதையும் அவர்கள் எடுத்துக் காட்டினார்கள். அதற்குள்ள எதுகை மோனையோடு அவர்கள் சொன்னார்கள். வால் பிடித்ததை பார்த்தது கிடையாது. எங்களுக்கு வால் பிடித்து பழக்கமே கிடையாது. வால் பிடிப்பதிலே இருக்கிற தொல்லையும் தெரியாது. அதிலே இருக்கிற கஷ்டமும் தெரியாது. வால் பிடித்து பார்த்தவர்களுக்கு, அதிலே அனுபவப்பட்டவர்களுக்கு அதிலே இருக்கிற தொல்லைகள். அதிலே இருக்கிற குறைகள், அதிலே இருக்கிற

கஷ்டங்கள் தெரிந்து இருக்க நியாயம் உண்டு. அதனாலே அவர்கள் பேசுகிறார்கள். அதற்கு நாங்கள் என்ன செய்ய முடியும்.

அதைப்போலவேதான், அதற்கு எடுத்துக்காட்டாகத்தான் மத்திய அரசாங்கம் நேரத்தை மட்டும்தான் மாற்றியது. தொலைக்காட்சியில் இந்தி மொழி மூலம் நடத்தப்படுகிற நிகழ்ச்சியை கொஞ்சம் முன்னுக்குத் தள்ளினார்கள். நேரத்தை மாற்றியதற்கு இந்த அரசாங்கம் எதிர்ப்பைக் காட்டியது. மாண்புமிகு செய்தி-அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் இதை பயங்கரமாக எதிர்த்தார்கள். இந்த சட்டமன்றத்திலே பயங்கரமாக மத்திய அரசாங்கத்தைக் குற்றம் காட்டினார்கள்; அது கூடாது, மாற்றப்பட்டாக வேண்டும் என்று ஆணித்தரமாக வாதாடினார்கள். அதற்குப் பிறகு மத்திய அரசு பணிந்து அதை மாற்றியது என்றால், எந்த நேரத்திலேயும் மிக எச்சரிக்கையாக இந்த மாநில அரசாங்கம் புரட்சித் தலைவர் தலைமையிலே இருக்கிறது, என்பதை நான் அவர்களுக்கு எடுத்துக் காட்ட ஆசைப்படுகிறேன்.

அதைப்போலவேதான் இந்த தமிழகத்திலே எந்த ரூபத்திலே எப்படிப்பட்ட வகையிலே நுழைக்க யார் முயற்சித்தாலும், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமும், இந்த தமிழகத்து மக்களும், ஏன் உங்களையும் சேர்த்து நாம் அத்தனை பேரும் அதை வேரறுக்கத் தயாராகத்தான் இருக்கிறோம். அதிலே மாற்றம் இருக்காது என்பதை நான் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். தமிழகத்து மக்களுடைய எண்ணங்களிலே இன்றைக்கு ஒரு அச்ச உணர்வு ஏற்பட்டு இருக்கிறது, அதனாலே நாம் பயப்படுகிறோமே தவிர, அந்த அச்ச உணர்வு நமக்கு ஒரு பெரிய எதிர்ப்பு உணர்வாக உருவாக்கப்படுகிற அளவிற்கு மத்திய அரசு போகாது என்று நாம் நம்புவோமாக என்று நான் சொல்லிக்கொள்கிறேன்.

மாநிலங்களுக்கு வழங்கப்படுகிற அதிகாரத்தைப் பொறுத்த வரையிலே விரைவான ஒரு நடவடிக்கையின் மூலமாக-நான் ஏற்கனவே சொன்னேன் — சர்க்காரியா கமிஷனுடைய அறிக்கையை சமர்ப்பித்தாக வேண்டும், அதற்கு முன்னாலே, மாநில



முதலமைச்சர்கள் மாநாட்டைக் கூட்டி, அவர்களுடைய ஆலோசனையைப் பெற்று, இதை நடைமுறைப்படுத்த முன்வர வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கையிலே ஏழை மாணவர்களுக்கு சத்துணவு வழங்குகிற, சத்துணவு சாப்பிடுகிற மாணவர்களுக்கு, 8-வது வரை படிக்கிற மாணவர்களுக்கு இலவசமாக உடுக்க உடையும், இலவசமாக படிக்க புஸ்தகங்களும் வழங்குகிற திட்டம் இன்றைக்கு அறிவிக்கப்பட்டு இருக்கிறது. ஏழைக் குழந்தைகளுடைய தேவைகளை பூர்த்தி செய்தால், நாளைய சமுதாயம் இந்த நாட்டிலே நல்லதொரு சமுதாயமாக உருவாக்கப்படும். ஏழைக் குழந்தைகளுக்கு எந்தக் குறை இருந்தாலும், அவர்களுடைய கல்வித் தகுதியை அதிகப்படுத்த முடியாது. தமிழகத்து குழந்தைகள் பாதிக்கப்படுகிற சூழ்நிலைகள் இருக்கிறது என்ற உணர்வோடு, ஏழைக் குழந்தைகளுக்கு சத்துணவுத் திட்டத்தைக் கொண்டு வந்து அவர்களுக்கு உடுக்க உடையும்; இலவசமாகப் பாடப் புஸ்தகங்களையும் தந்து, படிப்படியாக கல்வித் துறையிலே தொழிற்கல்வியைப் புகுத்தி, அவர்களுக்கு தொழிற்கல்வி வளத்தை உருவாக்க வேண்டும் என்று மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் இன்றைக்கு முடிவு எடுத்து செயல்பட்டுக் கொண்டு இருக்கிறார்கள். அதே நேரத்திலே ஆயிரம் கோடி ரூபாய் அளவிற்கு மின் அணு தொழிற்சாலைகளுக்கு முன்னுரிமை தந்து, தமிழகத்தை ஒரு தொழில் மயமாக்க வேண்டும், தொழிற்கல்வியைக் கீழே இருக்கிற மாணவர்கள் மத்தியிலே புகுத்தி, மேலும் மின் அணுத் தொழிற்சாலைகளை உருவாக்கி அதன் மூலம் தமிழகத்தை ஒரு தொழில் வளம் மிகுந்த மாநிலமாக ஆக்கி, இந்தியத் துணைக் கண்டத்திலே தமிழகத்தை ஒரு தனி சிறப்பானதாக உருவாக்குவதற்காக, பாடுபட்டுக்கொண்டு இருக்கிற இந்த நேரத்திலே தான் மாணவர்களுக்கு குறை ஏற்பட்டுவிடக்கூடாது, மாணவர்கள் பாதிக்கப்பட்டு விடக்கூடாது, படிக்கிற காலங்களிலே அவர்களுக்கு குறைகள் தெரிந்து, அவர்களுடைய கல்வியை அவர்கள் இழந்து விடக் கூடாது என்பதற்காகத்தான் புரட்சித் தலைவர் தமிழகத்தின் முதல்வர் அவர்கள், படிப்படியாக கொள்கையை இயற்றிக் கொண்டு வருகிறார்கள். ஆனால் சில அரசியல் கட்சித் தலைவர்கள் தங்களுக்கு ஆதாயம் தேடிக்கொள்வதற்

காக, தங்களுடைய இயலாமையை நாட்டிலே காட்டிக் கொள்ளாமல் இருப்பதற்காக, நாட்டிலே படிக்கின்ற மாணவர்களை, அதுவும் தேர்வுகள் நடந்து கொண்டிருக்கிற இந்த நேரத்திலே அவர்களை போராட்டத்திற்கு அழைக்கிறார்கள். மாணவர்கள் நன்றாக கல்வி கற்று, இந்த நாட்டிலே உன்னதமான நிலைக்கு, நாளைய வருங்கால தமிழகத்தை. உணர்ச்சி மிகுந்த தமிழகத்தை, தொழில் வளம் மிக்க தமிழகத்தை எதிர்கால இளைஞர்கள் இந்திய துணைக்கண்டத்திலே தாம் பொருந்திய இளைஞர்களாக வரவேண்டும் என்று உணர்வோடுதான், நம்முடைய முதல்வர் அவர்கள் செயல்பட்டுக்கொண்டு இருக்கிற நேரத்திலேதான், அவருடைய எண்ணங்களுக்கு மாசு கற்பிக்க, அவருடைய எண்ணத்திலே மாறுபட்ட எண்ணங்களை உருவாக்குவதற்காக, வேறு ஒரு அரசியல் கட்சித் தலைவர் மாணவர்களைப் போராட்டத்திற்கு அழைக்கிறார்கள். அண்ணா கூட அரசியல் போராட்டத்திலே மாணவர்கள் வரக்கூடாது என்றுதான் சொன்னார்கள். அண்ணாவின் கொள்கையை நாங்கள் கடைப்பிடிக்கவில்லை என்றெல்லாம் சொல்வது எப்படி நியாயம் என்று அவர்களைப் பார்த்து நான் கேட்கிறேன். அண்ணாவின் உண்மையான கொள்கையை மறந்துவிட்டு, தன்னுடைய நடவடிக்கைகளை அரசியல் லாபத்திற்காக பயன்படுத்துபவர்கள் இதைச் சற்று உணர்ந்து பார்க்க வேண்டும். மாணவர்களை போராட்டத்திற்கு அழைக்காதீர்கள். மாணவர்களைப் பொறுத்த வரையிலும், இந்த நாட்டின் எதிர்காலத்தை உருவாக்கப் பிறந்தவர்கள். அவர்களைப் போராட்டத்திற்கு அழைத்து,

(முற்பகல் 11-20)

அதன் மூலமாக உங்கள் கட்சிக்குள்ளே அவர்களை எடுத்துக் கொள்வது போன்ற திட்டம் தீட்டாதீர்கள். சென்ற காலங்களில் அழைத்தது போல மாணவர்களை போராட்டத்திற்கு அழைக்காதீர்கள். மாணவர்களை மறந்துவிடுங்கள். தமிழக மாணவர்கள் இப்போதுதான் திருந்தி நல்ல நிலைமையில் இருக்கிறார்கள். இப்போது நமது மாணவ சமுதாயத்தைப் பொறுத்த வரையில் படிக்க வேண்டும் என்ற எண்ணம் உடையவர்களாக, பண்புள்ளவர்களாக நடந்துக் கொள்ள வேண்டும் என்ற எண்ணம் உடையவர்களாக, பெற்றோர்களை ஆதரிக்க வேண்டும் என்ற உணர்வுள்ளவர்களாக அமைந்திருக்கிறார்கள். ஆகவே அந்த மாணவர்களைப் பொறுத்தவரையில் நிச்சயமாக உங்கள் பக்கம் போராட வரமாட்டார்கள். அழைப்பவர்கள் பக்கமெல்லாம் அவர்கள் போக மாட்டார்கள் என்றும் சொல்லிக் கொள்கிறேன்.





நாட்டின் நலத்திற்கு நல்ல திட்டங்களைத் தீட்டித் தரும் அரசை ஆதரியுங்கள். நாட்டிற்கு நல்ல திட்டங்களைக் கொண்டு வருகிற அரசுக்கு ஆக்கபூர்வமான திட்டங்களைச் சொல்லுங்கள்; ஆலோசனைகளைச் சொல்லுங்கள். அதை விட்டு மாணவர்களைப் போய் போராட்டத்திற்கு அழைக்க வேண்டாம் என்று என்னுடைய வேண்டுகோளை பேரவைத் தலைவர் மூலமாகக் கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல இன்றைக்கு மத்திய அரசாங்கம் நியமித்த ஊதியக் குழு, அது நியமிக்கப்பட்டு 4 ஆண்டுகளாக பணி செய்து வருகிறது. இந்த 4 ஆண்டுக்காலமும் கழித்துத்தான், இந்த ஆண்டு தான் ஹியரிங் என்ற வகையில் நேர்முக விசாரணையை நடத்தி வருகிறார்கள். ஆனால் மாநில அரசாங்கம் நியமித்த அரசாங்க ஊழியர்களுக்கான ஊதியக் குழு, நியமித்த இரண்டாண்டுகளுக்குள்ளாகவே தனது அறிக்கையை முடித்து, வருகிற ஓரிரு வாரங்களுக்குள் அந்த ஊதியக் குழுவினுடைய அறிக்கை இந்த மன்றத்திலே வைக்கப்பட்டு, அதன் சிபாரிசுகளை ஏற்று நடவடிக்கை எடுக்கும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் இந்த நிலையிலேதான் கம்யூனிஸ்ட் கட்சியைச் சார்ந்த சிலர் ஊதியக் குழுவின் சிபாரிசுகளை விரைவு படுத்த வேண்டும், அதை இப்பொழுதே வைக்க வேண்டும் என்று ஆங்காங்கே சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். நல்ல முறையிலே அரசு நல்ல திட்டங்களைக் கொண்டு வருவதைப் புரிந்து கொண்டு, அரசு ஊழியர்கள் அரசைப் பாராட்டிக் கொண்டு வருகிற நிலையில், அவர்களை மாற்ற வேண்டும் என்று, எதையாவது செய்ய வேண்டும் என்று இவைகளையெல்லாம் சில அரசியல் கட்சிகள் நாட்டிலே செய்து வருகின்றனவே தவிர, மக்களுக்கு உதவி செய்கின்ற வகையில் அரசு கொண்டு வரும் நல்ல காரியங்களை பாராட்டுவதில்லை.

இந்தியத் துணைக் கண்டத்திலேயே, அரசு ஊழியர்கள் இறந்தால் 20 ஆயிரம் ரூபாய் என்ற சலுகை வழங்கப்பட்டிருக்கிற ஒரே மாநிலம் தமிழ்நாடுதான்; தமிழகத்தில் உள்ள புரட்சித் தலைவர் அவர்களுடைய ஆட்சிக்காலத்தில்தான் என்பதை அவர்

சளுக்கும் இந்த நாட்டு மக்களுக்கும் எடுத்துரைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். இப்படிப்பட்ட பல்வேறு நல்ல திட்டங்களைக் கொண்டு வந்திருக்கிற இந்த அரசாங்கத்தையும், இந்த அரசாங்கம் கொண்டு வந்திருக்கிற நிதிநிலை அறிக்கையையும் பாராட்டி நான் அமைகிறேன். நன்றி.

* **திரு. எஸ். புருசோத்தமன்**: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ் வாழ, தமிழ்ச் சமுதாயம் வாழ, தமிழர்கள் வாழ்வு மேம்பாடு அடைய தன்னுடைய வாழ்நாளையெல்லாம் உழைத்து, இன்றைக்கு வங்கக் கடல் ஓரம் துயில் கொண்டிருக்கும் பேரறிஞர் அண்ணா அவர்களுக்கு என் வணக்கத்தைச் சொல்லி, அண்ணா அவர்களுடைய கொள்கைகளை, லட்சியங்களை நிறைவேற்றிக் கொண்டிருக்கும், புதிய சரித்திரம் படைக்கும் சரித்திர களநாயகன், புரட்சித் தலைவர், பொன்மனச் செம்மல், தமிழக முதல்வர் டாக்டர் எம். ஜி. ஆர். அவர்களுக்கும் என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்து என்னை இந்த மன்றத்தின் உறுப்பினராக்கிய என்னுடைய மதிப்பிற்குரிய அரியலூர் தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கும் நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்து என்னுடைய உரையை ஆரம்பிக்கிறேன்.

இங்கே இந்த நிதிநிலை அறிக்கையினைப் பற்றி, எதிர்க்கட்சியைச் சார்ந்த சில மாண்புமிகு உறுப்பினர்கள் அரைத்த மாவே திரும்பி திரும்பி அரைக்கப்படுகிறது, கீறல் விழுந்த கிராமபோன் ரிகார்டுபோல் சொன்ன கருத்தே திரும்பத் திரும்பச் சொல்லப்படுகிறது, வேலை இல்லாத் திண்டாட்டத்திற்கு எந்த வழி வகையும் செய்யப்படவில்லை என்று அடிக்கடி குறிப்பிட்டார்கள். இந்தக் குற்றச்சாட்டுகள் எல்லாம் இன்று நேற்றல்ல, பல ஆண்டுகளாகவே, 1977 ஆம் ஆண்டு நம்முடைய கழகத் தலைவர் டாக்டர் எம். ஜி. ஆர். அவர்கள் முதல்வராகப் பொறுப்பு ஏற்றதற்குப் பிறகு, அந்த ஆண்டிலிருந்து இந்த ஆண்டு வரை வருஷாவருஷம் நடக்கிற இந்த நிதிநிலை அறிக்கையின் விவாதத்தின் மீது, அவர்கள் பேசக் கூடிய பேச்சுதான் இந்த 'அரைத்த மாவையே திரும்பி திரும்பி அரைக்கப்படுகிறது, கீரல் விழுந்த கிராமபோன் ரிகார்டுபோல சொன்னதையே சொல்லிக் கொண்டு இருப்பது வேலை இல்லாத் திண்டாட்டத்தைப்போக்க ஒரு வழி வகையும் செய்யப்படவில்லை' என்ற





குறைகளை, அவர்கள் தான் திரும்பத் திரும்ப அப்படியே மாற்றாமல் சொல்லிக் கொண்டிருக்கிற பெருமைக்கு ஆளாகிறார்கள் என்று நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

வேலையில்லாத் திண்டாட்டம் என்பது இன்று நேற்றல்ல; காலம் காலமாக இருந்து வருகிற ஒரு தேசிய பிரச்சனையாகும். இந்த வேலையில்லாத் திண்டாட்டம் ஒரு நேஷனல் டிஸீஸ் ஆகத்தான் இருந்துக் கொண்டிருக்கிறதே தவிர, ஒரு ஆண்டிற்குள்ளாகவோ அல்லது ஐந்து ஆண்டுத் திட்டத்திற்குள்ளாகவோ நிறைவேற்றப்பட்டு முடித்துவிட முடியும் என்ற நிலையில் நிச்சயமாக, அது எந்த அரசாக இருந்தாலும் இல்லை என்பதைத்தான் குறிப்பிட்டுச் சொல்ல ஆசைப்படுகிறேன். இன்றைக்கு உலகத்திலேயே பொருளாதாரத்தில் மிகச் சிறந்த நாடாக விளங்கிக் கொண்டிருக்கிற அமெரிக்கத் திருநாட்டில் கூட, வேலையில்லாத் திண்டாட்டம் இருப்பதை புள்ளி விவரங்கள் எடுத்துக் காட்டுகின்றன. அந்த வகையில் இந்த வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க இந்த அரசு எந்த வகையில் எல்லாம் முயற்சிகளை எடுக்க முடியுமோ அந்த வகையில் எல்லாம் முயற்சிகளை எடுத்துக்கொண்டுதான் வருகிறது என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். அந்த வகையில்தான் தொழில் முன்னேற்றத்தைக் கொண்டு வருவதற்கு நமது புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசு நல்ல திட்டங்களைத் தீட்டி அறிவித்திருக்கிறது. நம்முடைய நாட்டில் இருக்கக்கூடிய கல்வி முறைத் திட்டம் லார்ட் மெக்காலேயால் அறிவிக்கப்பட்ட திட்டமாகும். அந்த திட்டம், இங்கே கிழக்கிந்திய கம்பெனியார், இங்கே ஆண்டுகொண்டிருந்தபோது, வேலைக்கு ஆள் வேண்டும் என்பதற்காக, குமாஸ்தா வேலைக்கு ஆட்களைத் தயார் செய்வதற்காக ஏற்படுத்தப்பட்ட கல்வித் திட்டம். அந்தக் கல்வித் திட்டத்தைத்தான் இன்றைக்கும் ஏற்றுக்கொண்டு நடைமுறைப்படுத்தி வருகிறோம். அந்த படிப்பின் மூலமாக மக்களுக்கு நல்ல பல திட்டங்கள், வேலை வாய்ப்பினை பெருக்கக்கூடிய அளவிற்கு முடியாத சூழ்நிலை இன்றைக்கு இருந்துகொண்டிருக்கின்றன. அதையெல்லாம் மாற்ற வேண்டும் என்ற எண்ணத்தின் அடிப்படையில்தான் தொழிற்கல்வித் திட்டத்தை சிறு வயது முதற்கொண்டே புகுத்துவதன் மூலம், இளம் சிறார்கள் தங்களுடைய படிப்பின் மூலம், தொழிற்கல்வியின் மூலம், பல சிறு சிறு

தொழில்களை செய்வதற்கு ஆக்கமும், ஊக்கமும் அளிக்கும் வகையில் கொண்டுவரப்பட்டு இருக்கின்றன. உதாரணத்திற்கு சொல்ல வேண்டுமென்றால், ஜப்பான் இரண்டாம் உலகப் போரினால் தலைதூக்காது என்று எண்ணக்கூடிய அளவுக்கு ஹிரோஷிமா, நாகசாகி போன்ற நகரங்களில் குண்டு வீச்சுகள் ஏற்பட்டு அதன் பிறகு அங்குள்ள மக்கள் எப்படி தங்களுடைய வாழ் நாளைக் கழிப்பது என்ற தடுமாற்றத்தில் இருந்த நாடுதான் இன்றைக்கு உலக நாடுகளிலே, தொழில் துறையிலே சிறந்து விளங்கக்கூடிய ஒரு நாடாக இருக்கிறது என்பதை யாரும் மறந்துவிட முடியாது.

தொழில் கல்வித் திட்டத்தை சிறு வயது முதல் பள்ளிக்குச் செல்லுகின்ற மாணவர்கள் படித்து வருவதால், தொழில் கல்வி திட்டத்தின் மூலம் மாபெரும் வல்லரசுகளோடு போட்டி போட்டுக் கொண்டு விளங்கக்கூடிய ஒரு நாடாக ஜப்பான் இருந்து கொண்டிருக்கிறது. அந்த வகையில் இன்றைக்கு நம் தமிழகமும் பெருமை பெற்று, தொழிலில் வளர்ச்சி அடைய வேண்டும் என்ற எண்ணத்தின் அடிப்படையிலே இந்தத் திட்டம் கொண்டுவரப் பட்டு இருக்கிறது. வெளிநாடுகளில் வசிக்கும் இந்தியர்களுக்கு தமிழகத்தில் தொழில் துவங்க முன்னுரிமை வழங்கவேண்டும் என்ற நல்ல திட்டத்தையும் நம்முடைய அரசு அறிவித்து இருக்கிறது. இந்தத் திட்டங்களினால், வெளிநாட்டில் இருக்கக் கூடிய இந்தியர்கள் இங்கே தொழில்களைத் துவங்கினால், அதன் மூலமாக ஏழை எளியவர்களுடைய வேலையில்லாத் திண்டாட்டம் ஒழிந்து, சிறந்த வருமானம் கிடைக்கும். நாம் வெளிநாடுகளுக்கு பொருள்களை ஏற்றுமதி செய்வதன் மூலம் கிடைக்கக்கூடிய அந்நியச் செலாவணி அதிகமாக கிடைக்கும் என்ற எண்ணத்தின் அடிப்படையில்தான் அந்தத் திட்டத்தை இங்கே கொண்டு வந்து இருக்கிறார்கள். சிங்கப்பூர் நாடு தொழிற் துறையில் மிகவும் பின்தங்கி, எந்தவிதமான பொருளாதார வசதியும் இல்லாத சூழ்நிலையில் இருந்தது என்பதை யாரும் மறந்துவிட முடியாது. மக்கள் செயல் கட்சித் தலைவர் லேங்வான்யூ தேர்தலிலே வெற்றிபெற்று பதவி ஏற்றவுடன் அறிவித்த திட்டமே, வெளிநாட்டவர்களுக்கு அங்கே தொழில் துவங்குவதற்கு அளித்த முன்னுரிமை திட்டம் ஆகும். அப்படிப் பட்ட திட்டம் அறிவிக்கப்பட்ட பிறகுதான் சிங்கப்பூரில் உள்ள



மக்கள் தொழில் வளம் பெருகி, எல்லாவிதமான வளமும் பெற்று நல்லமுறையிலே, தங்களுடைய வாழ்க்கையிலே வேலையில்லாத் திண்டாட்டத்தை குறைத்து இருக்கிறார்கள். அப்படிப்பட்ட அந்தத் திட்டத்தை இங்கே தமிழகத்திற்கு தேவை என்ற எண்ணத்தின் அடிப்படையிலே நமது முதலமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிறார்கள். இதன் மூலமாக தமிழகத்தில் தொழிற்புரட்சி ஏற்படும் என்ற எண்ணத்தின் அடிப்படையிலே அந்தத் திட்டம் கொண்டுவரப்பட்டிருக்கிறது.

மேலும் அந்தத் திட்டத்தை செயல்படுத்துவதற்கு நம்முடைய செயல்பாட்டு மூலம் நல்ல ஆலோசகர்களைக் கொண்டு நல்ல முறையில் அந்தத் திட்டத்தை மேம்படுத்த வேண்டும் என்ற எண்ணத்தின் அடிப்படையில் இந்த அரசு செயல்பட்டு வருகிறது. அதற்காக மத்திய அரசின் உதவியையும், உலக வங்கியின் உதவியையும் இந்த அரசு கோரி வருகிறது.

மேலும் அரசு ரப்பர் மேம்பாட்டுக் கழகம் 1984-ம் ஆண்டு துவங்கப்பட்டு 4,785 ஹெக்டேர் பரப்பளவு நிலத்தில் ரப்பர் பயிரிடப்பட்டு 3 மாதங்களில் ரூ. 2 கோடி அளவிற்கு வருவாய் ஈட்டியுள்ளது மாபெரும் விவசாயப் புரட்சியாகும். இந்தத் திட்டத்தின் மூலம் நமக்கு அந்நியச் செலாவணி மிக அதிகமாக கிடைக்கிறது. அதோடு இந்த ரப்பர் தொழில் மூலம் நம்முடைய நாட்டிற்கு ஏழை எளிய விவசாயிகள் பயன்படக்கூடிய வகை யில், வேலையில்லாத் திண்டாட்டத்தை போக்குகிற வகையில் இந்தத் திட்டம் அமைந்திருக்கிறது என்பதை நாம் மறந்துவிட முடியாது. இங்கே பேசுகின்றபோது எதிர்க் கட்சியைச் சார்ந்த உறுப்பினர், இந்த சத்துணவுத் திட்டத்தையும், அவர் எடுத்துச் சொன்னார்கள். அவர் பேசுகின்றபோது அப்பாக்

(முற்பகல் 11-30)

களிடம் சாராயத்தைக் குடிக்கச் சொல்லி 2,500 கோடி ரூபாயை விரயம் செய்து அதன் மூலம் 250 கோடி ரூபாயை சத்துணவாகவும், இலவச சீருடையாகவும், இலவச பாடப் புத்தகமாகவும் அவர்களுடைய பிள்ளைகளுக்கு வழங்கக்கூடிய ஒரு திட்டமாக இருப்பதாகச் சொன்னார்கள். அவர்

தி.மு.க.வைச் சேர்ந்தவர் என்பதை நாம் அறிவோம். அவர்களுடைய ஆட்சியிலே 30 ஆண்டுக் காலமாக தமிழக மக்கள் மறந்திருந்த சாராயக் கடைகளை ஞாபகத்திற்குக் கொண்டு வந்து சாராயக் கடைகளுக்குத் திறப்பு விழா நடத்தியது தி.மு.க. அரசு என்பதை யாரும் மறந்துவிட முடியாது. அவர்கள் திறந்துவிட்டதற்குப் பின்னால் மூடினார்கள். மூடியதற்குப் பிறகு இங்கே உள்ள அப்பாக்கள்—அவர்களுடைய பாஷையிலே சொல்லப் போனால்—குடிக்கிறவர்கள் எல்லாம் சித்தூருக்கும், பெங்களூருக்கும், பாண்டிச்சேரிக்கும் சென்று பணத்தை இழக்கக்கூடிய நிலைமை ஏற்பட்டது. அந்த வகையில் இந்த அரசினுடைய பணம் மற்ற மாநில மக்களுக்குச் செல்லக் கூடிய நிலைமை ஏற்பட்டதால்—குடிக்கிறவர்கள் எப்படி இருந்தாலும் குடிப்பார்கள், நிச்சயமாக அவர்களை யார் எப்படிப்பட்ட முயற்சி எடுத்தாலும் மாற்ற முடியாத காரியமாகும், எனவே அப்பாக்களுடைய பணத்தைப் பெற்று அவர்களுடைய பிள்ளைகளுக்குக் கொடுக்கின்ற முறையிலே சத்துணவு, சீருடை, பாடப் புத்தகம் ஆகியவற்றை இலவசமாக வழங்குகிற திட்டத்தை அறிவித்திருக்கிறார்கள் என்பதை உணர வேண்டும்.

பேராசிரியர் அவர்கள் ஒரு பத்திரிகைக்குப் பேட்டியளிக்கிற போது ஒன்றைச் சொல்லியிருக்கிறார்கள். இலங்கைவாழ் தமிழர் பிரச்சினை பற்றி நிதிநிலை அறிக்கையில் அரசு எந்தவிதமான முயற்சியையும் எடுக்கவில்லை என்று சொல்லியிருக்கிறார்கள். இலங்கை வாழ் தமிழர் பிரச்னைபற்றி நல்ல முறையிலே மாநில அரசு மத்திய அரசை வற்புறுத்துவதன் மூலம் நடவடிக்கைகள் எடுக்கும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஒரு நிதிநிலை அறிக்கையில் இதைத்தான் சொல்ல முடியும். என்ன என்ன நடவடிக்கைகளை எப்படி எடுக்க வேண்டும் என்பதையெல்லாம் திட்டவட்டமாக அதிலே குறிப்பிட முடியாது என்பது அவர்களுக்கு நன்றாகத் தெரியும். எதையாவது சொல்ல வேண்டுமென்ற எண்ணத்தின் அடிப்படையில் அப்படிச் சொல்லியிருப்பார்கள் என்று கருதுகிறேன்.





மாண்புமிகு நாவலர் அவர்கள் அறிவித்ததற்கு இணங்க புரட்சித் தலைவர் அவர்கள் அனைத்துக் கட்சி சார்பாக ஒரு கூட்டத்தைக் கூட்டி இருக்கிறார்கள். உங்கள் கருத்துக்களை அங்கே வந்து சொல்லி மத்திய அரசு இந்தப் பிரச்சினையில் என்ன என்ன நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று சொல்ல வேண்டும், அப்படிச் செய்வது தான் இலங்கையிலே செத்துக் கொண்டிருக்கிற தமிழர்களுக்கு உதவிகரமாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இலங்கைத் தமிழர் பிரச்சினை ஒரு வெளிநாட்டுப் பிரச்சினை என்பது இன்றைக்கு மாறி அது ஒரு இந்திய நாட்டுப் பிரச்சினை என்ற அளவுக்கு மாறியிருப்பதை நாம் மறந்துவிடக் கூடாது. ஆட்டைக் கடித்து, மாட்டைக் கடித்து மனிதனையே கடிக்க முற்பட்டதுபோலே இன்றைக்கு இலங்கையிலே இருக்கிற சிங்கள இராணுவம் தமிழர்களைச் சூறையாடிய நிலை மட்டுமல்ல, தமிழர்கள் இங்கிருந்து மீன்பிடிக்கச் சென்றபோது தாக்கியிருக்கிறார்கள். அவர்களைக் கைது செய்திருக்கிறார்கள், தமிழக மீனவர்கள் மீன் பிடிக்க முடியாத நிலைமை ஏற்பட்டு இருக்கிறது. அதன் மூலமாக இந்திய நாட்டிற்குக் கிடைக்கக் கூடிய அன்னியச் செலாவணி பாதிக்கப்பட்டிருக்கிறது. ஏனென்றால் அந்தப் பகுதியிலே அதிகமான இறால் மீன்கள் கிடைக்கக்கூடிய நிலைமை இருப்பதால் வெளிநாட்டுச் செலாவணி அதன் மூலமாக இன்றைக்குப் பாதிக்கப்பட்டிருப்பதால் எப்படி அன்னை இந்திரா காந்தி அவர்கள் வங்கதேசப் பிரச்சினை ஏற்பட்டபோது அதிலே ஈடுபட்டார்களோ அதைப்போன்று இலங்கைத் தமிழர்கள் பிரச்சினையும் ஆகியிருக்கிறது. அங்கே நெருக்கடி ஏற்பட்டிருக்கிறது. வங்கதேசப் பிரச்சினை ஏற்பட்டபோது வங்கதேசத்திலிருந்து தினந்தோறும் அகதிகள் வந்து கொண்டிருந்தார்கள், அதைப் போன்று தினந்தோறும் தமிழர்கள் இந்தியாவுக்கு வந்து கொண்டிருக்கிறார்கள், இங்கே இருக்கிற மீனவர்கள் மீன்பிடிக்கச் செல்ல முடியாத நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இந்திய நாட்டின் பெருமையை நிலைநாட்டும் வகையில் அன்னை இந்திரா காந்தியின் புதல்வர் அவர்களுடைய பெயரைக் காப்பாற்றுகின்ற முறையிலே இலங்கைப் பிரச்சினையிலே உரிய நடவடிக்கையை காலந்தாழ்த்தாமல் எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. எஸ். புருசோத்தமன்] [1985 ஏப்ரல் 1

மேலும் பழைய நிதியமைச்சர் நாஞ்சிலார் அவர்கள் ஒரு பத்திரிகைக்கு சொல்லியிருக்கிறார்கள். நம்பப்படுகிறது, உத்தேசிக்கப்படுகிறது, கருதப்படுகிறது என்றெல்லாம் சொல்லப் பட்டிருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். வார்த்தைகளிலே ஏமாற்றியிருக்கிறார்களே ஒழிய புதிதாக திட்டங்கள் எதுவும் இல்லையென்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால் அவர்கள் நிதியமைச்சராக இருந்து நிதிநிலை அறிக்கை வாசிக்கிறபோதும் அந்த வாசகங்கள் இருக்கத்தான் செய்தன என்பதை யாரும் மறுக்க முடியாது. இப்போது அவர் கட்சிக்கும் அங்கே இருக்கக்கூடிய தொண்டர்களை ஏமாற்றுவதற்கும் அப்படிச் சொல்லியிருப்பார்கள் என்று கருதுகிறேன். மேலும் இங்கே ஒரு எதிர்க்கட்சியின் அதிகாரபூர்வமான பத்திரிகையில் இந்த நிதிநிலை அறிக்கையைப் பற்றி சொல்லும்போது நிழல்களை நிசமாக நம்பி வாக்களித்த வாக்காள பெருமக்களுக்கு இந்த பட்ஜெட் ஒரு தண்டனை என்று சொல்லியிருக்கிறார்கள், அந்தக் கட்சித் தலைவர் அவர்கள். நான் மெத்த பணிவோடு அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ளுவது எல்லாம், நடைபெற்ற தேர்தலில் அந்தக் கட்சியின் தலைவர் அவர்கள் மக்கள் மன்றத்தில் வந்து 7 ஆண்டு காலம் எங்களுக்கு கொடுத்த தண்டனை போதாதா, இன்னும் தேவையா என்று கேட்டார்கள். அதற்கு பதில் அளிக்கின்ற வகையில் இன்றைக்கு மக்கள் அவரை அங்கே உட்கார வைத்து இன்றைக்கு மீண்டும் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களை இங்கே உட்கார வைத்து இருக்கிறார்கள் என்பதை நாம் யாரும் மறந்துவிட முடியாது. என்னதான் நல்ல பல திட்டங்கள் இந்த நிதிநிலை அறிக்கையில் குறிப்பிடப்பட்டு இருந்தாலும் எதிர்க்கட்சி என்ற முறையில் அதை விமரிசிக்கின்ற வகையில் இன்றைக்கு அதை விமர்சிக்க வேண்டாமா? அதை விடுத்து, வேண்டுமென்றே விதண்டாவாதம் பேசுகின்ற வகையில் இன்றைக்கு அவர்கள் விவாதத்தை நடத்திக் கொண்டு இருக்கிறார்கள். அதனுடைய காரணம் எனக்கு மிக நன்றாகத் தெரிகிறது. 1976 ஆம் ஆண்டுக்கு பிறகு ஆட்சியினுடைய சுகத்தை அனுபவிக்க வேண்டும் என்ற முறையில் இன்றைக்கு மக்கள் மன்றத்தில் பல முறை முயன்று தோல்வி அடைந்த பிறகும் எப்படியாவது ஆட்சிக் கட்டிலை பிடிக்க வேண்டும், அதில் அமர வேண்டும் என்ற எண்ணத்தின் அடிப்படையில் வேதனையின் விளிம்பில் இருந்து கொண்டு



1985 ஏப்ரல் 1] [திரு. எஸ். புருசோத்தமன்]

ஆட்சியை பிடிக்க முடியாததன் காரணமாக இன்றைக்கு சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். நான் அவர்களுக்கு சொல்லிக் கொள்ள விரும்புவது எல்லாம், கடல் வற்றி கருவாடு தின்னலாம் என்று கருதி கொக்கு குடல் வற்றி செத்ததாம். அதைப் போல கடல் வற்றும், கருவாடு தின்னலாம், காத்து இருங்கள் என்று உங்களுக்குச் சொல்வதைத் தவிர நான் வேறு ஒன்றும் சொல்ல விரும்பவில்லை.

இறுதியாக அரியலூர் சட்டமன்ற தொகுதிக்கு தேவையான ஒரு சில தேவைகளைச் சொல்லி முடிக்க ஆசைப்படுகிறேன். அரியலூர் நகரத்தைப் பொறுத்தவரையில் இன்றைக்கு குடிநீர் நிலைமை மிகவும் மோசமான சூழ்நிலையில் இருக்கிறது. இதற்கு ஏற்கனவே கொள்ளிடம் ஆற்றிலிருந்து குடிநீர் கொண்டு வருவதற்கான திட்டம் பரிசீலனையில் இருக்கிறது. அதை விரைவாக செயல்படுத்தி அரியலூர் நகர மக்களுக்கும் அதை சுற்றியுள்ள மக்களுக்கும், இந்த திட்டத்தைக் கொண்டு வந்தால் மிகவும் பயன்பெறும் என்ற வகையில் இந்த அரசு செயல்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். மேலும் அரியலூர் நகரம் மிகவும் நெருக்கடியான நகரமாக இருப்பதால் அங்கே சாலைகள் மிகவும் குறுகலாக இருக்கின்றன. அதனால் அங்கே போக்குவரத்து மிகவும் தடைப்படுகிறது. மக்கள் நடக்கக் கூட முடியாத சூழ்நிலை அங்கே ஏற்பட்டிருக்கிறது. இவைகளை எல்லாம் கருத்தில் கொண்டு அரியலூர் நகரத்திற்கு ஒரு புறச் சாலை அமைத்துத் தர வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் நம்முடைய இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்கள் வெள்ளம் ஏற்பட்ட நேரத்தில் வெள்ளப் பகுதிகளை பார்வையிட வந்தபோது அரண்மனை குறிச்சி ஓடையில் பாலம் ஒன்றை அமைக்க அங்கேயே அந்த இடத்திலேயே உத்தரவிட்டார்கள். ஆனால் இன்றையதினம் வரையில் அந்த திட்டம் எந்த நிலையில் இருக்கிறது என்று தெரியவில்லை. அந்தத் திட்டத்தை உடனடியாக நிறைவேற்றிக் தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அந்த பகுதியில் உள்ள விவசாய பெருமக்கள் பார வண்டிகளை அந்த ஓடையில் கீழே இறங்கி மேலே ஏற்ற முடியாமல் மிகவும் சிரமப்பட்டுக் கொண்டு இருக்கிறார்கள். எனவே இதன் மூலமாக 15 கிலோ மீட்டர் தூரம் சுற்றிக் கொண்டு

[திரு. எஸ். புருசோத்தமன்] [1985 ஏப்ரல் 1

செல்லக்கூடிய ஒரு சூழ்நிலை ஏற்பட்டு இருக்கிறது. அதை மாற்றி இந்த பாலத்தை கட்டித் தருவதற்கு இந்த அரசு ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். மேலும் கண்டிராதீர்த்தம் ஏரி ஏற்கனவே முந்தைய ஆட்சிக் காலத்தில் தூர் வாரப்பட்டு அதை நல்ல முறையில் செய்யாமல் விடப்பட்ட காரணத்தால் கிட்டத்தட்ட 3 ஆயிரம் ஏக்கர் பாசன பகுதியாக இருக்க வேண்டிய நிலைமை மாறி இன்றைக்கு 500 ஏக்கருக்கு குறைவாக இன்றைக்கு பாசன வசதி கிடைத்துக் கொண்டிருக்கிறது. மீண்டும் அந்த திட்டத்தை செயல் படுத்துவதன் மூலம் 3 ஆயிரம் ஏக்கர் தண்ணீர் பாயக்கூடிய நிலை ஏற்பட்டு அந்த விவசாய மக்கள் நன்மைகள் பெறக் கூடிய வகையில் இந்தத் திட்டத்தை செயல்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)

மேலும் அரியலூர் சட்டமன்ற தொகுதியில் கட்டிநாடு என்று அழைக்கப்படுகின்ற ஒரு பகுதியிருக்கிறது. அந்தப் பகுதியில் கிட்டத்தட்ட 25 கிராமங்கள் இருக்கின்றன. அந்த பகுதிகளுக்கு சாலை வசதி சுத்தமாக இல்லாத சூழ்நிலை இதுவரை இருக்கிறது. இருந்தாலும் நம்முடைய மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சிக்கு வந்த பிறகு ஓரளவுக்கு சாலை வசதிகளை ஏற்படுத்திக் தந்திருக்கிறார்கள். அவைகளை எல்லாம் சீரமைப்புச் செய்து புதிதாக சாலைகள் போட்டு அந்த மக்களுக்கு நல்ல வசதிகளை ஏற்படுத்தித் தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். ராமநல்லூரி என்ற கிராமம் தஞ்சை மாவட்டத்திற்கும் திருச்சி மாவட்டத்திற்கும் இடையில் ஓடுகின்ற கொள்ளிடம் ஆற்றின் நடு திட்டில் ஒரு தீவு போல் அமைந்திருக்கிறது. வெள்ளக் காலங்களில் அந்த பகுதியில் உள்ள ஊர் மக்கள் வெளியே செல்ல முடியாத சூழ்நிலை இருக்கிறது. அந்த ஊருக்குள்ளே வெள்ளம் புகுந்து விடுகிறது. அங்கே இருக்கக்கூடிய மக்கள் எங்கும் வெளியே செல்ல முடியாத ஒரு சூழ்நிலை இருக்கிறது. அதை மாற்றுகின்ற வகையில் கொள்ளிடம் ஆற்றின் ஆற்றுப் படுகையை ஒட்டி ஊரைச் சுற்றி கரை கட்டித் தர வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன். மேலும் அரியலூரில் ஒரு கலைக்கல்லூரி உள்ளது. அது ஆரம்பித்தபோது எந்த சூழ்நிலையில் இருந்ததோ



1985 ஏப்ரல் 1] [திரு. எஸ். புருசோத்தமன்]

அதைப்போலத் தான் இன்றைக்கும் இருக்கிறது. அங்கே

(முற்பகல் 11-40)

பி.ஏ. வகுப்பு இருக்கிறது; பி.எஸ்.ஸி., கணிதப் படிப்பு இருக்கிறது. பி.காம் வகுப்பு வர வேண்டுமென்று நீண்ட நாட்களாக மாணவர்கள் கோரிக்கை வைத்துக் கொண்டிருக் கிறார்கள். அதுகுறித்துப் பலமுறை போராட்டம் கூட நடத்தி யிருக்கிறார்கள். அதையெல்லாம் நம்முடைய அரசு கவனத்திற் கொண்டு—பெரம்பலூர் மாவட்டமாகின்ற சூழ்நிலையில் அரியலூர் கல்லூரி ஒன்று மட்டும்தான் இருக்கிறது. அங்கே நிறைய பட்டப் படிப்புகளுக்கும், பட்ட மேற்படிப்புகளுக்கும் வகுப்புகளைத் துவக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மருதையாற்றில் தவுத்தாய்குளம் என்ற இடத்திற்கு அருகாமையில் அணை கட்டும் திட்டம் தீட்டப்பட்டு அது மத்திய அரசாங்கத்திற்குச் சென்று அங்கிருந்து திரும்ப அனுப்பப்பட்டிருக்கிறது என்று அறிகிறேன். மீண்டும் அந்தத் திட்டத்தை வலியுறுத்தி மத்திய அரசிடம் வலியுறுத்தி கேட்டு நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, வாய்ப்பளித்த தலைவரவர்களுக்கு நன்றி கூறி விடை பெறுகிறேன், வணக்கம்.

* திரு. டி. தீர்த்தகிரி கவுண்டர்: மாண்புமிகு மாற்றுத் தலைவரவர்களே, நம்முடைய மாண்புமிகு மரியாதைக்குரிய நிதியமைச்சரவர்கள் கொண்டு வந்திருக்கக்கூடிய நிதிநிலை அறிக்கையைப் பொறுத்து என்னுடைய சில கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன். நான் ஒரு விவசாயக் குடும்பத்தைச் சார்ந்தவன். விவசாயத்திற்கு இன்றைக்குச் சிறிய சலுகை அளிக்க வேண்டுமென்ற நோக்கத்தோடு, விவசாயிகள் உபயோகப்படுத்தக்கூடிய இரசாயன உரங்களுக்கு 5 ரூபாய் சர்சார்ஜ் விதிவிலக்கு கொடுத்திருக்கிறார்கள் நிதி யமைச்சரவர்கள். அதற்காக அவரை நான் மனமாரப் பாராட்டுகிறேன்.

இன்றைக்கு நம்முடைய மாநிலம்—ஏன், இந்தியாவே விவசாயிகளைக் கொண்ட நாடு என்பதை நாம் அறிவோம். விவசாயிகள் இந்த நாட்டின் முதுகெலும்பு போன்றவர்கள் என்று அறிஞர்கள் எல்லோரும் சொல்கிறார்கள். அது

[திரு. டி. தீர்த்தகிரி கவுண்டர்] [1985 ஏப்ரல் 1

விலை மிக மலிவாகப் போய்விட்டது. எனவே அரசாங்கம் விவசாயிகளுக்குப் பாதுகாப்பு கொடுக்கக்கூடிய வகையில் தக்க நடவடிக்கை எடுத்து உரிய விலையை இந்தக் குச்சிக்கிழங்கிற்கு நிர்ணயிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து விவசாயத்தைப் பொறுத்தவரையில் அது ஊராட்சி ஒன்றியத்தில் இணைக்கப்பட்டு இருந்து வந்தது எல்லோருக்கும் தெரியும். ஊராட்சி ஒன்றியத்தில் விவசாயத்திற்கு முதலிடம் அளிக்கின்ற வகையில் கிராம சேவக்குகளை ஏற்படுத்தி விவசாயத்திற்கு என்னென்ன விதைகள் கொடுக்க வேண்டும், எந்தக் காலத்தில் என்ன பயிரை விதைக்க வேண்டும்; அதற்கு நோய் கண்டால் என்ன மருந்து அடிக்க வேண்டும்; உரம் எப்படி இட வேண்டும் என்றெல்லாம் ஆலோசனை கூறத்தக்க அளவுக்கு நிலைமை இருந்தது. அவ்வாறு ஊராட்சி ஒன்றியத்தில் விவசாயத்தை இணைத்து அதற்காக அலுவலர்கள் நியமிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வந்த திட்டத்தை மாற்றி இன்றைக்கு அந்தந்த இலாக்காக்களை அந்தந்த இலாக்காவின் போன்ட் இலாக்காவிற்கு மாற்றிவிட்டதன் காரணத்தால் கிராமப் புறங்களில் விவசாயிகளுக்கு உதவக்கூடிய கிராம சேவக்குகள் எல்லாம் அந்தத் திட்டத்திலே கவனம் செலுத்தாமல் அவர்கள் எல்லாம் அபிவிருத்தித் திட்டங்களிலே கவனம் செலுத்துகின்ற நிலைமை ஏற்பட்டிருக்கின்றது. எனவே இவ்வாறு விவசாய காரியங்களுக்காக அவர்கள் செயலாற்றாமல் இருக்கின்ற வகையில் மாற்றியிருப்பது விவசாயிகளுக்குப் பெருத்த ஏமாற்றத்தைக் கொடுக்கக் கூடியதாக இருக்கின்றது. இந்த முறை விவசாயிகளுக்கு நல்ல பலன் கொடுக்கக் கூடியதாக இல்லை என்பதை அரசின் கவனத்திற்கு நான் கொண்டு வருகிறேன்.

அடுத்து நீர்ப் பாசனம் என்பது விவசாயத்திற்கு இன்றியமையாத ஒன்றாகும். எனவே தமிழகத்திலே இருக்கக் கூடிய அத்தனை ஆறுகளுக்கும் அணைக்கட்டு கட்டி, ஆங்காங்கே இருக்கக்கூடிய காட்டாறுகளுக்கும் அணை கட்டி, சின்னச்சின்ன காட்டாறு ஆறுகளில் எல்லாம் செக் டாம் கட்டிக் கொடுத்து நீர் வீணாகப் போகாமல் ஆங்காங்கே நீர்நிலைகளை ஏற்படுத்தி நாளைக்கு விவசாயத்திற்குரிய வசதிகளைச் செய்து கொடுக்க

வேண்டும் என்ற நல்ல மனதோடு இன்றைக்கு அரசாங்கம் செய்து கொண்டு வருகின்றது. ஆனால், இந்தத் திட்டங்களைச் செயலாற்றம் செய்வதில் நல்ல நிலைமை ஏற்படுகின்றதா என்பதிலும் அரசாங்கம் கவனம் செலுத்த வேண்டும்.

இன்றைக்கு தமிழகத்திலே ஓரளவுக்கு விவசாயம் நன்றாக இருந்தாலும் கூட விவசாயிகளுக்குக் கட்டுப்படியாகக்கூடிய போதிய விலை கிடைக்காமல் இருப்பதன் காரணத்தால் அவர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அதற்கு அரசாங்கம் தக்க கவனம் செலுத்தி உரிய பாதுகாப்பைக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

எங்களுடைய தர்மபுரி மாவட்டம் தொழில் துறையில் பின்தங்கிய மாவட்டம். ஹோசூர் பகுதி ஓரளவுக்குத் தொழில் துறையில் வளர்ந்து இருக்கின்றது. நான் பாராளுமன்ற உறுப்பினராக 6 மாதங்கள் இருந்து அதன் பின்னர் என்னுடைய பதவியை ராஜினாமா செய்தேன். அப்போது தொழில் அமைச்சராக இருந்த திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள் தொழில் அமைச்சராகப் பொறுப்பேற்றதன் காரணமாக, அவர்களுக்கு அந்தத் தொகுதி தேவைப்பட்டதன் காரணமாக என்னுடைய பொறுப்பை நான் விட்டுக் கொடுத்தபின் அவர்கள் அந்தப் பொறுப்பை ஏற்று எங்கள் பகுதி உறுப்பினராக வந்ததன் காரணத்தால் ஹோசூர் பகுதியில் தொழில் பேட்டை ஏற்படுத்துவதற்கு, வெளி மாநிலங்களிலே இருந்து அவர்கள் வந்து தொழில் ஆரம்பிப்பதற்கு பல உதவிகள் செய்யப்பட்டன. அவ்வாறு பல உதவிகளைச் செய்து உரிமைகளைக் கொடுத்து ஹோசூர் பகுதியிலே மாநில சர்க்கார் ஆயிரம் ஏக்கருக்கு மேலாக உள்ள நிலங்களில் அக்யுசிஷன் செய்து, பல கேந்திரமான தொழில்களை நிறுவ மாநில அரசும் மத்திய அரசும் திட்டங்களைப் போட்டு ஏராளமான தொழில் வளர்ச்சி ஏற்பட்டிருக்கின்றது. அதனுடைய வளர்ச்சி இன்றைக்குப் பெரும்பாலும் கர்நாடக மாநிலத்திற்குப் போய்க் கொண்டிருக்கிறது. ஓசூர் பகுதியிலே இருக்கக்கூடிய பொருளாதார வளர்ச்சி இன்றைக்கு கர்நாடக மாநிலத்திற்குப் போய்க் கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். பொருளாதார அபிவிருத்தி, கர்நாடக

[திரு. டி. தீர்த்தகிரி கவுண்டர்] [1985 ஏப்ரல் 1

மாநிலத்தோடு தொடர்பு கொண்டதாயிருக்கிறதே தவிர, குறிப்பாக, எங்களுடைய மாவட்டத்திற்குத் தொடர்பில்லை, ஏமாற்றம் அளிக்கக்கூடிய ஒன்றாக இருக்கிறது என்பதை இந்தச் சமயத்திலே அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். தொழில் துறையிலும் விவசாயத் துறையிலும் ஒருங்கிணைந்து, ஒன்றாகச் செயல்பட்டால்தான் பொருளாதார வளர்ச்சி ஏற்பட்டு, சுபிட்ச வாழ்வு ஏற்படும். அப்படி ஒன்றுபட்டு செயல்படுவது இன்றியமையாத திட்டமாக அமைய வேண்டும் என்பதை அரசு நன்றாக உணர்ந்திருக்கிறது. ஆகவே, புரட்சித் தலைவர் அரசு, தமிழக அரசு, இதைக் கருத்திலே கொண்டு, நல்ல முறையிலே செயல்படுத்திக் கொண்டு வருகிறது.

(முற்பகல் 11-50)

அன்னை இந்திரா காந்தியின் 20 அம்சத் திட்டத்தை மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் நன்றாகச் செயல்படுத்துகிறார்கள் என்பதற்காகத்தான் அவர்கள் இந்த மாநிலத்திலே உள்ள கட்சியோடு தேர்தல் முறையிலும் ஆட்சி முறையிலும் நல்ல முறையிலே உறவு கொண்டு இருக்கிறார்கள். இன்றைக்குப் புரட்சித் தலைவர் மத்திய சர்க்காரோடு நல்ல உறவோடு தமிழகத்தில் ஆட்சி செய்கிறார்கள். ஆகவே, அந்த உறவு நீடித்து இருக்க வேண்டும். மாநிலப் பொருளாதார திட்டங்களுக்கு மத்திய சர்க்கார் ஒதுக்கிக் கொடுக்கக்கூடிய நிதியையெல்லாம் நல்ல முறையிலே செலவு செய்து, திட்டங்களை நிறைவேற்ற வேண்டுமென்ற கருத்தோடு, இன்றைக்கு மத்திய சர்க்காரும் மாநில சர்க்காரோடு சேர்ந்து செய்து கொண்டிருக்கிறது. பாராளுமன்றத்தின் துணைத் தலைவர் பதவி நம்முடைய ஆளுங்கட்சியான அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த திரு. தம்பித்துரை அவர்களுக்குக் கொடுத்திருப்பது நட்பு முறைக்கு எடுத்துக் காட்டாக இருக்கிறது என்பதை இந்த நேரத்திலே நான் நினைவுபடுத்த விரும்புகிறேன். ஆகவே, மத்திய—மாநில சர்க்கார்களுடைய உறவு சுபிட்சமாக இருக்க வேண்டுமென்பதற்காகத்தான் இந்தக் கருத்துக்களை எல்லாம் நான் இந்த நேரத்திலே சொல்கின்றேன்



1985 ஏப்ரல் 1] [திரு. டி. தீர்த்தகிரி கவுண்டர்]

என்னுடைய மொரப்பூர் தொகுதியிலே பல கோரிக்கைகளைச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். குறிப்பாக, நீர்ப்பாசன வசதிக்காக அங்கே ஒபில்நாயக்கன்ஹள்ளி நதித் திட்டம் என்ற ஒன்றை நீண்ட நாட்களாகக் கேட்டு, இப்பொழுது அதனை அரசின் கவனத்திற்குக்கூட கொண்டு வந்திருக்கிறார்கள். ஆனால், நிதி அமைச்சர் அவர்கள் அதனைச் சேர்க்காமல் விட்டு விட்டார்கள். இப்பொழுதாவது அந்தத் திட்டத்தை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று என்னுடைய சார்பாக, என்னுடைய தொகுதி மக்கள் சார்பாக, நிதி அமைச்சர் அவர்களுக்கு வேண்டுகோளாக விடுக்கிறேன். ஏனென்றால், 2, 3 ஆண்டுகளாக மழை பொய்த்து, காடார், மொப்புலி போன்ற பகுதிகளிலிருந்து 15, 20 கிலோ மீட்டர் தூரத்திற்குக் கடுமையான வறட்சி ஏற்பட்டு, அதுபற்றி முதலமைச்சரிடத்திலே நேரடியாகச் சந்தித்துக் கூறி, அவர்கள் பிரதம காரியதரிசிக்கு ஆணை பிறப்பித்து தீவிர திட்டமாக வேலை மேற்கொள்ளப்பட்டு, குடிநீர்-வடிகால் வாரியத்தின் மூலமாக வேலைகள் மேற்கொள்ளப்படுகின்றன. 100-க்கு மேற்பட்ட போர்கள் இயங்காமல் இருக்கின்றன. அவற்றையெல்லாம் பழுதுபார்க்க வேண்டிய ஏற்பாடுகளைச் செய்து கொடுக்க வேண்டுமென்று ஆணையிட்டு சில இடங்களிலே ஒன்றிரண்டு செய்கிறார்கள். சில இடங்களிலே இயங்காமல் இருக்கின்றன. அவற்றையும் சரி செய்து, குடிநீர் பிரச்சினையைப் போக்க வேண்டும். ஒபில்நாயக்கன்ஹள்ளி திட்டத்தை நிறைவேற்ற வேண்டும். அங்கு பாசன வசதி செய்து கொடுத்தால் 15 கிலோ மீட்டர் தூரத்திற்கு நிலத்தடி நீர் சுரக்க வாய்ப்பு ஏற்படும்.

அதேபோல், அங்கேயிருக்கிற அய்யகிரி மலை அடிவாரத்திலே பாசனத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டுமென்று சம்பந்தப்பட்ட அதிகாரிகள் பரிசீலனை செய்து, அவர்களும் அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறார்கள். ஆகவே, அரசு அந்தத் திட்டங்களை மேற்கொண்டு அந்த பிற்பட்ட பகுதிக்கு விவசாய வசதியோடு குடிநீர்ப் பிரச்சினையையும் போக்குவதற்கு இரண்டு வகையான பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கு திட்டங்களை நிறைவேற்றுவதற்கு, இந்தத் திட்டத்தை நிறைவேற்றிக் கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. டி. தீர்த்தகிரி கவுண்டர்] [1985 ஏப்ரல் 1

கல்வி சம்பந்தமாக கிராமங்கள்தோறும் பெருந்தலைவர் காமராஜர் அவர்கள், 500 மக்கள் தொகை, 300 மக்கள் தொகை என்று பார்த்து அத்தகைய கிராமங்களில் எல்லாம், ஆரம்பக் கல்வித் திட்டத்தைக் கொண்டு வந்தார்கள். அந்தக் கல்விக் கூடங்களின் நிர்வாகமெல்லாம் ஊராட்சி ஒன்றியங்களிடத்தில் இருந்து வந்தது. இன்றைக்கு அந்தத் திட்டத்தை மாற்றி, கல்வி இலாக்காவிடமே நிர்வாகத்தையும் ஒப்படைத்திருக்கிறார்கள். கல்வியும், நிர்வாகமும் இரண்டும் ஒரே இலாக்காவிடம் ஒப்படைத்ததன் காரணமாக ஆரம்பக் கல்வி நிலையங்கள் சரியாக இயங்கவில்லை. இன்றைக்கு என்ன நிலைமை என்றால் ஆரம்பக் கல்வி நிலையங்களில் இருக்கிற ஆசிரியர்கள் எல்லாம் பல யூனியன்களை வைத்துக் கொண்டு கோரிக்கைகளை வைத்து நிர்வாகத்தை மிரட்டிக் கொண்டிருக்கிறார்கள். ஊராட்சி ஒன்றியத்தில் இருக்கிறபோது பஞ்சாயத்துத் தலைவர்கள், ஒன்றியத் தலைவர்கள், அதில் பணியாற்றுகிற கல்வி இலாக்கா அதிகாரிகள் முதலியோர் அவர்களைக் கேட்பார்கள். அந்த ஆசிரியர்களுக்கு பணிபுரிவதில் கருத்துச் செல்வதற்கு நாட்டம் இருந்தது. இன்றைக்கு, கல்வி இலாக்கா மூலமாக நிர்வாகம் இருப்பதால் கல்வியினுடைய தரம் குறைந்து விட்டது. பாடசாலைகளில் போதனா முறை கெட்டு விட்டது. கல்வியமைச்சர் இல்லையென்றாலும் நிதியமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குச் சொல்கிறேன். இன்றைக்கு ஆரம்பப் பாடசாலையில் 5 ஆவது வகுப்பை முடித்து 6 ஆவது வகுப்பிற்கு உயர்நிலைப் பள்ளியில் ஒரு மாணவன் செல்வானானால் அவனுக்கு கல்வியின் தரம், கல்வித் தகுதி இருக்கிறதா என்றால், கொஞ்சம் கூட இல்லையென்று தான் பெரும்பாலான உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்கள் சொல்கிறார்கள். ஆகவே நிர்வாகத்திலே கட்டுப்பாடும், ஒழுக்கமும், கட்டுதிட்டமும் இருக்க வேண்டும். அவற்றை அமல்படுத்துவதில் நிர்வாகத்தினர் தாராளமாக இருப்பதன் காரணமாக இப்படிப் பட்ட கோளாறுகள் ஏற்பட்டிருக்கின்றன. அதையெல்லாம் சரி செய்தால்தான் எதிர்காலத்தில் தமிழகத்தில் கல்வி சிறப்பாக இருக்க முடியும். அரசு லீனியண்டாக பல சலுகைகளைக் கொடுத்திருக்கிறது. மாணவர்கள் பரீட்சையில் தேறவில்லையென்றாலும் புரோமோஷன் கொடுத்துவிடலாம் என்று கல்வி இலாக்காவுக்கு அறிவித்திருக்கிறார்கள். ஆகவே ஆரம்பப்



1985 ஏப்ரல் 1] [திரு. டி. தீர்த்தகிரி கவுண்டர்]

பாடசாலைகளில் கல்வியின் தரம் குறைந்திருக்கிறது என்பதை அரசாங்கத்தின் கவனத்திற்கு கொண்டு வர விரும்புகிறேன். முன்பு போலவே ஊராட்சி மன்றத்திலேயே ஆரம்பப் பாடசாலை இணைந்து இருப்பது தான் நிர்வாகத்திற்கு சிறப்பாக அமையும். அதன் காரணமாக ஆரம்பப் பாடசாலைகளும் சிறப்பாக இயங்கும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, கிராமப் பகுதிகளில் இணைப்புச் சாலைகள், போக்குவரத்து வசதிகள், வீட்டு வசதி எல்லாம் என்னுடைய தொகுதியில் செய்யப்பட வேண்டும். மொரப்பூர், அரூர் பகுதிகளில் தாழ்த்தப்பட்ட மக்கள், மலைவாழ் மக்கள் அதிகமாக வாழ்கிறார்கள். மத்திய அரசு என்.ஆர்.இ.பி., ஐ.ஆர்.டி.பி., ஆர்.எல்.இ.ஜி.பி. போன்ற திட்டங்களின் மூலம் ஏராளமாக நிதி ஒதுக்கீடுகளை கொடுத்திருக்கிறார்கள். அந்த ஒதுக்கீடுகளின் மூலமாக அந்தப் பகுதிகளில் வீடு கட்டிக் கொடுப்பதற்கும், பாதை வசதிகளை செய்து கொடுப்பதற்கும், அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். குறிப்பாக என்னுடைய தொகுதியில் பாப்பிரெட்டிபட்டி வட்டாரத்தில் மலைவாழ் மக்கள் 30 கிராமங்களில் வாழ்கிறார்கள். சித்தேரி மலைப் பகுதியில் மலைவாழ் மக்களுக்காக தனியாக பிரத்தியேக திட்டம் போடப்பட்டு பல பணிகளைச் செய்து வருகிறார்கள். ஆனால் கீழே அடிவாரத்தில் வாழ்கிறவர்களுக்கு அந்தச் சலுகைகள் கிடைக்காமல் இருக்கின்றன. பாடசாலை வசதி இல்லை, சாலை வசதி இல்லை, குடிதண்ணீர் வசதி இல்லை என்ற குறைகள் அந்தப் பகுதி மக்களுக்கு இருக்கின்றன. ஆகவே பட்டுகோனாம்பட்டி பஞ்சாயத்து, மஞ்சவாடி பஞ்சாயத்து, கோம்பூர் பஞ்சாயத்து போன்ற கிராமப் பஞ்சாயத்துகளுக்கு அந்த வசதிகளை செய்து கொடுக்க வேண்டும். அந்தப் பகுதி மக்கள் முழுக்க முழுக்க மலைவாழ் மக்கள். அவர்களுக்கு அந்த வசதிகளை செய்து கொடுக்க வேண்டுமென்று மீண்டும் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, என்னுடைய தொகுதியில் பூதநத்தம் என்ற கிராமத்தில் ரூரல் டிஸ்பென்சரி ஏற்படுத்த வேண்டுமென்று பல ஆண்டுகளாக கேட்டு வருகிறார்கள். அரசாங்கம் 3 ஆயிரம், 5 ஆயிரம் ஜனத்தொகை உள்ள, 5 மைல்கள் ரேடியசில் ஒரு கிராம வைத்திய சாலையை ஏற்படுத்திக் கொடுக்கலாம் என்ற

[திரு. டி. தீர்த்தகிரி கவுண்டர்] [1985 ஏப்ரல் 1

வகையில் செயலாற்றி வருகிறது. அந்த பூதநத்தம் கிராமத்தில் 5 ஏக்கர் நிலம் வாங்கி மாவட்ட சுகாதார அதிகாரி பேரிலும், ஆட்சித் தலைவர் பேரிலும் கிரயம் செய்து கொடுத்திருக்கிறார்கள். 5, 6 ஆண்டுகளுக்கு மேலாகிவிட்ட நிலையில் அந்தப் பகுதி மக்கள் பெரிதும் ஏமாற்றம் அடைந்திருக்கிறார்கள். ஆகவே அவர்களுக்கு அந்த வைத்திய சாலையை ஏற்படுத்தித் தர வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

(நண்பகல் 12-00)

அதைப்போல காதி இலாக்கா மூலம் பல கிராமப்புறத் திட்டங்கள் நிறைவேற்றப்படுகின்றன. அதிலே இந்த அரசு சரியான முறையில் கண்காணிப்பு செய்ய வேண்டும். எங்களுடைய ஊருக்குப் பக்கத்திலே 2 இலட்சம், 4 இலட்சம் ரூபாய் செலவில் இரண்டு ஷெட் கட்டியிருக்கிறார்கள். அம்பர்சர்க்கா இராட்டை வைப்பதற்கு என்று கட்டிய அந்த ஷெட்டுகள் இன்றைக்கு சும்மா இருக்கின்றன, இயங்கவில்லை. அதைப் போன்று நாட்டுச் செக்குகளும் 1, 2 ஆண்டுகளாக இயங்காமல் சும்மா இருக்கின்றன. இதை எல்லாம் கவனித்து, இந்த இலாக்கா செயல்படுத்தும் திட்டங்களை நல்லமுறையில் செய்ய வேண்டும். நல்ல முறையில் செயல்படுத்துகிறார்களா என்பதை அரசாங்கம் கண்காணிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, எங்கள் பகுதியிலே தீர்த்தமலை கோவில் ஒன்று இருக்கிறது. எங்கள் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர் ஒருவர் அங்கே இரும்பு இருக்கிறது, அதை எடுக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று சொன்னபோது மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் என்னைச் சுட்டிக்காட்டி, அவர்களுக்கே தெரியும் என்று சொன்னார்கள். அதனுடைய உண்மை நிலை எனக்குத் தெரியும். 33½ சதவீதம் இரும்பு இருக்கிறது, இலாபகாமாக இருக்காது என்று பரிசீலனை செய்த இலாக்காவினர் சொல்லியிருக்கிறார்கள். இலாபகரமாக இருக்கும் என்ற கருத்தும் இருக்கிறது. எனவே, மறுபரிசீலனை செய்து, அந்தத் திட்டத்தை நிறைவேற்ற போதுமான நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



1985 ஏப்ரல் 1] [திரு. டி. தீர்த்தகிரி கவுண்டர்]

மேலும் அந்த தீர்த்தமலைக் கோவில் கடவுள்தான் எங்களுடைய குலதெய்வம். மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் அவர்களும் ஒருமுறை அந்தக் கோவிலை நேரில் வந்து பார்த்திருக்கிறார்கள். மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் திரு. ஆர்.எம்.வீ. அவர்கள் மலைமேலேயே வந்து பார்த்தார்கள். அந்தக் கோவில் பழுதடைந்திருக்கிறது. அதை திருப்பணி செய்ய வேண்டுமென்று சொல்லி, 20,000 ரூபாயும் ஒதுக்கினார்கள். அந்தப் பணம் செலவிடப்படாமல் இன்று வரையில் பாங்கில் இருக்கிறது. 1979-ல் அவர்கள் வந்து பார்த்ததாக எனக்கு ஞாபகம். 1979-லிருந்து 6 வருஷமாக அந்தப் பணம் 20,000 ரூபாயும் செலவிடப்படாமல் பாங்கில் இருக்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இப்படிப்பட்ட ஆலயங்கள் எல்லாம் செம்மையாக, சீராக இருக்க வேண்டுமென்ற கருத்துடையவர்களாக இருக்கிறார்கள். அதற்காகத்தான் இந்த முக்கியமான பொறுப்பை நல்லமுறையில் செயல்படுகின்ற திரு. ஆர்.எம்.வீ. அவர்களிடம் ஒப்படைத்திருக்கிறார்கள். ஆகவே, அமைச்சர் அவர்கள் அந்தத் திருப்பணியை விரைவில் செய்து முடிக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நான் கூட அந்தத் திருப்பணியை என்னுடைய சொந்தப் பொறுப்பில் செய்து, அது பாதியில் நிற்கிறது. அன்றைக்கு ஆட்சியில் இருந்தவர்கள் எங்களை விலக்கிவிட்டார்கள். அந்தப் பணி தொடராமல் அப்படியே இருக்கிறது. தெய்வீகத்தில் நம்பிக்கை வைத்திருக்கிற மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் அறநிலையத் துறை அமைச்சர் திரு. ஆர்.எம்.வீ. அவர்களும் அந்தக் கோவில் திருப்பணியைப் பூர்த்தி செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இறுதியாக இன்னும் ஒன்றை மட்டும் சொல்லி என்னுடைய உரையை முடித்துக்கொள்ள விரும்புகிறேன். இன்றைக்கு மத்திய அரசு டீசலுக்கு வரியை உயர்த்தியிருக்கிறது. 20 பைசா கூட்டியிருக்கிறார்கள். அதைப் போன்று இங்கேயும் பஸ்ஸில் ஒரு சீட்டுக்கு 30 ரூபாய் உயர்த்தியிருக்கிறார்கள். அதனால் இன்றைக்கு இந்தத் தொழில் நடத்துகிறவர்களுக்கு பெரும் பாதகமான நிலை ஏற்பட்டிருக்கிறது. எனவே மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் இதை மறுபரிசீலனை செய்ய வேண்டும்.

[திரு. டி. தீர்த்தகிரி கவுண்டர்] [1985 ஏப்ரல் 1

அன்றைக்கு இராஜாஜி அவர்கள் பொறுப்பில் இருந்தபோது கள்ளுக் கடைகளை எடுத்த நேரத்தில், காமதேனு என்று வருணிக்கப்படுகிற விற்பனை வரியைக் கொண்டுவந்தார்கள். அது இன்றைக்கு பெருகி, பலமடங்காகிக்கொண்டிருக்கிறது. அரசாங்கத்திற்கு வருமானம் வருகின்ற ஒரு நீர் ஊற்றாக வளர்ந்திருக்கிறது என்பதை நிதி அமைச்சர் அவர்கள் நன்கு அறிவார்கள். ஆகவே, அவர்கள் இந்த பஸ்போக்குவரத்து சம்பந்தமாக போட்டிருக்கிற வரியை நீக்கிவிட்டு, அதற்குப் பதிலாக மாற்று ஏற்பாடு செய்ய எத்தனையோ வழிமுறைகள் இருக்கின்றன. அந்தவகையில் நிதி திரட்டுவது நியாயமாக இருக்கும் என்று கருதுகிறேன்.

என்னுடைய ஞாபகம் சரியாக இருந்தால் 1957-ல் நிதி அமைச்சராக இருந்த திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள் 96 கோடி ரூபாய்க்கு மாநிலத் திட்டத்தைப் போட்டு, 100 கோடி ரூபாய்க்கு எப்படியாவது கொண்டுவந்துவிட வேண்டுமென்று முயற்சி செய்தேன், முடியவில்லை என்று சொன்னார்கள். அவர்கள் விரும்பியபடி அந்த 4 கோடி ரூபாயை சரிகட்ட முடியவில்லை அன்றைய பொருளாதார நிலையில். ஆனால் இன்றைக்கு 2500 கோடியிலிருந்து 3000 கோடி ரூபாய்க்கு திட்டம் வகுத்திருக்கிறீர்கள். அந்த அளவுக்கு பொருளாதாரம் வளர்ந்திருக்கிறது. நிதிநிலை அறிக்கையைத் தயாரிக்கும்போது மாநில அரசின் பொருளாதார நிலையை வைத்துதான் தயாரிக்க முடியும். ஆக, வருஷத்திற்கு 500 கோடி ரூபாய் நிதிநிலையில் உயருகிறது என்று தெரிகிறது. இப்போது இருக்கின்ற நிதி அமைச்சர்தான் தொடர்ந்து இந்தப் பொறுப்பில் இருப்பார். அவரே இருந்து, இந்த ஐந்தாண்டு இறுதியில் இரட்டிப்பாக வருமானத்தைப் பெருக்கி, அவருடைய காலத்திலே 10 ஆயிரம் கோடி ரூபாய்க்கு மாநிலத் திட்டங்களை வகுப்பார்கள். அந்த அளவுக்கு எங்கெங்கே ஊற்று சுரக்கிறதோ அங்கே வரி போடலாம். அன்றைக்கு இராஜாஜி அவர்கள்தான் சர்சார்ஜ் போட்டார்கள். சேல்ஸ் டாக்ஸ் கொண்டு வந்ததும் இராஜாஜி அவர்கள்தான். அந்த வழியிலே தி.மு.க. சர்க்கார் அவர்கள் வரியை உயர்த்தினார்கள். மானியக் கோரிக்கைகள் வரும்போது, இவைகளைப் பற்றி விரிவாகப் பேச வாய்ப்பு இருந்தால், அப்போது பேசுகிறேன். ஆகவே நிதியமைச்சர் அவர்கள்



1985 ஏப்ரல் 1] [திரு. டி. தீர்த்தகிரி கவுண்டர்]

மேலும் தொந்திரவு கொடுக்காமல், அந்தத் தொழிலிலே இருப்பவர்கள் பாதிக்காமல் இருப்பதற்கு, எப்படி விவசாயத்திற்கும் தொழிலுக்கும் முதலிடம் கொடுத்து செய்ய வேண்டுமோ, அதைச் செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து என்னுடைய மாவட்டம் தொழிற்துறையிலே பின் தங்கிய மாவட்டமாக இருக்கிறது. எனவே அங்கே ஒரு தொழிற்பேட்டையை ஏற்படுத்திக்கொடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து என்னுடைய தொகுதியில் உள்ள கடத்தூரில் ஒரு குடிநீர் திட்டம் ஒன்றை ஏற்படுத்த, அரசாங்கத்தின் பரிசீலனைக்கு வந்திருக்கிறது. அந்த அரசாங்கம் பரிசீலனை செய்து, அந்த திட்டத்தை நிறைவேற்றிக் கொடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். தலைவர் அவர்கள் மேலும் பேச அனுமதி கொடுக்காததன் காரணமாக, இதோடு என்னுடைய வார்த்தையை முடித்துக்கொண்டு, இந்த நிதி நிலை அறிக்கையை ஆதரித்து, அவர்கள் என்னுடைய பேச்சுக்கு பதில் உரைக்கவேண்டும் என்று கேட்டு, என் பேச்சை முடிக்கிறேன், வணக்கம்.

**திரு. அ. வெங்கடாசலம்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, தமிழகத்தின் தன்னிகரில்லாத் தலைவர், ஏழை எளியவர்களின் இதய தெய்வம் என்று சொல்லக்கூடிய தமிழகத்தினுடைய முதல்வர், புரட்சித் தலைவர் அவர்களை நான் இதய சுத்தியுடன் பாராட்டி, வணங்கி, என்னை இந்த மாமன்றத்திலே உறுப்பினராக உருவாக்கிய செய்தி அறநிலையத் துறை அமைச்சர் மாண்புமிகு அண்ணன் அவர்களுக்கும் என்னுடைய புதுக்கோட்டை மாவட்டத்திலே என்னுடைய ஆலங்குடி தொகுதியில் என்னுடைய வெற்றிக்காக பாடுபட்ட அனைத்திந்திய அண்ணா தி.மு.க. தொண்டர்களுக்கும், அதிகமான வாக்குகளை மிகச்சிறந்த முறையிலே வழங்கிய என் அன்புத் தாய்மார்களுக்கும், என்னுடைய நன்றியைத் தெரிவித்து, இங்கே மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற, 1985-86 ஆம் ஆண்டுக்கான நிதி நிலை அறிக்கையை வரவேற்று மனதாரப் பாராட்டி என்னுடைய கருத்துக்களை கூற விழைகிறேன்.

[திரு. அ. வெங்கடாசலம்] [1985 ஏப்ரல் 1

மாண்புமிகு புரட்சித் தலைவரின் சீரிய தலைமையின் கீழ் செயல்படும் இந்த அரசு 1985-86 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையை மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் அவர்களால் தாக்கல் செய்யப்பட்டு உள்ளதை நான் முழு மனதோடு வரவேற்று என்னுடைய கருத்தைக் கூற விரும்பு கிறேன்.

இங்கே கொடுக்கப்பட்டு இருக்கிற அறிக்கை, செயல்பாட்டுத் திறனோடு இருப்பதற்காகவும், செம்மையாக திட்டமிடப்பட்டு உள்ளதற்காகவும் உணவு உற்பத்தி, வேலைவாய்ப்பு அதிகரித்தல், ஆகியவற்றில் முன்னேற்றம் காண்பதற்காகவும் ஏதுவாக இருக்கிற காரணத்தால், இதை நான் பாராட்டுகிறேன். மேலும் அண்ணாவின் அரசு புதிய திட்டங்களைத் தொடங்கவும் பொருளாதார வளம் பெருமளவிற்கு முன்னேற, மின் சக்தி போன்ற முக்கிய துறைகளுக்கு அதிக நிதி ஒதுக்கம் செய்திருப்பதை நான் பாராட்டுவதோடு அதற்கு வழிவகை செய்திருப்பதையும் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். மேலும் மக்கள் தொகையில் கணிசமான பகுதியினரை, வறுமைக் கோட்டுக்குக் கீழே இருப்பவர்களை மேலே உயர்த்துவதற்காக இந்த அறிக்கை சிறப்போடு தயாரிக்கப்பட்டுள்ளது.

அதோடு மட்டுமல்லாமல், குறிப்பாகச் சொல்லவேண்டு மானால் வேளாண்மை உற்பத்தித் திறனை தொடர்ந்து ஆராய்ச்சி செய்து, சிறந்த தொழில் நுட்ப முறைகளை மக்களிடையே பரப்பவும், இந்த நிதியாண்டில் ஒரு வேளாண்மைக் கல்லூரி ஒன்றை ஏற்படுத்தவும் இந்த நிதி நிலை அறிக்கையில் வழிவகை செய்யப்பட்டிருக்கிறது.

அதோடு மட்டுமல்லாமல், மேலும் கால்நடை வளர்ப்பு, பால் பெருக்குத் திட்டம், கூட்டுத் தொழில் வளர்ச்சித் திட்டம், வீட்டு வசதி மேம்பாட்டுத்திட்டம், கல்வி வளர்ச்சித் திட்டம், கிராமத்தில் உள்ளவர்களுக்கும் நகரங்களில் உள்ளவர்களுக்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கும் திட்டம் போன்றவைகளை செம்மையாகச் செயல்படுத்த, சீரிய முறையிலே திட்டமிடப் பட்டுள்ளது.



1985 ஏப்ரல் 1] [திரு. அ. வெங்கடாசலம்]

அதோடு மட்டுமல்லாமல், நாம் எல்லாம் பாராட்டுகிற கவியரசு கண்ணதாசன் நினைவாக நாம் அவருக்கு செலுத்தக் கூடிய நன்றிக் கடனாக, என்றுமே நன்றி உள்ளவர்களாக இந்த அரசு இருக்கிறது என்பதை எடுத்துக்காட்டக் கூடிய வகையிலே, செட்டிநாட்டு சீமையிலே மணி மண்டபம் ஒன்றையும், கொடி காத்த குமரனுக்கு திருப்பூரிலே நினைவு ஆலயம் ஒன்றையும் கட்ட வழி வகுக்கப்பட்டு உள்ளது.

இந்த நிதிநிலை அறிக்கையிலே புரட்சித் தலைவர் பொன்மனச் செம்மல் எங்களது இதயதெய்வம் அவர்கள் சீரிய மதிநுட்பத்தோடு செயல்பட்டு வரும் முதலமைச்சர் சத்துணவுத் திட்டத்தின் மூலம் தகுதி உள்ள ஏழை எளிய மாணவர்களுக்கு ஆண்டு ஒன்றுக்கு 11.5 கோடி செலவில் இலவசமாக பாடப் புத்தகங்கள் வழங்கும் திட்டம் ஒன்று கொடுக்கப்பட்டு உள்ளது.

அதுமட்டுமல்ல, அரசு ஊழியர்களுடைய நலனில் மிகவும் அக்கறை உள்ள இந்த அரசு, தேர்தல் காலங்களில் மற்றவர் களைப் போல் அளித்த வாக்குறுதிகளை காற்றில் பறக்கவிட மாட்டோம் என்பதை நினைவுபடுத்தக் கூடிய வகையிலே மாண்புமிகு முதல்வர் அவர்கள், அரசு ஊழியர்களுக்கு குடும்ப நலத் திட்டத்தின் மூலம் வழங்கப்படும் தொகையை ரூபாய் 10 ஆயிரத்தில் இருந்து ரூபாய் 20 ஆயிரமாக உயர்த்த வழி வகை செய்யப்பட்டுள்ளது.

(பிற்பகல் 12-10)

இவ்வாறாக இந்த ஒப்புயர்வற்ற நிதிநிலை அறிக்கையைப் பற்றி பேசிக் கொண்டே போவோமேயானால் காலம் நான் இடம் கொடாது என்பதைக் குறிப்பிட்டு, புதுக்கோட்டை மாவட்டத்தில் இருக்கும் ஆலங்குடி என்னும் என்னுடைய தொகுதியில் இருக்கிற சில கோரிக்கைகளை நான் முன் வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். குறிப்பிட்டுச் சொல்ல வேண்டும் என்றால், புதுக்கோட்டை மாவட்டத்தைப் பிரித்ததன் நோக்கமே அந்த மாவட்டம் எல்லாத் துறைகளிலும் வளரவேண்டும், பொருளாதாரத் துறையிலும், கல்வித் துறையிலும், தொழில் துறையிலும் மேம்பட்டு வளரவேண்டும் என்ற அந்த உயர்ந்த லட்சியத்தின் அடிப்படையில் பிரிக்கப்பட்ட அந்த மாவட்டம் ஒரு சிறிய மாவட்டமாக இருக்கிறது.

[திரு. அ. வெங்கடாசலம்] [1985 ஏப்ரல் 1

இந்த ஆண்டு பருவ மழை தவறிவிட்ட காரணத்தினால் அங்கே நெல் விளைச்சல் நாற்றங்காலிலேயே பட்டுப் போயிருக்கக் கூடிய நிலைமை ஏற்பட்டிருப்பதை முன்விட்டு, புதுக்கோட்டை மாவட்டத்தை வறட்சி மாவட்டமாக உடனடியாக அறிவித்து அங்கே வறட்சிப் பணிகளையும் உடனடியாக மேற்கொள்ள வேண்டும் என்று மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசை கேட்டுக் கொள்கிறேன்.

புதுக்கோட்டை மாவட்டத்தில் இரண்டு பெரிய மில்கள் இருக்கின்றன. காவிரி மில் என்பது ஒன்று. அதில் கிட்டத்தட்ட 2 ஆயிரம் தொழிலாளர்கள் வேலை செய்கிறார்கள். அடுத்து நமனசமுத்திரம் மில் என்று சொல்லக்கூடிய மில்லிலே ஆயிரம் தொழிலாளர்கள் பணிபுரிகிறார்கள். ஆக மொத்தம் 3,000 பேர்கள் வேலை செய்யக்கூடிய அந்த மில்கள் இப்போது செயல் இழந்து மூடிக் கிடக்கின்றன. அதை உடனடியாக அரசு கவனித்து அந்த ஆலைகளைத் திறப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை முடுக்கிவிட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து ஒரு முக்கியமான கோரிக்கை. புதுக்கோட்டை மாவட்டத்தைச் சேர்ந்த மக்களால் நீண்ட நெடுங்காலமாக வைக்கப்பட்ட ஒரு கோரிக்கை என்னவென்றால் காவிரியாற்றின் தண்ணீர் புதுக்கோட்டை மாவட்டத்திற்கும், இராமநாதபுரம் மாவட்டத்திற்கும் வர வேண்டும் என்பதுதான். இதை கிட்டத்தட்ட சுதந்திரம் அடைந்ததற்குப் பிறகிலிருந்தே அவர்கள் கேட்டுக் கொண்டு வந்தார்கள். இப்போதுதான் நம்முடைய அரசினுடைய பொருளாளர்களும், உயர்மட்ட அதிகாரிகளும் அதைத் தேர்வு செய்து, சர்வே செய்து, ஒரு முழுமையான நிலையில் உருவாக்கப்பட்டு அரசுக்கு பரிந்துரையாக மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் அனுப்பி வைக்கப்பட்டிருக்கிறது.

ஆகவே புதுக்கோட்டை மாவட்டத்தினுடைய மக்களின் நீண்டகால கனவை நினைவாக்கிக் கொடுக்க நம்முடைய தமிழக அரசு ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். நமது மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் எந்தத் திட்டமானாலும் அதை நல்ல எண்ணத்தோடு அணுகி உயர்ந்த லட்சியத்தோடு தீட்டி நிறைவேற்றிக் கொண்டிருக்கிற



1985 ஏப்ரல் 1] [திரு. அ. வெங்கடாசலம்]

இந்த வேளையில், எனது மாவட்ட மக்களின் நீண்டகால கனவான அந்தக் காவிரி தண்ணீரை புதுக்கோட்டைக்கு கொண்டு வர வேண்டும் என்ற அந்தத் திட்டத்தை உடனடியாக, நிரந்தரமாக நிறைவேற்றிக் கொடுக்க முடியவில்லை என்றாலும், பெரும் மழைக் காலங்களிலும், வெள்ளக் காலங்களிலும் வரக்கூடிய காவிரி நீரை அங்கேயிருக்கக்கூடிய குளங்களிலும், கண்மாய்களிலும் விட்டு தேக்கிவிடக்கூடிய அளவுக்கு ஒரு திட்டத்தை நிறைவேற்றினாலும் அதை அந்த மக்கள் எப்பொழுதும் எண்ணிப் பார்ப்பார்கள் என்று குறிப்பிடக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து என்னுடைய ஆலங்குடித் தொகுதி மிகவும் பின்தங்கிய தொகுதியாக இருக்கிறது. அந்தத் தொகுதியிலே குறிப்பாகச் சொல்ல வேண்டுமானால் 30 கடலை ஆலைகள், 30 ஆயில் மில்கள் 30 நெல் அரவை மில்கள் என்று கிட்டத்தட்ட 100-க்கும் மேற்பட்ட மில்கள் இருக்கின்றன. ஆலங்குடியில் 3 போகம் கடலைப் பயிரை சாகுபடி செய்கிறார்கள். விவசாயிகள் அதிக அளவில் கடலை உற்பத்தி செய்து, ஆலங்குடியில் கடலையை அடித்து, வெளி மாநிலங்களுக்கும், வெளி நாடுகளுக்கும் கடலைப் பருப்புகளை ஏற்றுமதி செய்கிறார்கள். அத்தோடு அங்கேயே ஆயில் மில்கள் மூலமாகவும், எண்ணெய் எடுக்கிறார்கள். அதுபோக மீதமிருக்கின்ற அந்த ஆயிலை வைத்துக் கொண்டு, ஒரு வனஸ்பதி தொழிற்சாலையை ஏற்படுத்தினால் நலமாக இருக்கும் என்று அந்தப் பகுதி மக்கள் நினைக்கிறார்கள். ஆகவே மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுடைய அரசு, அதைச் சற்று கவனித்து உடனடியாக அந்த இடத்திலே தொழிற்சாலையை ஏற்படுத்தித் தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, புதுக்கோட்டை மாவட்டத்திலேயே ஆலங்குடி தொகுதிதான் மிகப் பெரிய தொகுதி. கிட்டத்தட்ட 110 ஊராட்சிகள் அடங்கிய அந்தத் தொகுதியில் ஜனத்தொகையும் மிக நெருக்கமாகவே இருக்கிறது. கிட்டத்தட்ட 1 லட்சத்து 40 ஆயிரம் வாக்காளர்கள் அந்தப் பகுதியிலே இருக்கிறார்கள். குறிப்பிட்டுச் சொல்ல வேண்டும் என்றால், திருவாலங்காடு ஒன்றியத்திலே கிட்டத்தட்ட 90 ஆயிரம் வாக்காளர்கள் இருக்கிறார்கள். இப்படிப்பட்ட மிகப் பெரிய ஜனத்தொகை

[திரு. அ. வெங்கடாசலம்] [1985 ஏப்ரல் 1

கொண்ட அந்தத் தொகுதியில் இதுவரையில் ஒரு பாலிடெக்னிக் கூட இல்லாமல் இருப்பதால், என்னுடைய ஆலங்குடித் தொகுதியில் ஒரு அரசு பாலிடெக்னிக் ஒன்றை அமைத்துத் தர வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

அதுமட்டுமல்லாமல், தமிழகத்தின் முதல்வர் புரட்சித் தலைவர் அரசு ஆட்சிக்கு வந்த பிறகு தாலுக்காவினுடைய ஹெட் குவார்ட்டர்சில் தீயணைப்பு நிலையங்கள் இருக்கின்றன. ஆனால், ஆலங்குடி தொகுதியிலே, குறிப்பாக மக்கள் தொகை அதிகமாக இருக்கக்கூடிய அந்தப் பகுதியில் இதுவரையில் தீயணைப்பு நிலையம் இல்லாமல் இருக்கிறது. எனவே ஒரு தீயணைப்பு நிலையத்தை ஏற்படுத்தித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதோடு, ஆலங்குடி தொகுதியிலே கீரமங்கலம் அருகில் உள்ள நகரம் என்ற ஊராட்சி மன்றம் இருக்கிறது. அந்த ஊராட்சியைச் சேர்ந்த தென்பழனி என்று சொல்லக்கூடிய பிரசித்தி பெற்ற முருகன் கோயில் இருக்கிறது. புதுக்கோட்டையிலிருந்து, அந்த சமஸ்தான காலத்தில் கற்களை கொண்டு போய் 75 அடி உயரத்திற்கு ஒரு பெரிய மலையாக எழுப்பி, ஒரு மிகப் பெரிய முருகன் கோயில் உருவாகி இருக்கிறது. கட்டப்பட்டு 100 ஆண்டுகளுக்கு மேலாகி, அது பழுதுபட்ட நிலையில் இருக்கிறது. மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் அந்தக் கோயிலை செப்பனிட்டுத் தரும்படி கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, மன்னர் காலத்தில் ஆலங்குடியை மையமாக வைத்து, சப்-கிளாஸ் மேஜிஸ்ட்ரேட் கோர்ட் இருந்தது. சுதந்திரம் அடைந்த பிறகு அந்த கோர்ட்டை எடுத்து விட்டார்கள். ஆலங்குடி தொகுதியில் 3 காவல் நிலையங்கள் இருக்கின்றன. ஆண்டு ஒன்றிற்கு 300 வழக்குகளுக்கு மேல் அங்கு வருகின்றன. அந்த வழக்குகளை வழக்காடுவதற்கு கிட்டத்தட்ட 40, 50 கிலோமீட்டர் தூரத்திலிருந்து பெரும் மக்கள் வரவேண்டி இருப்பதால், அங்கே ஒரு மேஜிஸ்ட்ரேட் கோர்ட் அமைத்துத் தரும்படி கேட்டுக் கொள்கிறேன்.



1985 ஏப்ரல் 1] [திரு. அ. வெங்கடாசலம்]

ஆலங்குடி தொகுதியிலே விவசாயிகள் அதிகமாக இருக்கிறார்கள். அங்குள்ள விவசாயிகள் கடலை உற்பத்தி செய்வதைப்போல் மக்காசோளம் அதிகமாக உற்பத்தி செய்வதால், அங்கே ஒரு குளுகோஸ் தொழிற்சாலையை ஏற்படுத்தித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதுமட்டுமல்லாமல், புதுக்கோட்டை மாவட்டத்தில் இருக்கக் கூடிய ஆலங்குடிப் பகுதியில் சுண்ணாம்பு படிக் கற்கள் அதிகமாக கிடைத்து தனியார்கள் சுண்ணாம்புத் தொழிற்சாலையை ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். ஆதனக்கோட்டையில் கிடைக்கக்கூடிய சுண்ணாம்பு கற்களை வைத்து அங்கு ஒரு சிமெண்ட் தொழிற்சாலையை அமைத்துத் தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். திருவரங்குளம், வம்மன் பகுதியில் இலங்கையிலிருந்து வரக்கூடிய அகதிகளுக்கு குடியிருப்புகள் கொடுத்து, அவர்களுக்கு நிலங்களும் கொடுக்கப்பட்டு இருக்கின்றன. ஆனால் அங்கு கிணறுகளை வெட்டுகின்றபோது அது பாறையாக இருப்பதால், அவர்கள் கிணறுகளை முறையாகத் தோண்ட முடியவில்லை, விவசாயம் செய்ய முடியவில்லை. தினமும் தலைநகருக்குச் சென்று கூலி வேலை செய்து வருகிறார்கள். எனவே ஊரக வளர்ச்சி திட்டத்தின் கீழ் ஒரு சிறிய தொழிற்சாலை ஒன்றை அமைத்துத் தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

நான் முன்பு கூறியபடி ஆலங்குடி தொகுதி 110 ஊராட்சிகள் கொண்ட மிகப் பெரிய தொகுதியாக இருப்பதால், நிர்வாகத்தை சீரமைக்கவும், நிர்வாகம் நல்ல முறையில் நடக்கவும், அந்தத் தொகுதியை, கரம்பக்குடி, கீரமங்கலம் என்று இரண்டாகப் பிரித்து, ஆலங்குடி, கரம்பக்குடி, கீரமங்கலம் என்று மூன்று தாலுக்காக்களாக ஆக்கித் தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மற்ற மாவட்டங்களில் விளையாட்டு அரங்கங்கள் இருக்கின்றன. ஆனால் புதுக்கோட்டை மாவட்டத்தில், இடங்கள் ஒதுக்கப்பட்டு இருந்தாலும் விளையாட்டு அரங்கங்கள் முழுமையாக செயல்படாமல் இருக்கின்றன. அந்த விளையாட்டு அரங்கங்களை அமைத்துத் தரும்படி கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. அ. வெங்கடாசலம்] [1985 ஏப்ரல் 1

அடுத்ததாக, இங்கே ஒரு மாநிலக் கல்லூரியும், மகளிர் கல்லூரியும் இருக்கின்றன. ஆனால் மேல்படிப்பு படிக்கக்கூடிய எம்.எஸ்.ஸி ஸ்பெஷல் கிளாஸ்கள் பிசிக்ஸ், கெமிஸ்ட்ரிக்கு இந்த ஆண்டு தொடங்க வேண்டும் என்று நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

(பிற்பகல் 12-20)

அடுத்து புதுக்கோட்டை மாவட்டத்தில் சரித்திர புகழ் பெற்ற சித்தன்னவாசல் ஓவியங்கள் இருக்கின்றன. அவை கவனிப்பாரில்லாமல் நாளடைவில் அழிந்து கொண்டிருக்கின்றன. புகழ்பெற்ற அந்த சித்திரங்களை சுற்றுலா மையமாக்கிப் பாதுகாக்கக்கூடிய அளவிலே அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்:

புதுக்கோட்டை மாவட்டத்திலே கோர்ட், ராணி உயர்நிலைப் பள்ளி, அரசு மருத்துவ மனை, ஆலங்குடி தாலுக்கா அலுவலகம், திருமயம் தாலுக்கா அலுவலகம் ஆகிய பல கட்டடங்கள் மன்னர் காலத்திலே கட்டப்பட்டவை. இன்றுவரை முழுமையாகப் பயன்படுகின்ற நிலைமையில் உள்ளன. சிமின்டினால் கட்டினால் கூட உடைந்துவிடும், ஆனால் அந்தப் பகுதியிலே இருக்கிற மண்ணின் தன்மை பலம் வாய்ந்த தன்மை உடையதாக இருப்பதால் 100 ஆண்டுகளுக்கும் மேலாக அந்தக் கட்டடங்கள் அழியாமல் இருக்கின்றன. ஆகவே புதுக்கோட்டைப் பகுதியிலே ஒரு செங்கல் சாம்பல் தொழிற்சாலை ஏற்படுத்தித் தர வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, புதுக்கோட்டை மாவட்டத்திலே கால்நடை மருத்துவ மனையையும் வேளாண்மைக் கல்லூரியையும் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். இந்த ஆண்டு சேலம் மாவட்டத்திற்கு வேளாண்மைக் கல்லூரி ஏற்படுத்துகிற திட்டம் இருக்கிறது. புதுக்கோட்டை மாவட்டத்திலே 1,000 ஏக்கருக்கும் அதிகமான அளவில் ஒரு கால்நடைப் பண்ணை இருக்கிறது, மாவட்டப் பால் பண்ணை இருக்கிறது. அது மட்டுமல்ல. பால் வளத் தொழிற்சாலையும் இயங்கிக் கொண்டிருக்கிறது. இவைகளை யெல்லாம் மையமாக வைத்து அங்கே மருத்துவ மனையை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



1985 ஏப்ரல் 1] [திரு. அ. வெங்கடாசலம்]

அதைப்போலவே அங்கே குடுமியான்மலையிலே வேளாண்மை ஆராய்ச்சி மையம் இருக்கிறது. அங்கே ஒரு வேளாண்மைக் கல்லூரியை ஆரம்பிப்பதற்குத் தேவையான கட்டடம் பாதிக்கு மேல் இருக்கிறது. அங்கே ஏற்கெனவே மாணவர்கள் வெளியிலிருந்து வந்து ஆராய்ச்சி செய்கிறார்கள். அதற்கு கிட்டத்தட்ட 1,000 ஏக்கர் நிலம் இருக்கிறது. வம்பனில் ஆயிரம் ஏக்கர் நிலத்தில் பயிர் ஆராய்ச்சி மையம் வேறு இருக்கிறது. மாண்புமிகு செய்தி அறநிலையத் துறை அமைச்சரின் ஊரான வல்லரசன்கோட்டையில் ஆயிரம் ஏக்கரில் ஒரு பழத் தோட்டம் இருக்கிறது. இவ்வளவு சிறப்புக்களையும் பெற்றிருக்கிற அந்த இடத்திலே ஒரு வேளாண்மைக் கல்லூரியை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று நீண்ட நாட்களாகக் கேட்டும்கூட அது நிறைவேற்றப்படாமல் இருக்கிறது. எனவே தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் அவர்களின் அரசு அடுத்த ஆண்டிலேயாவது அங்கே கால்நடை மருத்துவ மனையையும் வேளாண்மைக் கல்லூரியையும் அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டுக் கேட்டுக்கொள்கிறேன்.

புதுக்கோட்டை மாவட்டம் மிகவும் பின்தங்கிய மாவட்டமாக இருக்கிறது, வறட்சி மாவட்டமாக இருக்கிறது, ஆகவே சிப்காட் தொழில்களுக்கு அதிக நிதி உதவி கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆலங்குடி தொகுதியில் எங்கே பார்த்தாலும் 300 அடிக்குக் கீழே நீர் வளம் நிறைய இருப்பதாக கண்டுபிடித்து இருக்கிறார்கள். கிரவுண்ட் வாட்டர் சர்டிபிகேட் பெறப்பட்டு இருக்கிறது. அங்கே கரம்பக்குடி பகுதியில் பெரியாறு, நரியாறு, அக்னியாறு, வெள்ளாறு ஆகிய ஆறுகள் ஓடுகின்றன. அங்கே வெள்ளம் ஏற்பட்டபோது அங்கே உள்ள பாலங்கள், ரோடுகள் யாவும் பாதிக்கப்பட்டன. சிதைந்துபோய் இருக்கின்றன. ஆகவே அந்த கரம்பக்குடி ஒன்றியத்திற்கு மட்டுமாவது மீண்டும் ஒரு தன்னிறைவுத் திட்டத்தைக் கொடுத்து மீண்டும் அந்தப் பாலங்களையும் ரோடுகளையும் கட்டிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அக்னியாற்றிலே—அங்கே திருமனஞ்சேரி என்ற ஒரு பிரசித்தி பெற்ற கோயில் இருக்கிறது. அங்கே 63 நாயன்மார்களுக்கு சிலைகள் வைக்கப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு ஆண்டும் சனீஸ்வரன் திருவிழா நடத்தப்படுகிறபோது லட்சக்கணக்கான பக்தர்கள் அங்கே செல்ல வேண்டியிருக்கிறது—வெள்ளம் வரும்போது அவர்கள் செல்ல முடியவில்லை. அந்தக் கோயிலுக்குச் செல்ல முடியாமல் அக்னியாறு இருக்கிறது. ஆகவே ரகுநாதபுரம், தட்டமணப்பேட்டை ஆகியவைகளுக்கு இடையே ஒரு பாலம் 45 லட்ச ரூபாய் செலவில் கட்டப்பட்டு வேலை, நடந்து கொண்டிருக்கிறது. அதைபபோலவே திருமன்ஞ்சேரிக்கோயிலுக்குச் செல்லக்கூடிய முறையிலே 15, 20 ஊர்களை இணைக்கக்கூடிய முறையிலே மிகப் பெரிய பாலத்தை அங்கே கட்டிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக வெள்ளாலக்குடியிலிருந்து துவாரா வரையில் ஒரு இணைப்புப் பாலம் அங்கே அக்னி ஆற்றில் போட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அது மட்டும் அல்லாமல் அந்த வட பகுதியில் இருக்கக்கூடிய கிராத்தூர் என்று தனியாக ஒரு கிராமம் ஒதுங்கியிருக்கிறது. அங்கே வெள்ளாறு குறுக்கிடுவதன் காரணத்தால் அங்கே தன்னிறைவுத் திட்டத்தின்கீழ் கட்டப்பட்ட அந்த ரூ. 1 லட்சம் பாலம் உடைக்கப்பட்டு அங்கே போக்குவரத்து மிகவும் பாதிக்கப்பட்ட நிலையில் இருக்கிறது. ஆகவே அந்தப் பாலத்தை பெரிய அளவில் கட்டித் தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். கரம்பகுடி ஒன்றியத்தில் மதனைப்பட்டி கிராமத்தில் மகாராஜா காட்டாறு என்ற பெரிய ஆறு ஓடுகிறது. அந்த ஆற்றின் குறுக்கே ஒரு அணை போடுவதன் காரணமாக அந்தப் பகுதியில் வறண்டு இருக்கக்கூடிய 20 குளங்களுக்கு தண்ணீர் பாயக்கூடிய அந்த அணையைக் கட்டித் தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இதோடு ஆலங்குடி தொகுதியில் தென் பகுதியில் உள்ள இசுவப்பட்டி, நாத்தமங்கலம், கொத்த மங்கலம் போன்றவை புயல் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டபோது ஆலங்குடி தொகுதியில் அது தாழ்வான பகுதியாக இருப்பதால் பாதிக்கப்பட்ட அந்த நிலையில் தமிழகத்தின் முதலமைச்சர் புரட்சித் தலைவர் அவர்கள் அந்தப் பகுதிகளுக்குச் சென்று பார்வையிட்டு உணவுப் பொட்டலங்கள் எல்லாம் வழங்கினார்கள். ஆகவே இப்படி புயல், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட அந்த





வேளையில்—அங்கே இருக்கக்கூடியவர்கள் 100-க்கு 75 விழுக்காடு மக்கள் ஆதி திராவிடர் மக்கள் அங்கே வசிக்கின்ற காரணத்தால் அவர்களுக்கு புயலும், வெள்ளமும் அங்கே மாறி மாறி அடிப்பதால் அங்கே அவர்கள் தங்குவதற்கு புயல் பாதுகாப்பு இல்லத்தைக் கட்ட வேண்டும். மேலும், அந்தப் பகுதியில் இருக்கக்கூடிய வெள்ளாற்றில் ஒரு அணையைக் கட்டுவதன் மூலம் அந்த நாத்தமங்கலம், கொத்தமங்கலம் போன்ற அந்த பகுதி களுக்கு மிகவும் பயனுடையதாக இருக்கும் என்று சொல்லி, மேற் கூறிய இந்தக் கோரிக்கைகளை தமிழகத்தினுடைய முதலமைச்சர் புரட்சித் தலைவர் அவர்கள் அரசு நிறைவேற்றித் தரவேண்டும் என்று கேட்டு இங்கே மாண்புமிகு டாக்டர் நாவலர் அவர்கள் சமர்ப்பித்துள்ள 1985-86 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையை முழு மனதோடு வரவேற்று பாராட்டி மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைச் சொல்லி விடை பெறு கிறேன். நன்றி, வணக்கம்.

***திரு. கு. தமிழரசன் :** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் இந்த மாமன்றத்தில் அளித்து இருக்கிற நிதிநிலை அறிக்கையை இந்திய குடியரசு கட்சியின் சார்பில் நான் மகிழ்ச்சியோடு பாராட்டுவதோடு வரவேற்கிறேன். ஏன் என்று சொன்னால் சாதாரண கிராம மக்கள் எந்தவிதத்திலும் பாதிக்கப்படாத விதத்தில் வரிகள் விதிக்கப்பட்டு இருக்கின்றன. பல நல்ல கருத்துக்களும் பல நல்ல ஒதுக்கீடுகளும் இதில் அமைந்து இருக்கின்றன. எனவே நான் முதலில் எங்களுடைய கட்சியின் சார்பில் இந்த நிதிநிலை அறிக்கையை வரவேற்கிறேன்.

சாராயத்திற்கு வரி விதிக்கப்பட்டு இருக்கிறது. இதை நான் மகிழ்ச்சியோடு வரவேற்கிறேன். அதே நேரத்தில் இந்த சாராய விலை உயர்வினால் பாதிக்கப்படக்கூடியவர்கள் * * சாராயத்தின் விலை உயரப் போகிறது. * * பகுதியிலும், கிராமப்பகுதியிலும் கள்ளச் சாராயம் பெருக்கெடுத்து ஓடப் போகிறது . . . .

** மாண்புமிகு மாற்றுத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, குறிப்பிட்ட இனத்தைக் குறிப்பிடுவதுபோல் இருக்கிறது. அந்தப் போக்கில் மாண்புமிகு உறுப்பினர் பேசுவது நல்லதல்ல.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. செ. செம்மலை):** * * என்ற வார்த்தைகளை நீக்கும்படி உத்திரவிடுகிறேன்.

**திரு. கு. தமிழரசன்:** தனி இனத்தைப் பற்றி குறிப்பிட வேண்டாம் என்று சொல்கிறார்கள். இதற்காக ஒரு தனித் துறை இருக்கிறது. தனி அமைச்சர் இருக்கிறார். எனவே இதைக் குறிப்பிடுவதில் தவறு இருக்க முடியாது என்று நான் கருதுகிறேன். தாழ்த்தப்பட்ட மக்களின் வளர்ச்சிக்கு 125 கோடி ரூபாய் தமிழக அரசு ஒதுக்கியிருக்கிறது. அதை நான் மகிழ்ச்சியோடு வரவேற்கிறேன். இந்தப் பணம் தாழ்த்தப்பட்ட மக்களின் நலனுக்காக, அவர்களுடைய வளர்ச்சிக்காக திட்டங்கள் போட்டு அந்தத் திட்டங்களுக்கு ஒதுக்கிய பணம் போய் சேருகிறதா என்று பார்ப்போமானால் கடந்த காலங்களில் பெரும் பகுதி பணம் திருப்பி கொடுக்கப்பட்டு இருக்கிற வரலாற்றைத்தான் நாம் பார்க்கிறோம். எனவே இந்தப் பணத்தை ஒதுக்கி அந்த மக்கள் வளர்ச்சிக்கும் அவர்களுடைய நலப் பணிகளுக்கும் அந்தப் பணம் போய் சேருகிற அளவிலே கண்காணிப்பதற்கு சட்ட மன்றத்திலே ஒரு குழுவை ஏற்படுத்த வேண்டும் என்று நான் இந்த அரசை வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன். இதேபோல் ஒரு குழு பல மாநிலங்களில் இருக்கிறது. பிற மாநிலங்களில் சட்ட மன்றத்தில் ஆதி திராவிட மக்களுக்கு ஒதுக்கப்படுகிற பணம் சரியாக போய்ச் சேருகிறதா, அவர்கள் நலப் பணிகளுக்கு அது போய்ச் சேருகிறதா என்று கண்காணிப்பதற்கு தனியாக ஒரு குழு இருக்கிறது. ஆனால் இங்கே இல்லை. அப்படிப்பட்ட ஒரு குழுவை இங்கேயும் ஏற்படுத்த வேண்டுமென்று இந்த மாமன்றத்தில் நான் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

---

* * மாண்புமிகு மாற்றுத்தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.





(பிற்பகல் 12-30)

தாழ்த்தப்பட்ட மக்களுக்காக ஒதுக்கப்படுகின்ற இந்தப் பணம் திருப்பி அனுப்பப்படுவதற்குக் காரணம் என்னவென்றால், தாழ்த்தப்பட்ட மக்களுக்காகப் போடப்படுகின்ற அதிகாரிகள் அந்த மக்களின் நலனில் அக்கறை இல்லாதவர்களாகவும், அந்த மக்களுக்கு விரோதிகளாகவும் இருப்பதால்தான் இந்தப் பணம் பெருமளவிற்கு திருப்பி அனுப்பப்படுகிறது. எனவே, இனியும் அப்படி அந்தப் பணம் திருப்பியனுப்பப்படுகின்ற நிலைமைகள் ஏற்பட்டால் அந்த அதிகாரிகளின்மீது கடுமையான நடவடிக்கை எடுத்தால், அந்தப் பணம் ஒழுங்காகச் செலவிடப்படுகின்ற நிலைமைகள் இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். எனவே, இனியும் இப்படிப்பட்ட நிலையில் பணம் திருப்பியனுப்பப்படுகின்ற கதை இருந்தால் அந்த அதிகாரிமீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நான் சார்ந்திருக்கின்ற வடாற்காடு மாவட்டம் பிற்பட்ட மாவட்டமாக இருக்கிறது. தொழில் துறையிலும் சரி, மற்ற எல்லா வகைகளிலேயும் சரி, அது மிகவும் பிற்பட்ட மாவட்டமாக உள்ளது. அந்த மாவட்டத்தில் இருபதுக்கும் மேற்பட்ட கல்லூரிகள் இருக்கின்றன. பல மாவட்டங்களில் பல்கலைக் கழகங்கள் இருக்கின்றன; ஆனால் என்ன துரதிருஷ்டமோ தெரியவில்லை, எங்கள் மாவட்டத்தில் ஒரு பல்கலைக் கழகம் கூட இல்லை. எனவே, வடாற்காடு மாவட்டத்தில் ஒரு பல்கலைக் கழகத்தை அமைக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

நான் சார்ந்திருக்கின்ற பேரணாம்பட்டு தொகுதி, தமிழகத்திலே அன்னியச் செலாவணி பெற்றுத் தருகின்ற தொகுதிகளிலே முன்னோடியாக இருக்கின்ற ஒரு தொகுதி. அன்னியச் செலாவணி மிகுதியாக வருகின்ற தொகுதி எது என்று கேட்டால் அது பேரணாம்பட்டு தொகுதியாக இருக்கும். அப்படிப்பட்ட பேரணாம்பட்டு தொகுதி இன்றைக்கு வறண்ட நிலையில் இருக்கிறது. அந்தத் தொகுதியில் உள்ள பல கிராமங்களில் ரோடு வசதி இல்லாமல், பஸ் வசதி இல்லாமல், குடிதண்ணீர் வசதி இல்லாமல், மலைப் பகுதிகளில், கிராமப்

[திரு. கு. தமிழரசன்] [1985 ஏப்ரல் 1

பகுதிகளில் மக்கள் வாழ்கிறார்கள். அன்னியச் செலாவணியை ஈட்டித் தருகின்ற அந்தத் தொழிலில் ஈடுபட்டிருக்கின்ற சுமார் பத்தாயிரம் தோல் பதனிடும் தொழிலாளர்கள் குஷ்ட ரோகிகளைப் போன்று, போதிய மருத்துவ வசதிகள் இல்லாமல் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அந்த மக்கள் வளர்ச்சி அடைவதற்கும், பலன் அடைவதற்கும், கூட்டுறவு முறையில் தோல் பதனிடும் தொழிற்சாலையை உருவாக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

அதுமட்டுமல்லாமல், அந்தத் தொழிலாளர்களுக்கு கூட்டுறவுச் சங்கத்தின் மூலம் வீட்டு வசதிகள் இல்லை, மற்ற எந்த வசதிகளும் இல்லை. அப்படிப்பட்ட பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட தோல் பதனிடும் தொழிலாளர்களுக்கு தனிக் குடியிருப்பு வசதிகளை அரசு செய்து கொடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். சுமார் அறுபது கிலோமீட்டருக்கு என்னுடைய தொகுதியிலே தண்ணீரே கெட்டு விட்டது. அந்தத் தண்ணீரைக் குடிக்க முடியாது; உப்புக் கரிக்கிறது; சுகாதாரம் கெட்டு விட்டது. காரணம், தோல் பதனிடும் தொழிற்சாலைகளிலிருந்து வெளியேற்றப்படும் கழிவு நீர் முறையாக வெளியேற்றப்படாததால், அறுபது கிலோமீட்டர் தூரம் வரையில் அந்தத் தண்ணீர் தன்னுடைய தரத்தை இழந்து, விவசாயம் செய்ய முடியாத அளவிற்கும், குடிக்க முடியாத அளவிற்கும், சுகாதாரம் கெட்டு மக்கள் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே, அந்தக் கழிவு நீரை முறையாக வெளியேற்ற வேண்டுமென்று அந்தத் தொழிற்சாலைகளுக்கு அரசு அறிக்கை அனுப்ப வேண்டும்; அதற்கு முற்பட வேண்டும். அதற்கும் பலன் இல்லையென்றால், அந்தத் தொழிற்சாலைகளுக்கு மூடுவிழா செய்வதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைக்கு தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வீட்டு வசதி செய்து தருவதற்கு தனித் துறையே வைத்து, அதற்காக தனித் தாசில்தாரையே நியமித்து நடவடிக்கை எடுத்துக்கொள்ளப் படுகிறது. ஆனால் ஒவ்வொரு கிராமத்திலும், பத்து பதினைந்து ஆண்டுகளாகியும் வீட்டு வசதி கோரி மனு போட்டவர்களுக்கு



1985 ஏப்ரல் 1] [திரு. கு. தமிழரசன்]

வீட்டு வசதி செய்து தரப்படவில்லை. காரணம், மனுப் போட்டு, அது தாசில்தாருக்கு வந்து, பிறகு மேலே உள்ள அதிகாரி களுக்கு வந்து, அரசுக்கு வந்து உத்தரவு போட்டால் அதன் பேரில் நிலச்சுவான்தார்கள் ஸ்டே வாங்கிவிடுகிறார்கள். பிறகு பத்து பதினைந்து ஆண்டுகளுக்கு அந்தத் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வீட்டு வசதி கிடைப்பதில்லை. ஒவ்வொரு கிராமத்திலும் பத்தாண்டுகள், இருபதாண்டுகள் ஆகியும் வீட்டு வசதிப் பிரச்னை நிறைவேறுவதில்லை. ஆகவே, கடுமையான நடவடிக்கை எடுத்து, அப்படி ஸ்டே வாங்கினாலும் கூட, தனி நீதிமன்றமாவது வைத்து, உடனடியாக பிரச்னை தீர வழிவகை செய்ய வேண்டும். அதற்காக இந்த அரசு நில ஆர்ஜிதத்திற்காக தனி நீதிமன்றம் ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

வேளாண்மைத் துறையைப் பொறுத்தவரையில், உரங்களுக்குப் போடப்பட்டிருக்கின்ற வரிகளை ஒருமுனை வரியாக்கி யிருக்கிறார்கள். அதற்காக நான் பாராட்டுகிறேன்.

வேளாண்மை என்று சொன்னால், அதில் பெருமளவில் ஈடுபட்டிருப்பது கிராமப் பகுதிகளில் உள்ள தாழ்த்தப்பட்ட மக்கள்தான். அந்த விவசாயத் தொழிலாளர்களைப் பொறுத்த வரையில் ஆடவருக்கும், பெண்டிருக்கும் இவ்வளவு தர வேண்டுமென்று குறைந்தபட்சக் கூலிச் சட்டம் இருக்கிறது. ஆனால் அந்த அளவிற்கு கிராமப்புறங்களிலே தருகிறார்களா என்றால் ஒருவரும் கொடுப்பது கிடையாது. அந்தக் கூலியைக் கொடுப்பதற்கு நிலச்சுவான்தார்கள் மறுக்கிறார்கள். அது சரியாக நடைபெற—உயர்மட்டக் குழு என்று இருந்தாலும் அது வேண்டிய நடவடிக்கைகளை எடுப்பதில்லை. எனவே, இதற்காகத் தனியாக மாவட்டக் குழு என்று தனியாகப் போட்டோ, கூலி நிர்ணயக் குழு என்று போட்டோ இதைக் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

வேளாண்மை உற்பத்தியைப் பெருக்க வேண்டுமென்று சொல்லுகிறோமே தவிர, ஏராளமான கோயில்களுக்கு ஆயிரக் கணக்கான எக்கர் நிலங்கள் வீணாகக் கிடக்கின்றன. தரம்பாக, தரிசாகக் கிடக்கின்றன. இப்படிப்பட்ட நிலங்களை தாழ்த்தப் பட்ட விவசாயிகளுக்குப் பிரித்து, பகிர்ந்து கொடுத்தால் உற்பத்தி

பெருகும். வேளாண்மை உற்பத்தி, வேளாண்மை உற்பத்தி என்று சொன்னால் போதுமா? நிலச்சுவான்தார் கைகளிலே ஆயிரக் கணக்கான ஏக்கர் நிலங்கள் குவிந்து கிடக்கின்றன. அதே நேரத்திலே மற்றொரு பக்கத்திலே சாதாரண கூலி விவசாயிகள் நிலம் இல்லாமல் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். எனவே அப்படிப்பட்ட விவசாயக் கூலிகளுக்கு வீணாகக் கிடக்கின்ற நிலங்களைப் பகிர்ந்து கொடுத்தால் வேளாண்மை உற்பத்தி பெருகத் திட்டமிட்டவர்களாக இருப்போம். எனவே வீணாகக் கிடக்கின்ற நிலங்களை சாதாரண விவசாயிகளுக்கு பகிர்ந்து கொடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இப்படி தாழ்த்தப்பட்ட மக்கள், தாழ்த்தப்பட்ட மக்கள் என்று பேசுவதன் காரணத்தால் ஏதோ நான் ஒரு இனத்திற்காகப் பேசுகிறேன், ஒரு சாதிக்காகப் பேசுகிறேன் என்ற கருத்து கூட இங்கே இருப்பதாக நான் அறிகிறேன். அப்படியில்லை. இந்த தேசம் வளர வேண்டும் என்று எல்லோரும் சொல்கிறோம். அப்படி தேசம் வளர வேண்டும் என்று சொன்னால் வளர வேண்டியது தேசப்படம் அல்ல. தேசத்தில் உள்ள மக்கள் வளர வேண்டும் என்பதுதான் பொருள். தேசத்தின் மக்கள் என்று சொன்னால் சாதாரண மக்கள், நசுக்கப்பட்ட மக்கள், ஒடுக்கப் பட்ட மக்கள், தாழ்த்தப்பட்ட மக்கள் வளர வேண்டும். அவர்கள் எல்லாம் வளர்ச்சி அடைந்தால்தான் அது மக்களின் வளர்ச்சியாக இருக்கும். மக்களில் பெரும்பாலானவர்கள் தாழ்த்தப்பட்ட மக்கள், ஒடுக்கப்பட்ட மக்கள், நசுக்கப்பட்ட மக்கள்தான். அந்த மக்கள் வளர்ந்தால்தான் அது மக்களின் வளர்ச்சியாக இருக்கும். இந்த மக்களுக்காக ஒதுக்கீடுகளைச் செய்கின்றபோது மிகப் பெரிய பரந்த மனப்பான்மையோடுதான் அதைச் செய்கிறோம் என்பதை எண்ண வேண்டும். 3 ஆயிரம் ஆண்டுகளாக ஒடுக்கப்பட்டு இருக்கின்ற, தாழ்த்தப்பட்டிருக்கின்ற, நசுக்கப்பட்டிருக்கின்ற மக்களுக்கு நன்மைகளைச் செய்கின்ற போது மிகப் பெரிய பரந்த மனப்பான்மையோடு, ஒரு தேசியக் கண்ணோட்டத்தோடு ஒதுக்கீடு செய்தால்தான் உண்மையாகவே மக்களின் வளர்ச்சியிலே தேசத்தின் வளர்ச்சியிலே நாம் அக்கறை உள்ளவர்களாக இருப்போம். எனவே இந்த மக்களின் வாழ்விலே முன்னேற்றம் ஏற்பட வேண்டிய ஏற்பாடுகளை அரசாங்கம் உறுதியான திட்டங்கள் மூலம் செய்து தர வேண்டும்.





ஒட்டுமொத்தமாக 125 கோடி தாழ்த்தப்பட்டவர்களுக்கு ஒதுக்கீடு என்று இருக்கிறதே தவிர அதற்கான விரிவான திட்டங்கள் இல்லை. ஆதி திராவிட மாணவர்கள் விடுதியினைப் பார்த்தால் ஒரு விடுதி கூட வசதியான விடுதியாக இல்லை. என்றைக்கு இந்தக் கட்டிடம் இடிந்து விழுமோ என்ற நிலையில் மேசை, நாற்காலி இல்லாமல், மின்சார வசதி இல்லாமல் சுதந்திரம் அடைந்தபோது என்ன தொகை ஒதுக்கப்பட்டு என்ன நிலையில் இருந்ததோ அதே நிலையில் தான் இன்றைக்கும் பணம் ஒதுக்கப் பட்டு நாடு சுதந்திரம் அடைந்து இவ்வளவு ஆண்டுகள் ஆகியும் அதே நிலையில்தான் இருக்கின்றது. இன்றைய பொருளாதார நிலைமைக்கு ஏற்றவாறு அந்தத் தொகைகள் உயர்த்தப்பட வில்லை. அவை உயர்த்தப்படுவதோடு தாழ்த்தப்பட்டவர்களுக்கு என்று இருக்கின்ற விடுதிகளுக்கு சொந்தக் கட்டிடம் இல்லாமல் இருக்கின்ற நிலையை மாற்றி, வாடகைக் கட்டிடங்களில் இருக் கின்ற நிலையை மாற்றி, உறுதியான கட்டிடங்கள் இல்லாத நிலைமையை மாற்றி, போதிய கட்டிடங்களும், உறுதியான கட்டி டங்களும் கட்டித் தருகின்ற வகையில் இந்த அரசு ஏற்பாடு களைச் செய்து தரவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து உதவித் தொகையை உயர்த்தினால்தான் அந்த மாணவர்களுக்குத் தேவையான வசதிகளைச் செய்து தர முடியும். உதவித் தொகை மிகக் குறைந்த தொகையாக இருக்கின்றது. ஒரு மாணவனின் சாதாரணக் கட்டணத்திற்குக் கூட அது போதாது. எனவே அதை உயர்த்தித் தர வேண்டும். தாழ்த்தப் பட்ட மக்களுக்காக இந்த அரசு பல பணிகளைச் செய்திருக்கின்றது. ஆனால் அவை அனைத்தும் முறையாகப் போய் சேர்கிற அளவில் இந்த அரசு கண்காணிக்க வேண்டும் என்று சொல்லி இந்தப் பட்ஜெட்டை இந்தியக் குடியரசுக் கட்சியின் சார்பிலே வரவேற்று திட்டங்கள் அனைத்தும் முறையாக முழு அளவுக்கு மக்களுக்குச் சென்று சேர வழிவகை செய்ய வேண்டும் என்று கேட்டு முடிக்கிறேன்.

* **திரு. கே. பி. கே. சேகர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சாதாரண, கழகத்தினுடைய செயலாளராக இருந்து, அசோக் லேலண்ட் தொழிற்சாலையில் தொழிலாளியாக இருந்த என்னை சட்டமன்றப் பேரவை உறுப்பினராக்கிய நான் வழிபடும் இறைவன் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர்

[திரு. கே. பி. கே. சேகர்] [1985 ஏப்ரல் 1

புரட்சித்தலைவர் அவர்களுக்கும், என்னை 22 ஆயிரம் வாக்கு வித்தியாசத்தில் வெற்றிபெற வைத்த பொன்னேரித் தொகுதி வாக்காளர் பெருமக்களுக்கும், எனது வெற்றிக்காக உழைத்த பொன்னேரி தொகுதி கழகச் செயல் வீரர்களுக்கும், தோழமைக் கட்சித் தோழர்களுக்கும் எனது நன்றியைக் காணிக்கை யாக்குகிறேன்.

மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் அவர்கள் இந்த மாமன்றத்தில் வைத்திருக்கின்ற 1985-86 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையை வரவேற்றுப் பேசுவதற்கு வாய்ப்பு நல்கிய மாண்புமிகு மன்றத்தின் துணைத் தலைவர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட் டிருக்கிறேன்.

இங்கே எனக்கு முன்னாலே பேசியவர்கள் சில சம்பவங்களைக் குறிப்பிட்டுப் பேசுகிறபோது இந்த சர்க்கார் தொழிலாளர்களின் விரோத சர்க்கார் என்று பேசினார்கள். கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் திரு. வி. பி. சிந்தன் அவர்கள் அவ்வாறு இங்கே பேசினார்கள். இந்த ஆட்சியில் போலீஸ் அராஜகம் நடக்கிறது, தொழில் அமைதி இல்லாமல் இருக்கிறது என்றெல்லாம் சொன் னார்கள். ஆனால் காங்கிரஸ் கட்சி இந்த நாட்டை ஆண்ட போதும் இது தொழிலாளர் விரோத சர்க்கார் என்றுதான் சொன்னார்கள். தி.மு.க. ஆண்டபோதும் இதைத் தொழிலாளர் விரோத சர்க்கார் என்றுதான் சொன்னார்கள். புரட்சித் தலைவரின் அரசைப் பார்த்தும் இது தொழிலாளர் விரோத சர்க்கார் என்று சொல்கிறார்கள். அப்படி என்றால் கம்யூனிஸ்ட் கட்சியின் ஆட்சி மட்டும்தான் தொழிலாளர்களுக்கான அரசு என்று இவர்கள் கருதுகிறார்களா என்று கேட்கிறேன். மேற்கு வங்கத்திலே நீங்கள்தான் ஆட்சி செய்துகொண்டிருக்கிறீர்கள். அங்கே மட்டும் தொழில் அமைதி இருக்கின்றதா என்பதை மார்க்ஸிஸ்ட் தோழர்களிடத்திலே கேட்டுக்கொள்ள விரும்பு கிறேன். அங்கேயும் சணல் நூற்பாலைகள் மூடப்பட்டு போலீஸ் தடியடிகள் நடக்கின்ற ஒரு சூழ்நிலையை நாம் அன்றாடம் பத்திரிகையிலே பார்த்துக் கொண்டிருக்கிறோம்.



1985 ஏப்ரல் 1] [திரு. கே. பி. கே. சேகர்]

(பிற்பகல் 12-40)

அது மட்டுமல்ல, அவர்கள் சொல்கிறார்கள், இது தொழிலாளர் களுடைய விரோத சர்க்கார் என்று. தொழிலாளர் விரோத சர்க்கார் இதுவல்ல என்பதனை அருள்கூர்ந்து மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்களுக்கு நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

1972 ஆம் ஆண்டு தமிழகத்திலே மாற்றுக் கட்சியினர் ஆட்சி நடத்தியபொழுது, தொழிற்சங்கத்தினுடைய தலைவர் திரு. குசேலர் அவர்கள் படுபயங்கரமாகத் தாக்கப்பட்டது மட்டுமல்லாமல் இந்த மாமன்ற உறுப்பினராக இருக்கிற நம்முடைய திரு. சிந்தன் அவர்கள் மாதவரத்தில், தன்னுடைய காரிலே போனால் உயிருக்குப் பாதுகாப்பு இருக்காது என்று கருதி பல்லவன் பேருந்திலே பயணம் செய்தபொழுது இரவு நேரத்தில் கத்தியால் குத்தப்பட்டு உயிரோடு போராடிக் கொண்டிருந்த நிலையை நாம் நன்றாக உணர்ந்துள்ளோம்.

அது மட்டுமல்ல. இந்த மாமன்றத்தினுடைய முன்னாள் உறுப்பினராக இருந்த திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் மீது கொலை முயற்சி குற்றம் சுமத்தி கைது செய்யப்பட்ட சம்பவங்கள் நமக்கு நன்றாக நினைவிலிருக்கும் என்று நம்புகிறேன்.

அது மட்டுமல்ல. தமிழகத்திலே எந்த மூலையைப் பார்த் தாலும் போலீஸ் அராஜகம் தலை விரித்தாடியது. எம்.ஆர்.எப். தொழிலாளர்கள் தொழிற்சங்கத்தை நடத்த முடியாத சூழ்நிலை இருந்தது. ஆவடி டாங்க் பாக்டரி தொழிலாளர்கள் தொழிற் சங்கத்தை நடத்த முடியாத சூழ்நிலை இருந்தது. அசோக் லேலண்ட் தொழிலாளர்கள் தொழிற்சங்கத்தை நடத்த முடியாத நிலைமை இருந்தது. 1972-ல் போனசுக்காகப் போராடியதன் விளைவாக எவ்வளவு பெரிய இன்னல்களுக்கும் இடுக்கண் களுக்கும் அவர்கள் ஆளானார்கள் என்பதை இந்த மாமன்றத் திலே இருக்கிற மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. பி. சிந்தன் அவர்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

அது மட்டுமல்ல. இதே வி. பி. சிந்தன் அவர்கள், 1972-லே நடந்த போராட்டத்தின்பொழுது, அசோக் லேலண்ட் வாயிற் கூட்டத்திலே பேச முடியாத சூழ்நிலை இருந்ததை இந்த மாமன்றத்தின் நினைவிற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

[திரு. கே. பி. கே. சேகர்] [1985 ஏப்ரல் 1

ஆனால், அவர்கள் எல்லாம் வேண்டுமென்றே, திசை திருப்பி, இன்றைக்கு இந்த புரட்சித் தலைவர் நல்லாட்சிமீது குறைகளைச் சொல்கிறார்கள். நான் ஒன்றை மட்டும் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன் இந்த ஆட்சி தொழிலாளர் விரோத சர்க்கார் என்று சொன்னால், சாதாரணத் தொழி லாளியாக இருந்த நானும் என்னைப் போன்ற சாதாரணத் தொழிலாளியாக இருந்த மங்களூர் தொகுதி சட்டமன்ற மாண்புமிகு உறுப்பினர் நம்முடைய தங்கராசு அவர்களும் எப்படிச் சட்டமன்றத்திற்கு வெற்றி பெற்று வந்தோம் என்பதை நான் இந்த நேரத்திலே கேட்க விரும்புகிறேன்.

அதே நேரத்தில், இந்த நிதிநிலை அறிக்கையினை வரவேற்றுப் பேசுகிற நேரத்தில் அரசு பணியாளர்களுக்கு குடும்ப நல நிதித் திட்டத்தின் கீழ் ரூ. 10,000 என்றிருந்ததை ரூ. 20,000 ஆக உயர்த்தித் தந்ததற்காக மாண்புமிகு புரட்சித் தலைவர் அரசை வரவேற்று பாராட்டுகிறேன்.

இந்த அறிக்கைமீது என்னுடைய கருத்தாக சில நல்ல காரியங்களைச் செய்ய வேண்டுமென்று அரசினுடைய கவனத் திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதி மிகவும் பின்தங்கிய தொகுதி. தென் ஆந்திரக் கடற்கரையின் ஓரப் பகுதியில் இருக்கிற பழவேற்காடு பகுதி என்னுடைய தொகுதியைச் சேர்ந்ததாகும். கடந்த 1984 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் பெய்த கடுமையான மழை, வெள்ள, புயலின் காரணமாக, அது மிகவும் பாதிக்கப்பட்டு, தனித் தீவு போல் ஆகிவிட்ட சூழ்நிலை இருந்தது. தனித் தீவிலே வாழ்ந்து கொண்டிருக்கிற அந்த மக்களுக்கு உணவுப் பொட்டலங்களை ஹெலிகாப்டர் மூலமாக வழங்கிய மாநில—மத்திய அரசு அதிகாரிகளைப் பாராட்டுகிற அதே நேரத்தில், அந்த மக்கள் ஸ்ரீஹரிகோட்டா விண்வெளி ஆராய்ச்சி நிலையத்தின் அபிவிருத்தி காரணமாக, அகதிகளைப் போன்று பழவேற்காடு கலங்கரை விளக்குப் பகுதியிலே குடி யமர்த்தப்பட்டிருக்கிறார்கள். கலங்கரை விளக்கப் பகுதியிலே குடியமர்த்தியிருப்பதால், அரங்கம், திருமலைநகர், சம்பாசி பள்ளிகுப்பம் போன்ற 14 மீனவக் குப்பங்களைச் சேர்ந்தவர்கள் படகு, வலைகளை இழந்து—மீன் பிடிக்கின்ற தொழிலைச் செய்கின்ற அந்த மீனவத் தொழிலாளர்கள் அவதிக்குள்ளாகி



1985 ஏப்ரல் 1] [திரு. கே. பி. கே. சேகர்]

யிருக்கிறார்கள். அந்த அரங்கம், திருமலை நகர்ப் பகுதியைச் சேர்ந்த கலங்கரை விளக்கப் பகுதியிலே குடியமர்த்தப்பட் டிருக்கிற, அவர்களுக்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் இல்லை, அவர்களுக்குச் சரியான பாதை வசதி இல்லை; மின் விளக்கு வசதி இல்லை. இப்படிப்பட்ட சூழ்நிலையிலே தான் அகதிகளைப் போல் இருக்கிற அவர்களது வாழ்வை வளப்படுத்த அரசு வங்கி மூலம் கடன் உதவி செய்வதற்கு ஆவன செய்ய வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

அது மட்டுமல்லாமல், பழவேற்காடு பகுதியிலே பிடிபடுகின்ற இறால் மீன்களை தனியார் வாங்கி, கொள்கை இலாபத் திற்கு விற்கிறார்கள். ஆகவே, அந்த இறால் மீன் வியாபாரத்தை அரசாங்கமே ஏற்று நடத்த வேண்டுமென்று நான் அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

என்னுடைய தொகுதி பொன்னேரி என்று சொல்வார்கள். அந்த ஏரியில் பொன் இருக்கிறதோ, இல்லையோ, மண் நிறைய இருக்கிறது. அந்த ஏரியை மராமத்து செய்து, உடைப்பெடுத்துப் போயிருக்கிற கரைகளைப் பலப்படுத்தி, அந்தக் கரைகளை வலுப்படுத்துகிற வகையிலே ஏரிக் கரைகளின்மீது மரம் செடிகளை வைத்து பாதுகாப்பு அமைத்துத் தரவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியான பொன்னேரியை இணைக்கிற சாலை திருவொற்றியூர் சாலையாகும். அந்தச் சாலையில் நாப்பாளையம் என்ற கிராமத்திற்கு அருகில் ஒரு மேம்பாலம் கட்டுகிற பணி 10, 15 ஆண்டுகளாக நடந்து வருகிறது. அங்கே வெறும் தூண்களாகத்தான் நிறுத்தப்பட்டிருக்கின்றன. அந்தப் பணிகள் இன்னும் முடிக்கப்படாமல் இருக்கின்றன. அதனால் வெள்ளக் காலங்களில் தண்ணீர் வருகிறபோது போக்குவரத்து பாதிக்கப்படுகிறது. அந்தப் பாலத்தை உடனடியாக முடித்துத் தரவேண்டுமென்று இந்த அரசிடம் கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல என் தொகுதியில் ஆரணி ஆறு என்று இருக்கிறது. அந்த ஆற்றின் தண்ணீரும், குசஸ்தலை ஆற்றுத் தண்ணீரும் வெள்ளக்காலங்களில் வீணாக கடலில் சென்று விழுகிறது. அந்தத் தண்ணீரை தடுத்து நிறுத்தி ஒரு அணையை கட்டி,

[திரு. கே. பி. கே. சேகர்] [1985 ஏப்ரல் 1

கால்வாய்களின் மூலம் ஏரிகளுக்கு அனுப்பினால், பம்ப் செட்டுகள் இல்லாமல் அவதிப்படுகிற சிறு விவசாயிகளுக்கு மிகவும் உதவியாக இருக்கும்.

என்னுடைய தொகுதியில் ஆரணி என்ற பேரூராட்சி இருக்கிறது. அந்தப் பேரூராட்சியில் 6 ஆயிரம் நெசவாளர் குடும்பங்கள் இருக்கிறார்கள். அந்த நெசவாளர் குடும்பங்களுக்கு இதுவரையிலும் அரசு ஒதுக்குகிற எந்த நிதியுதவியும் போய் சேரவில்லை. ஆகவே அந்த ஏழை நெசவாளர்களுக்கு உதவுகிற வகையில் பணிகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஆர்.எல்.இ.ஜி.பி., என்.ஆர்.இ.பி. மற்றும் தாட்கோ போன்ற திட்டங்களின் மூலம் கல்வீடுகள் கட்டுகிற திட்டம் இருக்கிறது. அதை நான் வரவேற்கிறேன். அதேநேரத்தில் மூன்று சென்ட் அரசாங்கம் வழங்குகிற குடிமனைப் பட்டா இருந்தால்தான் கல் வீடுகளைக் கட்டுவதற்கு இயலும் என்று அரசு அதிகாரிகள் சொல்கிறார்கள். பன்னெடுங்காலமாக, பரம்பரை பரம்பரையாக சேரி நத்தம் புறம்போக்கிலும், கிராம நத்தம் புறம்போக்கிலும் என் தொகுதியில் மக்கள் வீடுகளைக் கட்டிக்கொண்டு இருக்கிறார்கள். அந்தக் குடிசை வீடுகளைக் கட்டிக் கொண்டிருக்கிற மக்களுக்கு கல் வீடுகளை கட்டிக் கொள்கிற வாய்ப்பில்லாமல் இருக்கிறது. ஆகவே அருள்கூர்ந்து அந்தச் சேரி நத்தம் புறம்போக்கிலும் கல் வீடுகளைக் கட்டலாம் என்று அரசு சட்டத் திருத்தம் கொண்டு வரவேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

பொன்னேரியில் லோகநாதன் நாராயணசாமி கலைக் கல்லூரி இருக்கிறது. இந்தக் கலைக் கல்லூரி 65 ஏக்கர் விஸ்தீரணத்தில் இருக்கிறது. ஆனால் இந்தக் கல்லூரிக்கு காம்பவுண்ட் சுவர் இல்லாமல் இருப்பதால் தனியார்கள் அந்த இடங்களில் குடிசைகளைப் போடுகிற நிலைமை இருந்து வருகிறது. இதனைத் தடுக்கிற வகையில் அரசாங்கம் அந்தக் கலைக் கல்லூரிக்கு ஒரு தடுப்புச் சுவரை, பாதுகாப்புச் சுவரை அமைத்துத் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மேலும் அந்தக் கல்லூரியில் பி.ஏ. (பாலிட்டிக்ஸ்) வகுப்பு இருப்பதை எம்.ஏ. (பாலிட்டிக்ஸ்)



1985 ஏப்ரல் 1] [திரு. கே. பி. கே. சேகர்]

ஆகவும், பி.எஸ்.ஸி (மாத்ஸ்) இருப்பதை எம்.எஸ்.ஸி (மாத்ஸ்) வகுப்பாகவும் உருவாக்கித் தர வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

அந்தக் கலைக் கல்லூரியிலே படிக்கிற தாழ்த்தப்பட்ட ஆதிதிராவிட மாணவர்களுக்கு சொந்தமான விடுதி இல்லாமல் தனியார் வாடகை கட்டிடத்தில் இருந்து வருகிறது. அந்தத் தாழ்த்தப்பட்ட ஆதிதிராவிட மாணவர்களுக்கு அரசாங்கமே விடுதியைக் கட்டித்தர ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மீஞ்சூர், சோழவரம் பகுதியில் படிக்கிற மாணவர்களுக்கும் நிரந்தரமான விடுதிகளைக் கட்டித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பொன்னேரியில் சிவில், கிரிமினல் வழக்கு நீதிமன்றங்கள், முதல் வகுப்பு நீதிமன்றங்கள் இருக்கின்றன. முதல் வகுப்பு நீதிமன்றங்கள் இரண்டும் தனியார் வாடகைக் கட்டிடங்களில் இருந்து வருகின்றன. அந்த நீதிமன்றங்களுக்கு அரசாங்கமே கட்டிடங்களைக் கட்டிக் கொடுக்க வேண்டும்.

அதேபோல பொன்னேரியில் அரசாங்கம் ஒரு பயணியர் விடுதியையும் கட்டிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து ஆரணி, மீஞ்சூர், பொன்னேரி, மூண்டியம்மன் நகர், காட்டூர் போன்ற கிராமங்களில் மக்கள் அதிகமாக வாழ்ந்து வருகிறார்கள். அந்தப் பகுதிகளில் குடிதண்ணீர் பிரச்சனை அதிகமாக இருந்து வருகிறது. குடிதண்ணீர் பிரச்சனையைத் தீர்ப்பதற்காக முயற்சி எடுத்து உலக வங்கியிடமிருந்தோ, எல்.ஐ.சி. போன்ற நிறுவனங்களிடமிருந்தோ கடன் பெற்றாவது பாதுகாக்கப்பட்ட குடிதண்ணீர் வழங்கிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அத்திப்பட்டு, வள்ளூர், நந்தியம்பாக்கம் போன்ற கிராமங்களில் நஞ்சை நிலங்கள் அதிகமாக இருக்கின்றன. அந்தக் கிராமங்களில் நிலத்தடி நீர் உப்பு நீராக போய்விட்டதால் விவசாயத்தை நம்பியிருந்த அந்த மக்கள் விவசாயம் செய்ய முடியாமல் அவதிப்படுகிறார்கள். ஆகவே அந்தப் பகுதியில் ஒரு தொழிற்சாலையை அமைத்து அங்கே இருக்கும் படித்த ஏழை வாலிபர்களுக்கு வேலைவாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. கே. பி. கே. சேகர்] [1985 ஏப்ரல் 1

என்னுடைய தொகுதியில் கல்லூர், மாங்கோடு, குமரகிருள பாக்கம், புச்சேரிமேடு போன்ற கிராமங்களில் சாலை வசதி இல்லாமல் இருக்கிறது. அந்த கிராமங்கள் அரசு பேருந்துகளையே பார்க்காத கிராமங்கள் ஆகும். ஆகவே சாலை வசதியை ஏற்படுத்தி, அரசு பேருந்துகளை விட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் ஸ்ரீ ரெங்கநாதன் பெருமாள் தேவஸ்தானம், ஸ்ரீபிரசன்னீஸ்வரர் தேவஸ்தானம் என்று இரண்டு பெரிய தேவஸ்தானங்கள் இருக்கின்றன. இந்த தேவஸ்தானங் களுக்கு 140 ஏக்கர் நிலம் இருக்கிறது. தனியார் யாரோ ஒருவர் பரம்பரை அறங்காவலராக இருந்து கொண்டு, 140 ஏக்கர் நிலத்திலும் வருகிற குத்தகையை யாருக்கும் கொடுக்காமல், கோவில்களும் அனுபவிக்காத வகையில் கொள்ளை அடித்துக் கொண்டிருக்கிறார்கள். இந்த சூழ்நிலையில் சட்டத் திருத் தத்தைக் கொண்டுவந்து அரசாங்கம் அந்த பாம்பரை அறங்காவ லர்களை நீக்க வேண்டும். அங்கே அறங்காவலர்கள் குழு அமைத்து, ஆலயத் திருப்பணியை செய்து கொடுக்க வேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியான பொன்னேரியில் ஒரு சிறிய அளவில் மருத்துவமனை இருக்கிறது. அந்த மருத்துவமனைக்கு ஆம்புலன்ஸ் வண்டியில்லாமல் இருக்கிறது. பொன்னேரியிலிருந்து சென்னைக்கு அவசர சிகிச்சை வேண்டுமென்றால் பேருந்திலே தான் வரவேண்டிய நிலை இருக்கிறது. இந்த நிலையை மாற்றுவதற்கு ஆம்புலன்ஸ் வண்டியை அந்த மருத்துவமனைக்கு அளித்திட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(பிற்பகல் 12-50)

என்னுடைய தொகுதியான பொன்னேரியிலிருந்து சென்னைக்கு பேருந்திலே வருவதென்றால் மூலகொத்தளம் வரையில் தான் பேருந்து வசதி இருக்கிறது. நான் சட்டமன்றக் கூட்டத்திற்கு வரவேண்டுமென்றால் அந்தப் பேருந்திலே வந்தால் குறித்த நேரத்திற்கு வரமுடியாத சூழ்நிலை இருக்கிறது. ஆகவே அருள்கூர்ந்து அரசு பொன்னேரியிலிருந்து சென்னை உயர்நீதிமன்றம் வரைக்கும் பேருந்துகளை விட வேண்டுமென்று



1985 ஏப்ரல் 1] [திரு. கே. பி. கே. சேகர்]

கேட்டுக்கொள்கிறேன். நானும் சட்டமன்றக் கூட்டங்களில் ஒழுங்காக கலந்துகொள்வதற்கு வாய்ப்பாக இருக்கும். அருள் கூர்ந்து என்னுடைய கோரிக்கைகளை நிறைவேற்றித்தர வேண்டுமென்று கேட்டு, வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி முடித்துக் கொள்கிறேன்.

* **திரு. வை. பாலச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த அவையில் வைக்கப்பட்டிருக்கிற 1985-86 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கை மீது நடைபெறுகிற விவாதத்தில் கலந்து கொண்டு நான் சார்ந்திருக்கிற இந்து முன்னணி பேரியக்கத்தின் சார்பாக சில கருத்துக்களைச் சொல்வதற்கு வாய்ப்பளித்தமைக்கு நன்றி தெரிவித்துக் கொள் கிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கையைப் பார்க்கிறபோது இந்த நிதிநிலை அறிக்கை என்கிற பெண்மகள் சீவி முடித்தவளாக, சிங்காரம் செய்தவளாக இருக்கிறாள். அப்படி சீவி முடித்த வளாக, சிங்காரம் செய்தவளாக இருக்கிற இந்த நிதிநிலை அறிக்கை என்ற பெண்ணிற்கு இந்து ஆலயங்களையும், இந்து ஆலயங்களுக்கு இருக்கிற நிலங்களையும் இந்துவிடமே கொடுத்து விடுவோம் என்ற அறிவிப்பைச் சொல்லி அந்த அறிவிப்பு என்ற மஞ்சளை பூசிவிட்டிருந்தால், மதுவிலக்கு மீண்டும் இங்கே அமலாக்கப்படும் என்ற குங்குமப்பொட்டை வைத்துவிட் டிருந்தால், கல்வி நிலையங்களில் மதங்களின் பெயரால் கல்வி நிலையங்களை அமைப்பதற்கு இருக்கிற ஒரு சூழ்நிலை இந்துக்களுக்குப் பாதகமான சூழ்நிலை, இந்துக்கள் என்டோ மென்ட் கட்டுகிற, பணம் கட்ட வேண்டுமென்ற சூழ்நிலை மாற்றப் படும் என்ற அறிவிப்பு என்ற பூச்சரத்தைச் சூட்டிவிட்டிருந்தால், இந்த சீவி முடித்த சிங்காரி கண்டவர் கண் பட்டுவிடுமோ என்று சொல்கிற அளவிற்கு இருக்கிற சிங்காரி லட்சுமிகரமான சிங்காரியாக இருப்பாளே என்ற ஆதங்கம் எங்களுக்கு உண்டு. ஆகவே இந்த சிங்காரியை லட்சுமிகரமான சிங்காரியாக ஆக்கு வதற்கு இந்த அரசாங்கம் முன் வரவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன் இங்கே நடைபெற்ற விவாதத்தின்போது இந்துக் கோவில்களுக்குச் சொந்தமாக இருக்கிற நிலங்களை நிலமில்லாத ஏழைகளுக்கு பிரித்துக் கொடுப்பது இந்த அரசாங்கத்தின் கொள்கையென்ற விளக்கத்தைச் சொன்னார்கள். அப்படி ஒரு

கொள்கை இருக்குமென்று சொன்னால், அது ஒரு ஆபத்தான கொள்கையாகத்தான் இருக்கும். இந்துச் சமுதாயத்தின் முதுகெலும்பை உடைக்கிற ஒரு கொள்கையாக அது ஆகிவிடு மென்பதால் அந்தக் கொள்கையை நான் இந்து முன்னணிப் பேரியக்கத்தின் சார்பாக வன்மையாகக் கண்டிக்கிறேன். அந்தக் கொள்கையை இந்த அரசாங்கம் மறுபரிசீலனை செய்ய வேண்டு மென்றும் கேட்டுக் கொள்கிறேன். Comrades now come to ride on the Hindus கம்யூனிஸ்ட்கள் இன்றைக்கு எப்போதும் இந்துக்கள் உணர்வோடு விளையாடுகிற ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. இந்து மதம் இந்த மண்ணிலே வளர்ந்தோங்கி இருக்கிறதென்று சொன்னால் இந்து மதத்தின் ஆதாரமாக இருக்கிற ஆலயங்களில் இன்றைக்கு ஓரளவிற்கு. . . . . ,

திரு. கு. ரமணி: துணைத் தலைவரவர்களே, ஜாதி, மதம், வகுப்பு என்ற அடிப்படையில் இங்கே ஒரு பட்ஜெட் வைத்திருப்பதாக நான் நினைக்கவில்லை. அனைத்து சமுதாய அமைப்புக்கும் உள்ளடக்கிய ஒன்றுதான் இங்கே இருக்கிறது. இப்படிப்பட்ட ஒரு நிலைமையில் மாண்புமிகு உறுப்பினர் இந்து சமுதாயத்தைப்பற்றி பிரித்துச் சொல்லி, காம்ரேடு இதிலே நிற்கிறார்கள் என்று சொல்வது சரியான ஒரு வாதப்பிரயோகம் அல்ல என்பதை நான் உங்கள் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

திரு. பொ. உத்திராபதி: துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ஒரு மதத்தைப் பற்றிப் பேசும்போது இன்னொரு மதத்தைத் தூண்டிவிடுகிற அளவுக்கு அது அமையாதா? இது வெளியே போகிறது என்றால் இந்துக்களுக்கும் இந்து அல்லாதவர்களுக்கும் பகைமை உணர்வைத் தூண்டிவிடுவது மாதிரி ஆகாதா? மாண்புமிகு உறுப்பினர் அப்படிப் பேசுவது சரிதானா? எதிர்காலத்தில் மற்றவர்களும் அவர்களுடைய மதத்தை அல்லது இவர்களைப் பற்றி பேசுகின்ற வாய்ப்பு ஏற்பட்டால் நிலைமை எப்படி இருக்கும்? ஆகவே இந்தப் பிரச்சனை மேலும் மேலும் முற்றிவிடக் கூடாது. இதற்கு நீங்கள் தீர்ப்பு அளிக்க வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.





மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இந்துக்களுடைய நலன்கள் பாதுகாக்கப்பட வேண்டுமென்ற அவர்களுடைய கருத்துக்களைச் சொல்கிறார்கள். அதேநேரத்தில் மற்ற சமுதாயத்தைப்பற்றி அவர் தவறாக ஒன்றும் சொல்லவில்லை.

திரு. கு. ரமணி: துணைத் தலைவரவர்களே, சமுதாயத்தைப் பற்றி அப்படிச் சொல்ல ஆரம்பித்தால் ஒட்டுமொத்தமான சமுதாயத்தைப் பற்றிச் சொல்வது வேறு. இந்துக்கள், கிறிஸ்தவர்கள், பார்சியர்கள், முஸ்லீம்கள் என்று பிரித்துப் பேச ஆரம்பித்தால் எப்படி சரியாகும்? அதிலும் குறிப்பாக அவர் 'காம்ரேடுகள்' என்று எங்களைப்பற்றிச் சொல்லி, நாங்கள் குறுக்கே நிற்பதாகச் சொல்கிறார். (குறுக்கீடு) காம்ரேடு என்ற அந்த ரெஃபரன்ஸ் எங்களைப்பற்றியதுதான். நாங்கள்தான் நேற்றைக்கு மாண்புமிகு அமைச்சர் வீரப்பன் அவர்களிடம் கேட்டு, அந்த நிலங்களைப் பங்கிட்டுக்கொடுக்க வேண்டுமென்று சொன்னோம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: ஒரு மதத்தினுடைய நலன்கள் காக்கப்பட வேண்டுமென்று பேசினார். அதைப் போன்று மற்றவர்களும் பேசியிருக்கிறார்கள். பேசுகிறார்கள். ஆகவே, அதில் தவறு இருப்பதாகத் தெரியவில்லை.

திரு. கு. ரமணி: அவர் இந்தமாதிரி ஒரு குறிப்பிட்ட சமுதாயத்தினுடைய நலன்கள் காக்கப்பட வேண்டுமென்று சொல்லும் போது, சமுதாயத்தினுடைய பெயராலே டிஸ்கஸ் பண்ணுவதற்கு ஒரு சந்தர்ப்பம் இருக்கிறது. ஆனால் பட்ஜெட்டில் இப்படிப்பட்ட ஒரு சூழ்நிலை இல்லை. பட்ஜெட் ப்ரொப்போசல் அப்படி வைக்கப்படவில்லை, தனிப்பட்ட ஒரு சமுதாயத்தைப் பற்றி இங்கே அப்ராபிரியேஷன் வருகிறபோது இப்படிப் பேசினால் நல்லது. ஆனால் சமுதாய வாரியாக பட்ஜெட்டிலே பிரித்துப் பேசினால் எப்படி சரியாக இருக்கும்? அதனால்தான் நாங்கள் உங்களுடைய ஆலோசனையைக் கேட்கிறோம். என்னைப் பொறுத்தவரையில் இந்தக் கருத்து இருப்பது சரியல்ல என்று கருதுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அவர் குறிப்பிட்ட ஒரு மதத்திற்கு சிறப்பான உரிமைகள், கல்வி நிறுவனங்களில், இதர அமைப்புகளில், கொடுக்கப்பட வேண்டுமென்று சொல்கிறார். அரசாங்கத்தில் அதற்கு என்று ஒரு துறையே இருக்கிறது. கூடுதல் உரிமை கொடுக்க வேண்டும் என்று சொல்கிறார். அதில் தவறு இல்லை. மற்றப் பிரிவினரும் அவரவருக்குக் கொடுக்க வேண்டுமென்று பேசிக்கொண்டிருக்கிறார்கள். அதைப்போன்றுதான் மாண்புமிகு உறுப்பினரும் பேசும்போது குறிப்பிட்டிருக்கிறார். (குறுக்கீடுகள்)

**திரு. கு. ரமணி:** நேற்று அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கக் கூடிய விஷயம் உங்கள் அரசாங்கத்தினுடைய கொள்கை இணைந்தது. . . . . . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அவர் பேசும்போது கூடுதல் உரிமை தரவேண்டும், கல்வி நிறுவனங்களில் மற்றவைகளில் கூடுதல் உரிமை வழங்கப்பட வேண்டும் என்ற கருத்துக்களைச் சொன்னார். அதைப் போன்று உங்களுடைய கருத்தை நீங்கள் பேசும்போது சொல்லலாம். இதில் குறுக்கிட வேண்டிய அவசியமே இல்லை.

**திரு. வை. பாலச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, என்னுடைய மரியாதைக்குரிய மாண்புமிகு மூத்த உறுப்பினர் அவர்கள் அவையின் மரபை மீறி, என்னைப் பேசவிடாமல் தடுத்துக்கொண்டிருக்கிறார்கள். எங்களுடைய உரிமைக்காக நாங்கள் போராடும்போது கிறிஸ்தவ சமுதாயத்தினரையோ அல்லது இஸ்லாமிய சமுதாயத்தினரையோ புண்படுத்தும் வேலையில் நாங்கள் ஈடுபடவில்லை. ஆனால் தங்களை கம்யூனிஸ்ட் கட்சியினர் என்று சொல்லிக்கொண்டிருக்கிறவர்கள்தான் இந்துக்களைப் புண்படுத்தும் சூழ்நிலையிலே இன்றைக்கு இருந்துகொண்டிருக்கிறார்கள். எங்களுடைய கருத்தை நான் (குறுக்கீடு).

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள் பேசும்போது பதில் சொல்லலாம். இப்படி வார்த்தைக்கு வார்த்தை குறுக்கிடுவது சரியல்ல. (குறுக்கீடு) இன்றைக்கு வாய்ப்பு இல்லை என்றால் நாளை பேசும்போது பதில் சொல்லலாம்.



கம்யூனிஸ்ட் என்றவுடனே இப்படி நான்கு பேர் எழுந்துவிட்டால் சபையை ஒழுங்காக நடத்த முடியாது. நீங்கள் ஒரு குறிப்பிட்ட சமுதாயத்தைப் பற்றிப் பேசும்போது அவர் தாங்கிக்கொண்டார். அவர் இப்போது பேசுவதற்கு நாளை நீங்கள் பதில் சொல்லலாம். அவ்வப்போது குறுக்கிடுவதற்கு அவர் தவறாக ஒன்றும் சொல்லவில்லை.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இங்கே பிரச்சனை என்னவென்றால், இந்துக் கோவில்களுக்கு நிலங்கள் இருக்கின்றன. அந்த நிலங்களிலே சிலர் உழுது பயிரிட்டுக்கொண்டிருக்கிறார்கள்; குத்தகை எடுத்திருக்கிறார்கள். அந்த நிலங்களை உழுபவர்களுக்கு பங்கிட்டுத் தரவேண்டுமென்பது கம்யூனிஸ்ட் கட்சியின் கொள்கை. அதை வற்புறுத்த அவர்களுக்கு உரிமை உண்டு. அதேமாதிரி இந்துக் கோவில்களுடைய நிலங்களைக் கொடுக்கக்கூடாது. இப்போது இருக்கிற முறையிலே இருக்க வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் சொல்லலாம்.

(பிற்பகல் 1-00)

ஆகவே இந்து சமுதாயத்தினர் என்று பிரித்து, கிருத்துவ சமுதாயத்தினர் என்று பிரித்து பேசவேண்டாம் என்பதுதான் பிரச்சனை. சமுதாயமாகப் பேசலாம். இந்துக் கோயில்கள் என்று பேசுங்கள். கோயில்களுக்கு உரிய உரிமையை பிரித்துக் கொடுக்கலாமா, வேண்டாமா என்பது பற்றி அவரவர்கள் கருத்தைச் சொல்லலாம். இந்து சமுதாயத்தினர், இந்து சமுதாயத்தினர் என்று வந்தால், மாண்புமிகு உறுப்பினர் ரமணி அவர்கள் சொல்வது போல், கிருத்துவ சமுதாயத்தினர், இஸ்லாமிய சமுதாயத்தினர் என்று சமுதாயப் பிளவுகளும் பேதங்களும் வந்துவிடும். ஆகவே இந்துக் கோயில்களுக்கு உரிய நிலங்கள் பற்றி தங்களுடைய கருத்தை அவர்கள் சொல்லலாம். கம்யூனிஸ்டுகள் அவர்களுடைய கருத்தைச் சொல்லலாம். மற்றவர்கள் அவரவர்களுடைய கருத்தைச் சொல்லலாம்.

[1985 ஏப்ரல் 1

**திரு. வை. பாலச்சந்திரன்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்துக் கோயில்களின் நிலங்களை இன்றைக்கு இந்த அரசாங்கம் தன்னுடைய கையில் வைத்துக்கொண்டு இருக்கிறது. இந்துக் கோயில்களின் நிலங்களை இந்த அரசாங்கம் நிலமற்றவர்களுக்குப் பிரித்துக் கொடுக்கின்ற ஒரு பணியிலே தன்னை ஈடுபடுத்திக் கொண்டால், அதனால் முழுமையாக பாதிக்கப்படுபவர்கள் இந்த இந்து மதத்தை தன்னுடைய உயிரினும் மேலாக மதிக்கிற இந்து சமுதாயத்தைச் சேர்ந்தவர்களாகத்தான் இருக்க முடியும் என்ற காரணத்தால், இந்து சமுதாயம் புண்படுகிறதே என்ற அளவிற்கு நான் இந்து முன்னணியின் சார்பாக திருப்பித் திருப்பி பேசினேனே தவிர, கிருத்துவ சமுதாயத்தையோ அல்லது இஸ்லாமிய சமுதாயத்தையோ புண்படுத்த வேண்டும் என்ற அல்லது அவர்களைப் பிரித்து பார்க்கவேண்டும் என்ற ஆசையிலோ நான் சொல்லவில்லை.

ஆகவே இன்றைக்கு இந்துக் கோயில்களுக்குச் சொந்தமாக இருக்கின்ற நிலங்களை ஏழைகளுக்குக் கொடுப்பதாக இருக்கும் அந்தக் கொள்கையை மறு பரிசீலனை செய்ய வேண்டும் என்று நான் இந்த அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

இது சம்பந்தமாக நான் ஒரு சம்பவத்தைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். கேரள மாநிலத்தில் இந்துக் கோயில்களுக்குச் சொந்தமான நிலத்தை ஏழைகளுக்குக் கொடுத்தார்கள். அப்படிக் கொடுத்த காரணத்தால், பல ஆண்டுகளுக்குப் பிறகு அங்கே இருக்கின்ற குருவாயூர் ஆலயத்திலே இருக்கிற ஆண்டவனுக்கு நைவேத்தியம் செய்வதற்குக்கூட அங்கே அரிசி இல்லாத சூழ்நிலை ஏற்பட்டு, இந்த மாநிலத்திலிருந்து அரிசி அனுப்ப வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. இன்று இந்துக் கோயில் நிலங்களை ஏழைகளுக்கு எடுத்துக் கொடுத்தால், பின்னாலே, இந்துக் கோயில்களிலே ஆலய வழிபாடுகள் நடத்த முடியாத சூழ்நிலை ஏற்பட்டால், இந்து சமூகம், இந்து சமுதாயம், இந்து தர்மம் ஆகியவைகள் அழிந்து போகும் என்பதை நான் அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். புரட்சித் தலைவர் அவர்கள் அரசு இந்தக் கொள்கையை மாற்றிக் கொள்ளவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். நிலம் இல்லாத ஏழைகள் மீதோ, அல்லது நிலம் இல்லாத உழவர்கள்



1985 ஏப்ரல் 1] [திரு. வை. பாலச்சந்திரன்]

மீதோ அல்லது தாழ்த்தப்பட்ட சமுதாயத்தினர் என்று சொல்லக் கூடிய மக்கள் மீதோ எங்களுக்கு அக்கறை இல்லாமல் இல்லை. ஏன் என்று சொன்னால், ஏழைகளாக வளர்ந்து, ஏழைகளாக வாழ்ந்துகொண்டு இருக்கிற; ஏழைகளுடைய உணர்வைப் புரிந்தவர்கள் நாங்கள். ஆனால் ஒரு பணியில் ஈடுபடுகிறபோது, அதனால் வருகிற லாப நஷ்டத்தைக் கணக்கிடுகிறபோது, அந்த நிலத்தை ஏழைகளுக்குக் கொடுக்காது, அந்த நிலங்களைச் சொந்தமாக வைத்திருந்தால், அதிலே வருகிற லாபம், நன்மை அதிகமாக இருப்பதால், இதை மறு பரிசீலனை செய்யவேண்டும் என்று என்னுடைய வேண்டுகோளைத் தெரிவிக்கிறேன். இவைகளை எல்லாம் நான் ஏன் சொல்கிறேன் என்றால், பாரதி பாடினான், "நல்லறம் நாடிய மன்னரை, நாளும் வாழ்த்தி, நயம் புரிவாள் எங்கள் தாய்" என்று. அதைப்போலவே தாயை வணங்குகிற நம்முடைய முதல்வர் அவர்களுடைய ஆட்சியில் நாளும் நல்லறம் நடைபெறவேண்டும், அது எல்லோருக்கும் சமமாக நடைபெறவேண்டும், எல்லா மதத்தவர்களுக்கும் நடைபெறவேண்டும் என்ற அக்கறையின் காரணமாக, இதை நான் சொல்கிறேன். இன்றைக்கு பல பேர்கள் கோயில்களுடைய நிலங்களை ஆக்கிரமித்து இருக்கிறார்கள். அந்த ஆக்கிரமிப்புகளை உடனடியாக அப்புறப்படுத்தி, அவைகளை கையகப் படுத்த வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

ஆலயங்களில் இன்றைக்கு அர்ச்சகர்களாக இருப்பவர்கள், தினந்தோறும் ஆண்டவனுடைய கருணைக் கண்ணின் கீழே நின்று கொண்டு இருப்பவர்கள், இந்த அரசாங்கத்தினுடைய கருணைப் பார்வைக்கு இலக்கு ஆகாத காரணத்தால் குறைந்த ஊதியத்தைப் பெற்றுக்கொண்டு அவர்கள் வாழ்ந்துகொண்டு இருக்கிறார்கள். காலையிலே எழுந்தவன் கால் வயிற்றுக் கஞ்சி கூட குடிக்க முடியாத அளவிற்கு ஆலயத்திற்குச் சென்று, அங்கே பணி செய்கிற அளவிற்கு, அவர்களுடைய ஊழியம் நடந்து கொண்டு இருக்கிறது. அவர்களுடைய ஊதியத்தை உயர்த்திக் கொடுக்க இந்த அரசாங்கம் முன்வரவேண்டும் என்ற வேண்டுகோளை நான் தங்கள் மூலமாக இவ்வரசின் முன்பு வைக்கிறேன்.

[திரு. வை. பாலச்சந்திரன்] [1985 ஏப்ரல் 1

அதேபோல் இந்து மதத்தினுடைய சிறப்பினை, இந்து மதத்தினுடைய தத்துவங்களைச் சொல்வதற்காக, ஆன்மீகத்தைப் பரப்புவதற்காக எல்லா ஆலயங்களிலும் பல ஆண்டு காலத்திற்கு முன்னாலே இருந்ததைப் போல ஒரு மத வகுப்பை, மதத்தைப் பற்றிப் போதிக்கின்ற ஒரு வகுப்பை நடத்தவேண்டும். அதற்கு ஒவ்வொரு ஆலயத்திலும் அரசாங்கம் ஒரு ஆசிரியரை நியமனம் செய்து, அதற்கு அரசாங்கம் ஏற்பாடுகளைச் செய்யவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இதையெல்லாம் விட்டு என்னுடைய பத்மநாபபுரத்திற்கு வர வேண்டும் என்று சொன்னால், என் தொகுதியிலே ஒரே ஒரு அரசாங்க மருத்துவமனை, தண்ணீர் வசதியின்றி, மின்சார வசதியின்றி இருந்து கொண்டு இருக்கிறது. அந்த மருத்துவமனைக்கு, நீர் வசதி, மின்சார வசதியை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய மாவட்டம் விவசாயிகள் அதிகமாக வாழ்கிற மாவட்டம். காலையிலே எழுந்து மாலை வரையிலும் கழனியிலே போய் வேலை செய்கிற விவசாயிகள் வாழ்கிற மாவட்டம். இன்னும் சொல்லப்போனால் காலையிலே எழுந்து கழனிக்குப் போகிறவன் மதியம் தன்னுடைய மதிய உணவை வயல் கரைகளிலே, வயல் வரப்பிலே சாப்பிடுகின்ற சூழ்நிலை இன்றைக்கும் இருக்கிறது. எனவே அந்த மாவட்டத்திற்கு வேளாண்மைக் கல்லூரி ஒன்று வேண்டும் என்று நான் இந்த அரசாங்கத்திற்கு வேண்டுகோள் வைக்க ஆசைப்படுகிறேன்.

அதேபோல் நிர்வாகத்தை மக்களிடத்திலே நெருக்கமாக எடுத்துச் செல்லவேண்டும் என்ற கொள்கையை இந்த அரசு வைத்திருப்பதாகச் சொல்லப்படுகிறது. ஆகவே என்னுடைய கல்குளம் தாலுக்காவை இரண்டாகப் பிரித்து ஒரு பகுதிக்கு இரணியல் தாலுக்கா என்று பெயரிட்டு, ஒரு காலத்திலே அரண்மனையாக இருந்த இரணியல் அரண்மனையை, அதற்குத் தலைமை அலுவலகமாக மாற்றவேண்டும் என்று இந்த அரசாங்கத்திற்கு முன்னால் என் வேண்டுகோளை வைக்க விரும்புகிறேன். அரசியல் நாணயமும் அரசியல் புனிதமும் எப்படி இருக்க வேண்டும் என்பதற்கு எடுத்துக்காட்டாக விளங்கிய கக்கன்ஜி



1985 ஏப்ரல் 1] [திரு. வை. பாலச்சந்திரன்]

அவர்கள் பெயராலே தக்கலை நகரில் ஒரு விளையாட்டு அரங்கம் ஏற்படுத்தித் தரவேண்டும் என்று நான் வேண்டி விரும்பிக் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, வரதட்சிணைக் கொடுமை என்பது இந்த மண்ணிலே இருந்து கொண்டிருக்கிறது. அது இந்துவாக இருந்தாலும், கிறிஸ்துவனாக இருந்தாலும், முஸ்லீமாக இருந்தாலும் நிச்சயமாக அது எல்லோருக்குமே ஒரு பிரச்சனையாக இருந்துகொண்டிருக்கிறது. ஆகவே, கை போனவனாக இருந்தாலும், கால் போனவனாக இருந்தாலும், கண் தெரியாதவனாக இருந்தாலும், எப்படி இருந்தாலும் சரி, ஏதாவது ஒரு வரன் கிடைத்தால் போதும் என்ற நிலைமைக்கு நம்முடைய சகோதரிகள் ஆளாக்கப்பட்டு, தவித்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு ஒரு நல் வாழ்வு கொடுக்கிற வகையில் இந்த வரதட்சிணைக் கொடுமையை ஒழிப்பதற்காக ஏற்படுத்தப்பட்டுள்ள சட்டத்தை தீவிரமாகச் செயல்படுத்தி எப்படி தீண்டாமையை கண்காணிப்பதற்குத் தனியாக ஒரு விங் இருக்கிறதோ அதேபோல இதற்கும் ஒரு தனி விங் ஆரம்பிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அத்தோடு மத மாற்றத்தைக் கண்காணிப்பதற்கும் தனியாக ஒரு விங் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என்ற வேண்டுகோளை வைக்கிறேன்.

அடுத்து, கன்னியாகுமரி மாவட்டம் என்று சொல்லப்படுகிற மாவட்டம், பாரதமாதாவின் பாதமாக இருக்கிற மாவட்டம். அந்த மாவட்டத்திலே மட்டுமே வாழக்கூடிய ஒரு இனம் இருக்கிறது. இந்து-கிருஷ்ண வகை என்று சொல்லப்படுகிற ஒரு சமுதாயம் அது. கிட்டத்தட்ட 70 ஆயிரம் பேர்கள் உள்ள அந்த சமுதாயத்தினர் இந்த நாட்டை, பாரத மாதாவை மிகவும் மதிக்கிறவர்கள். பாரத மாதாவின் பாதமாகிய அந்த மாவட்டத்திலே இருந்துகொண்டு, பாரத மாதாவிற்கு பாத பூஜை செய்கிற அந்தப் பணியிலே தங்களை ஈடுபடுத்திக் கொண்டிருப்பவர்கள் அவர்கள். தேசபக்தி கொண்டவர்கள். நாட்டுக்கு ஒரு ஆபத்து வருகிறது என்று சொன்னால், ஓடோடி வருகிற குணம் கொண்டவர்கள்.

[திரு. வை. பாலச்சந்திரன்] [1985 ஏப்ரல் 1

அவர்கள் இன்றைக்கு பிற்படுத்தப்பட்ட சமுதாயப் பட்டியலில் இருந்தாலும்கூட, கல்வி தகுதியிலே பின்தங்கிய அவர்களுக்கு கல்வியுதவி சலுகை கிடைப்பதில்லை. அவர்களை மிகவும் பிற்படுத்தப்பட்ட சமுதாயப் பட்டியலில் சேர்த்து, எல்லா வசதி வாய்ப்புகளையும் அவர்களுக்கு ஏற்படுத்தித் தரவேண்டும் என்ற வேண்டுகோளை வைக்கிறேன்.

அதுபோல எங்கள் மாவட்டத்திலே உள்ள ஆலயங்களிலே உள்ள குளங்கள் எல்லாம் தூர் எடுக்கப்படாத நிலையில் இருக்கின்றன. தெப்பக்குளங்கள் எல்லாம் குளிப்பதற்குக்கூட வசதி இல்லாத குளங்களாக இருக்கின்றன. அந்த தெப்பக்குளங்கள் எல்லாம் குளிப்பதற்கு மட்டுமின்றி பாசனத்திற்கும் பயன்படத் தக்க குளங்களாக இருப்பதால், அரசு அவைகளை கவனித்து ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அந்தக் குளங்களை தூர் வாருவதோடு அதன் கொள் அளவையும் சற்று அதிகமாக ஆழப்படுத்திக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

பராசக்தியைப் பார்த்து பாரதி ஒரு பாடலின் வாயிலாகச் சொல்லுகிறான் :

"இன்பம் கேட்டேன் ஈவாய் போற்றி
துன்பம் வேண்டேன், துடைப்பாய் போற்றி,
அமுதம் கேட்டேன், அளிப்பாய் போற்றி
சாவினை வேண்டேன், தவிர்ப்பாய் போற்றி"

என்று. அதுபோல அதனைத் திருப்பி அரசாங்கத்தைப் பார்த்து நாங்கள் கேட்க வேண்டும் என்று சொன்னால், நான் கேட்பேன்—

"சம உரிமை கேட்டேன், ஈவாய் போற்றி
மூன்று சிவில் சட்டம் வேண்டேன், மாற்றுவாய் போற்றி
இந்து ஆலயங்களைக் கேட்டேன், அளிப்பாய் போற்றி
மதுகடை வேண்டேன், மூடுவாய் போற்றி"

என்று சொல்லி மணி அடிக்கும் முன் முடிக்க வேண்டும் என்று நினைப்பதால்—ஏனென்றால் மணி அடித்தால் எங்கள் மாவட்டத்தில் கலவரம் வரும் என்பது பொருள். ஆகையினால்



1985 ஏப்ரல் 1] [திரு. வை. பாலச்சந்திரன்]

மணியின் சத்தம் கேட்டால் எனக்குக் கலக்கம் வரும். எனவே, இங்கேயும் மணி சத்தம் கேட்டால் கலக்கம் வரும் என்று நான் கருதுவதால் மணி அடிப்பதற்கு முன்னால் முடித்து அமர்கிறேன், நன்றி வணக்கம்.

* **திரு. கே. வி. வேணுகோபால் :** மாண்புமிகு மன்றத்தின் தலைவர் அவர்களே, பெரும் தலைவர் காமராசரும், அன்னை இந்திராஜி அவர்களும் தேசத்திற்கு செய்த சேவையின் காரணத்தினால் எங்களை மக்கள் விரும்பி தேர்ந்தெடுத்து வெற்றி பெறச் செய்திருக்கிறார்கள். இந்த 1985-86 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையை நமது நிதியமைச்சர் அவர்கள் ஏழை எளிய மக்களை பாதிக்காமல் இருக்கும்படி பார்த்துக் கொண்டு வந்திருப்பது, மிக நன்றாக இருக்கிறது. இதனால் தனித் தொகுதியான என்னுடைய தள்ளி தொகுதி மக்களின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் கிராமங்களில் குடிதண்ணீர் இல்லை. சாலை வசதி இல்லை. பஸ் வசதி இல்லை. என்னுடைய தொகுதியிலே டெங்கனிக்கோட்டை என்னும் தாலுக்காவிலே கோர்ட் இல்லை. அங்கேயிருந்து 80 மைல் தாண்டி உள்ள ஓசூருக்குத்தான் கோர்ட்டுக்காக வரவேண்டும். கிட்டத்தட்ட அந்த மக்களுக்கு 4, 5 நாட்கள் ஆகிறது. அது அவர்களுக்கு ரொம்ப சிரமமாக இருக்கிறது. அதை அரசு சற்று கவனிக்க வேண்டும். 20 வருடங்களுக்கு முன்னாலே தொட்டஹள்ளா என்று ஒரு டேம் கட்டப்படுவதற்கு சர்வே பண்ணி சேங்ஷன் ஆகிவிட்டது என்று சொன்னார்கள். ஆனால் என்னவாயிற்று என்று தெரியவில்லை. அதைக்கூட அரசு கவனிக்கவில்லை. அதேபோல கொரட்டகிரி டேம் என்று ஒரு டேம் கட்டுவதற்கு இரண்டு வாரத்திற்கு முன்னால் சர்வே பண்ணி நோட்டீஸ்கூட கலெக்டர் அவர்கள் கொடுத்துவிட்டார்கள். அதுகூட என்ன வாயிற்று என்று தெரியவில்லை. என்னுடைய தொகுதியில் உரிகம், பஞ்ஜபட்டி, கோட்டையூர் என்ற இடங்களில் 40, 50 கிலோ மீட்டருக்கு பஸ் வசதி இல்லை, தெரு விளக்கு இல்லை, ரோடும் இல்லை. அவர்கள் மாடுகளை வைத்து பிழைத்து வருகிறார்கள். அங்கே ஒரு ஒ வில்லேஜ் சென்டர் தேவை. அதேபோல

[திரு. கே. வி. வேணுகோபால் [1985 ஏப்ரல் 1

கும்மலாபுரம் வில்லேஜ்ஜுக்கும் ஒரு பி வில்லேஜ் சென்டர் தேவை. இவைகளை ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ஊராட்சி தேர்தல்களை உடனடியாக நடத்த வேண்டும் என்று அரசை கேட்டுக்கொள்கிறேன். விவசாயிகளுக்கு கொடுக்கிற மின்சாரத்தை 6 மணி நேரம் என்றுகூட வேண்டாம், 5 மணி நேரம் வைத்து, பகலில் 6 மணியிலிருந்து 11 மணி வரை கொடுத்தால்கூட நல்மாக இருக்கும். என்னுடைய பகுதி மேட்டுப் பகுதி விவசாயம். மேட்டு விவசாயத்தின் காரணமாக அங்கே கால் நடைகளுக்கும், மனிதர்களுக்கும் இரண்டு மாதத்திற்குத்தான் உணவு இருப்பு இருக்கிறது. மாட்டிற்கும் தீவனம் இல்லை, மனிதர்களுக்கும் உண்ண உணவு இல்லை.

(பிற்பகல் 1-10)

இப்பொழுது கேழ்வரகுதான் விளைந்துகொண்டிருக்கிறது. இரண்டு மாதம் போனால் மனிதர்களுக்கு சாப்பிடக்கூட உணவு கிடைக்காமல் போய்விடும். எனவே அதனை வறட்சிப் பகுதியாக அறிவிக்க வேண்டும்.

அங்கு 20 வருடங்கள் மற்றும் 30 வருடங்களாக வாழ்ந்து கொண்டிருக்கின்ற மக்கள், தங்களுக்கு என்று நிலங்கள் இல்லாமல் இருக்கிறார்கள். அவர்களுக்கு அந்த இடங்களைப் பட்டா செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்லாமல் தொட்டமஞ்சி என்ற கிராமம் இருக்கிறது. அந்த கிராமத்தில் 20 கிலோமீட்டரில், அங்கிருந்து ஒரு கர்ப்ப ஸ்திரீயை பிரசவத்திற்குக் கொண்டு செல்வோமானால் மிகவும் கஷ்டமாக இருக்கிறது. ரோடு இல்லை. குடிதண்ணீர் இல்லை. அந்த கிராமத்தில் இருக்கும் மக்களை கடவுள்தான் காப்பாற்ற வேண்டும். எனவே இவற்றையெல்லாம் நன்கு மனதிலே வைத்து கவனிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பஞ்சாயத்து யூனியன்கள், கிராமசேவக்குகள் என்று போட்டிருக்கிறார்கள். கிராமங்கள் இருக்கின்றனவே தவிர, கிராம சேவக்குகளை நாங்கள் எப்போதும் பார்த்தது இல்லை. கிராமங்களுக்கு அவர்கள் சேவை செய்ததும் இல்லை.



1985 ஏப்ரல் 1] [திரு. கே. வி. வேணுகோபால்]

எங்கே போனாலும் ஐ.ஆர்.டி.பி. லோன் வாங்கித் தருகிறேன் என்று கிராம மக்களை ஏமாற்றிக்கொண்டிருக்கிறார்கள். 2, 3 மாதங்கள் 100 ரூபாய், 300 ரூபாய், 500 ரூபாய் என்று செலவு செய்துகொண்டிருக்கிறானே தவிர லோன் கிடைப்பதில்லை. நன்றாக ஏமாற்றிக்கொண்டிருக்கிறார்கள். இதையெல்லாம் கவனிக்கவேண்டும்.

இங்கே இரண்டு யூனியன்கள் இருக்கின்றன. இரண்டு யூனியன்களிலும் தெலுங்கு வாத்தியார்கள் இல்லாமல் இருக்கிறார்கள். சத்துணவு சாப்பிட 100 பேர்கள் என்று போகிறார்களே தவிர, படிக்க போவது கிடையாது. ஒரு வாத்தியார்தான் இருக்கிறார். கல்வித் துறை அமைச்சர் அவர்கள் இதனை கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்லாமல், ஒன்று, இரண்டு அணைக் கட்டுகளை கட்டிக்கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தேன்கனிக்கோட்டையில் முன்சிப் கோர்ட், மாஜிஸ்ட்ரேட் கோர்ட் என்ற இரண்டு கோர்ட்டுகளை ஏற்படுத்தித் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

எனக்கு பேச வாய்ப்பு அளித்த தலைவர் அவர்களுக்கும், இந்த மாமன்றத்திற்கும், எங்கள் தொகுதி மக்களுக்கும் நன்றி கூறி விடைபெறுகிறேன்.

* திரு. க. சோலைராசு: பேரவைத் தலைவர் அவர்களே, நடமாடும் பல்கலைக்கழகமாம் நாவலர் அவர்கள் தந்திருக்கின்ற நிதிநிலை அறிக்கை விவாதத்தின்மீது என்னுடைய கருத்துக் களைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

நான் ஒரு விளையாட்டு வீரன் என்கின்ற வகையிலே, தமிழர்களுடைய வீர விளையாட்டாக இருக்கின்ற கபடி கழகத்தின் மாநில துணைச் செயலாளர் என்கின்ற முறையிலே முதலில் நாவலர் அவர்களுக்கு நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக் கிறேன்.

[திரு. க. சோலைராசு] [1985 ஏப்ரல் 1

உலக நாடுகளோடு ஒப்பிட்டு பார்க்கின்ற நேரத்திலே, இன்றைக்கு இந்தியத் துணைக் கண்டம் விளையாட்டிலே ஓரளவிற்கு முன்னேறிக்கொண்டு இருக்கிறது. மேலை நாடுகள் விளையாட்டிலே எப்படி முன்னேறிக் கொண்டிருக்கின்றன என்பதை ஆய்ந்து பார்க்கின்ற நேரத்தில், அந்தப் பகுதி மக்களுடைய வாழ்க்கைக்கு ஏற்றார்போல், வசதிகளுக்கு ஏற்றார் போல் அடிப்படை வாழ்க்கையை ஒட்டி அவர்கள் வாழ்கின்ற பகுதியிலே விளையாட்டு நுணுக்கங்களைச் சொல்லிக் கொடுக்கின்ற மன்றங்களை எல்லாம் வைத்து, அவர்களை விளையாட்டிலே முன்னேற்றிக்கொண்டு இருக்கிறார்கள். அந்த அடிப்படையில், தமிழகத்திலும், ஒவ்வொரு ஒன்றியத்திலும், விளையாட்டு மன்றங்களை ஏற்படுத்தி, அதன் மூலம் கிராம இளைஞர்களிடையே மண்டிக் கிடக்கின்ற வீரத்தை வெளிக்குக் கொண்டு வருவதன்மூகத்தான், நுணுக்கங்களையும், பயிற்சிகளையும் தருகின்ற வகையிலே ஏற்பாடு செய்து இருக்கின்ற திட்டத்தினை அறிவித்திருக்கிறார்கள். இப்படி ஒவ்வொரு கிராமத்திற்கும் விளையாட்டு மையம் அமைக்கக்கூடிய இந்த சிறப்பான சீரிய திட்டத்தை நான் முதலில் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதற்கு அடுத்து, சமுதாய பள்ளத்தாக்கில் விழுந்து கிடக்கின்ற ஏழை எளிய மக்களுக்கு உதவி செய்ய வேண்டும் என்ற உயரிய நோக்கத்தோடு இங்கே புளி, மிளகாய், மல்லி போன்ற 5 பொருட்களுக்கு ஒரு முனை வரியாக மாற்றியிருப்பதற்கு நான் உளமாற பாராட்டுகிறேன். அரசினுடைய சீரிய பரிசீலனைக்கு ஒரு கருத்தை இங்கே வைக்க விரும்புகிறேன். சீனி பார்க்காத கிராம மக்கள் வெல்லத்தை அதிகமாக பயன்படுத்துகின்ற காரணத்தால் மற்ற பொருட்களுக்கு ஒரு முனை வரி விதித்ததைப் போலவே இந்த வெல்லத்திற்கும் ஒரு முனை வரியாக விதிக்க வேண்டும் என்று அரசினுடைய பரிசீலனையில் வைக்க விரும்புகிறேன்.

இங்கே எனக்கு முன்னால் தி.மு.க. சார்பில் பேசிய மாண்புமிகு இராமநாதன் அவர்களுடைய தவறான சில விளக்கங்களுக்கு என்னுடைய விளக்கத்தைச் சொல்லி விவாதத்திற்குச் செல்லலாம் என்று கருதுகிறேன். எங்களுடைய நிதிநிலை அறிக்கையில் இந்தியத் துணைக்கண்டத்திலே தமிழகத்தில்தான் மின்சார இணைப்புக் கொடுப்பதில் முதலிடம் பெற்றிருக்கிறது என்று



1985 ஏப்ரல் 1] [திரு. க. சோலைராசு]

சொன்னபோது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள் அந்த முதலிடத்தின் பெருமையில் தமிழகத்தின் அந்த பெருமைக்கு மூல முதல் காரணமாக இருந்தது திராவிட முன்னேற்றக் கழகம் என்று சொல்லி சில புள்ளிவிவரங்களைச் சொன்னார்கள். அவருக்காக நான் சில விவரங்களை இந்த அவைக்கு வைக்க கடமைப்பட்டிருக்கிறேன். தமிழகத்தில் மொத்த கிராமங்கள் 15,735. அவற்றில் இன்றைக்கு வரை மின் இணைப்புப் பெற்றுள்ள கிராமங்கள் 15,634. மீதி 101 கிராமங்கள் மின் இணைப்புப் பெறவில்லை. அதேபோல் சிற்றூர் 47,838. அதிலே மின் இணைப்பு பெற்றவை 47,408. இன்னும் 430 கிராமங்கள் மின் இணைப்பு பெறவில்லை. அப்படி இருக்கிற கிராமங்கள் மலைகளாகவும், பாதை வசதி இல்லாத கிராமங்களாகவும் இருக்கிறது. அந்தப் பகுதிகளுக்கும் விரைவில் மின் ஒளி தருவதற்கு பாதைகளை செப்பனிட்டு அதற்கு மின் இணைப்புத் தருவதற்கு அரசு திட்டங்களைத் தீட்டிக்கொண்டிருக்கிறது. இந்த நேரத்தில் அந்த வெற்றியில் எங்களுக்கு பங்கு இருக்கிறது என்று சொல்லுகிற அவர்களுக்கு நான் இந்த சில கணக்குகளைச் சொல்ல விரும்புகிறேன்.

இன்றைக்கு வரை மின்சாரத்தை உபயோகிக்கிற அந்த பம்பு செட்டுகளின் எண்ணிக்கை 9 லட்சத்து 67 ஆயிரத்து 17-க்கு மின்இணைப்பு அரசு கொடுத்திருக்கிறது. அதிலே காங்கிரஸ் ஆண்ட காலத்திலேயும், திராவிட முன்னேற்றக் கழகம் ஆண்ட காலத்திலேயும் சேர்த்து மொத்தம் அவர்கள் மின் இணைப்பு கொடுத்த பம்புசெட்டுகளின் எண்ணிக்கை 7 லட்சத்து 47 ஆயிரத்து 746 ஆகும். ஆனால் புரட்சித் தலைவர் அவர்கள் புனித அரசில் 9 ஆண்டு காலத்தில் மின் இணைப்புப் பெற்ற பம்புசெட்டுகளின் எண்ணிக்கை 2 லட்சத்து 22 ஆயிரத்து 277 ஆகும். அவர்களை விட அதிகமாக இந்த 9 ஆண்டு காலத்தில் நாங்கள் மின் இணைப்பு பம்புசெட்டுகளுக்கு கொடுத்து இருக்கிறோம் என்று சொன்னால், அதிகமாக மின் இணைப்புக் கொடுத்ததில் எங்களுக்கு மிகப் பெரிய வெற்றியிருக்கிறது. ஆக அவர்கள் 28, 29 ஆண்டு காலத்தில் மின்இணைப்புக் கொடுத்த பம்புசெட்டுகளின் எண்ணக்கை 7 லட்சத்து 47 ஆயிரத்து 746 ஆகும். ஆனால் நாங்கள் 9 ஆண்டுகளில் 2 லட்சத்து 22 ஆயிரத்து 277 பம்புசெட்டுகளுக்கு மின்இணைப்பு கொடுத்து இருக்கிறோம்.

[திரு. க. சோலைராசு] [1985 ஏப்ரல் 1

(பிற்பகல் 1-20)

அதேபோல் 1975-76 ல் திராவிட முன்னேற்றக் கழக அரசு 198 கிராமங்களுக்குத் தான் மின் இணைப்பு கொடுத்து இருக்கிறது. ஆனால் 1982-83-ல் அ.இ.அ.தி.மு.க. அரசு 439 கிராமங்களுக்கு மின் இணைப்பு தந்திருக்கிறது. ஓரே ஒரு ஆண்டில். புயல் வேக சாதனையாக 439 கிராமங்களுக்கு நாங்கள் மின் இணைப்பு கொடுத்து இருக்கிறோம். அதே கணக்கில் அவர்கள் எடுத்துக் காட்டுகிறபோது 1975-76ல் 198 கிராமங்களுக்குத்தான் மின் இணைப்பு தந்து இருக்கிறார்கள். அப்படிப் பார்க்கிற நேரத்திலே வெற்றிக்கு வித்திட்டு மிக வேகமாக மின்னிணைப்புத் தந்திருக்கிறது அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு என்பதை நான் இந்த அவைக்கு வெளிப்படுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். என் இளம் வயதிலே தமிழகம் முழுவதும் நடந்த ஒரு விழாவைப்பற்றி, கோலாகமாக நடந்த ஒரு விழாவைப்பற்றி நான் இந்த அவைக்கு நினைவுபடுத்தக் கடமைப் பட்டிருக்கிறனே். இங்கே பேசிய அத்தனை உறுப்பினர்களும் எங்கள் கிராமங்களுக்கு மின்சார வசதி இல்லை, மின் இணைப்பு பம்புசெட்டுகளுக்கு கொடுக்க வேண்டுமென்றெல்லாம் கேட்டுக் கொண்டார்கள். அப்படிக் கேட்டுக் கொண்டவர்கள் ஆளுங்கட்சி உறுப்பினர்கள் மட்டுமல்ல, எதிர்க் கட்சிகளைச் சேர்ந்தவர்களும் கேட்டுக் கொண்டிருக் கிறார்கள். நான் 1972-73 என்று எண்ணுகிறேன். தமிழகம் முழுக்க கலைஞர் கருணாநிதி ஆட்சிக் காலத்திலே மின்சார முழுமை விழா என்ற ஒரு விழாவை நடத்திக் காட்டினார்கள். எங்களைப் போன்றவர்கள் இளைஞர்களாக அப்போது இருந்த காரணத்தினால் எங்களுக்கு பொருள் புரியாத, தெரியாத கார ணத்தால் அவர்களைப் பார்த்து விளக்கம் கேட்டபோது சொன் னார்கள், தமிழகம் முழுவதும் மின்சாரம் கிடைத்துவிட்டது, மின்சாரத்தைக் கொடுத்து நிறைவு செய்துவிட்டோம் என்று சொன்னார்கள். ஆகவே அதைக் குறிக்கிற முறையிலே நாட்டு மக்களுக்கு விழா மூலம் அதைச் சொல்லிக்கொண்டிருக்கிறோம் என்று சொன்னார்கள். அன்றைக்கு மின்சார உற்பத்தியைக் குறைவாகச் செய்து கம்பியை நீட்டிக்கொண்டு போய் ஒரு போலியான மாயையை வைத்துக் கொண்டு அவர்கள் விழா நடத்தினார்கள். ஆனால் இன்றைக்கு அவர்களே மின்சாரப்



1985 ஏப்ரல் 1] [திரு. க. சோலைராசு]

பற்றாக்குறை என்றும் மின்சாரம் வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட ஒரு போலிச் செப்படி வித்தையைச் செய்து காட்டினார்கள் அன்றைக்கு. ஆனால் இன்றைக்கு அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு சீரிய சிறப்பான பணியை மின்சாரத் துறையிலே செய்துகொண்டிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள் கிறேன்.

இந்த அவையிலே எனக்கு முன்னாலே பேசிய நண்பர்கள் சில குறுக்கீடுகள் செய்து சில விளக்கங்களை எழுப்பினார்கள். அதைப்பற்றிய சில விளக்கங்களை நான் கம்யூனிஸ்ட் கட்சி நண்பர்களிடத்திலே கேட்க விரும்புகிறேன். கோயில் நிலங்களை அரசு எடுக்கவேண்டும், எடுத்து உழுகின்ற உழவர்களுக்கும், தொழிலாளர் நண்பர்களுக்கும் கொடுக்க வேண்டுமென்று சொன் னார்கள். ஒரு சிறிய விளக்கத்தை மட்டும் நான் பெறவிரும்பு கிறேன். அவர்கள் எடுத்துக் கொள்ளச் சொல்வது இந்து கோயில்கள் நிலங்கள் மட்டுமா? அல்லது கிறித்துவ, முஸ்லீம் மதத்தைச் சேர்ந்த இடங்களையும் எடுத்துக் கொள்ளச் சொல்கி றார்களா? அந்தக் கொள்கையைச் சொல்ல அவர்கள் முன்வரு வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**திரு. கு. ரமணி:** நேற்றைக்கு இந்த விவாதம் வந்தது. இந்து கோயில்கள் என்று நாங்கள் பிரித்துச் சொல்லவே இல்லை. . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் முதன்முதலாகப் பேசுகிறார், ஆகவே வேண்டாம்.

**திரு. க. சோலைராசு:** நாட்டின் முதுகெலும்பு என்று சொல் லக்கூடிய விவசாயிகளுக்கு உதவுகின்ற முறையிலே உரத்திற்கு 5 சதவீத வரியை ரத்து செய்திருப்பது போற்றுதற்குரியது. நிலத்தடி நீர் குறைந்துகொண்டு வருகிற நேரத்திலே வானம் பார்த்த தமிழ்நாட்டிலே வானம் பொய்த்து விட்டாலும், மழை பொய்த்துவிட்டாலும் நான் பொய்க்கமாட்டேன் என்று சொல்கிற கருணை மேகங்களாக இருக்கிற மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள், நிலத்தடி நீர் இல்லாத சூழ்நிலையில் கசிவு நீர்க் குட்டைகள் கட்டுகிற அருமையான திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். அதற்காக வேளாண்மைத் துறை மூலமாகவும்,

[திரு. க. சோலைராசு] [1985 ஏப்ரல் 1

பொதுப்பணித் துறை மூலமாகவும், ஒவ்வொரு துளி ரத்தம் போன்று தண்ணீரை சேமித்து விவசாயிகளுக்கு உதவும் வகையில், நல்ல நோக்கத்தோடு கசிவு நீர்க் குட்டைகளைச் சிறப்பான முறையிலே ஏற்படுத்துகிற திட்டத்தைக் கொண்டு வந்திருப்பதை நான் பெரிதும் பாராட்டக் கடமைப்பட்டுள்ளேன்.

அரசு ஊழியர்களைப் பொறுத்தவரையில், இந்தியத் துணைக் கண்டத்திலே சிறப்பான வகையிலே அரசு நல்ல பல திட்டங்களைத் தீட்டிக் கொண்டு இருக்கிறது. புத்தாண்டு தினத்திற்குள் நான்காவது ஊதியக் குழுவின் அடிப்படையில் தமிழ்நாட்டிலே உள்ள 10 லட்சம் அரசு ஊழியர்கள் பயன் அடையுமாறு வேறுபாடுகளைக் களைந்து அள்ளித்தருகிற தெள்ளமுதாக, தேனமுதாகத் தர இருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். அரசு ஊழியர்களிடையே உள்ள வேறுபாடுகளைக் களைந்து அவர்களுக்காகப் பாடுபட வேண்டுமென்ற உயரிய நோக்கத்தோடு செயல்படுகிற புரட்சித் தலைவரின் புனித அரசு திட்டம் தீட்டிக்கொண்டு வருகிறபோது, ஊதியக் குழுவின் அறிக்கை என்ன ஆயிற்று, என்று கேட்கிறவர்களைப் பார்த்து நான் கேட்க விரும்புகிறேன். மேற்கு வங்கத்திலே ஊதியக் குழுவின் அறிக்கை, இந்தியப் பேரரசின் ஊழியக் குழுவின் அறிக்கை ஏன் இவ்வளவு காலதாமதம் ஆகிக்கொண்டிருக்கிறது? அதை எண்ணிப் பார்க்கிறபோது புரட்சித் தலைவரின் புனித அரசு, அரசு ஊழியர்களுக்காக நல்லது செய்யும். அதற்கான பச்சைக் கொடியை அவர்கள் காட்டிவிட்டார்கள் எங்களுக்கு என்று, அவர்கள் எங்களுக்கு எல்லாம் உதவுவார்கள் என்று என்.ஜி.ஓ. சங்கம் போன்ற சங்கங்கள் அறிக்கை விட்டுக் கொண்டிருக்கிறார்கள். நம்பினார் கெடுவதில்லை இது நான்கு மறை தீர்ப்பு என்று சொல்வார்கள், அதைப் போன்று புரட்சித் தலைவரை நம்பி யாரும் கெட்டதில்லை. நம்பாமல் கெட்டவர்கள் இருக்கிறார்கள், ஆகவே அரசு ஊழியர்கள் புரட்சித் தலைவர் அவர்களை நம்பியிருக்கிறார்கள். அரசு ஊழியர்களுக்கு ஓய்வூதியம் 1,500 ரூபாய் என்று இருந்த உச்ச வரம்பை நீக்க முடிவு செய்யப்பட்டு இருக்கிறது. அதைப்போன்றே பணிக்கொடை 36 ஆயிரம் ரூபாயிலிருந்து 50 ஆயிரம் ரூபாய் என்று உயர்த்த முடிவு செய்யப்பட்டிருக்கிறது. இவையெல்லாம் பாராட்டுக்குரியது. வளமான வார்த்தைகளுக்கும், ஆழம் தோய்ந்த உவமைகளுக்கும் சொந்தக்



1985 ஏப்ரல் 1] [திரு. க. சோலைராசு]

காரரான கண்ணதாசன் அவர்களுக்கும், கொடிகாத்த குமரன் அவர்களுக்கும், சிறப்புச் செய்திருக்கின்ற புரட்சித் தலைவரவர்களைப் போற்றி, வருகின்ற மானியக் கோரிக்கைகளில் மற்ற விஷயங்களைப் பற்றிப் பேசுவதற்கு சந்தர்ப்பம் இருப்பதால், என்னுடைய தொகுதி சம்பந்தமான பிரச்சினை ஒன்றை மட்டும் சொல்ல விரும்புகிறேன்.

என்னுடைய தொகுதியில் உள்ள பழையபாளையத்தில் சிமெண்ட் தொழிற்சாலை அமைப்பதற்கு ஏற்ற வகையில் ஏராளமான மூலப்பொருட்கள் கிடைக்கின்றன என்று வேண்டியவர்களெல்லாம் சொல்லியிருக்கிறார்கள். எனவே, தொழில் அமைச்சரவர்கள் அதை ஆய்வுக்கு எடுத்துக்கொண்டு, என்னுடைய தொகுதியில் சிமெண்ட் தொழிற்சாலை கட்டித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு கதர்த்துறை அமைச்சரவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். எங்கள் தொகுதியில் இருக்கின்ற வேலையற்ற பெண்களுக்கெல்லாம் உதவும் நோக்கத்தோடு, குறைந்தது ஐந்து இடங்களிலேயாவது கிராமீய நூற்பு நிலையங்களை அமைத்துத் தர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

புரட்சித் தலைவரவர்களின் புனித அரசு மூன்றாம் முறையாக ஏற்பட்ட பிறகு, திட்டத்திலே இப்பொழுதிருக்கின்ற மிகப்பெரிய கசிவுநீர்க் குட்டைகளையெல்லாம் விரைவிலே கட்டித் தர வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். வணக்கம்.

திரு. கு. ரமணி: தலைவரவர்களே, உறுப்பினர் அவர்கள், கம்யூனிஸ்ட் கட்சி நண்பர்களைக் கேட்கிறேன் என்று சொன்னார். ஆகவே, இப்படி ஒரு கேள்வியை அவர்கள் கேட்டு விட்ட காரணத்தினால் பதில் சொல்ல வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது.

திரு. கே. எஸ். எம். இராமச்சந்திரன்: நாங்கள் அன்றைக்கு இவ்வாறு பதில் சொல்ல எழுந்த நேரத்தில், "உங்கள் கட்சி சார்பில் பேசுகின்ற சந்தர்ப்பம் வரும்பொழுது பதில் சொல்லிக்

கொள்ளலாம்" என்று தீர்ப்பளித்திருக்கிறீர்கள். ஆகவே, இப்பொழுது மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மட்டும் பதில் சொல்ல ஒரு சந்தர்ப்பம் கொடுப்பது முறையாக இருக்காது.

**திரு. கு. ரமணி :** அவர்கள் கேள்வி கேட்டதால் நான் பதில் சொல்ல வேண்டியிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. ரமணி அவர்கள் உட்கார வேண்டும். உறுப்பினர்கள் நேரடியாக ஒருவருக்கொருவர் கேள்வி கேட்டுக்கொள்வதோ, பதில் அளித்துக்கொண்டிருப்பதோ முறையாகாது. யார் பேசுவதாக இருந்தாலும் பேரவைத் தலைவர் மூலமாகவே பேச வேண்டும். நான் எதையும் எக்ஸ்பன்ஜ் பண்றுவது இல்லை என்று இருக்கிறேன். அவர் கேட்டது அப்படியே நடவடிக்கைக் குறிப்பில் இருக்கிறது. உங்கள் கட்சி சார்பில் பேசும்போது அதற்கு நீங்கள் பதில் சொல்லிக்கொள்ளலாம். (குறுக்கீடு)

**திரு. கு. ரமணி :** கம்யூனிஸ்ட் கட்சி நண்பர்களைக் கேட்கிறேன் என்று சொன்னார். அதனால்தான் சொல்ல வேண்டியிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வெளியில் இருப்பவர்களையும் சேர்த்துத்தான் சொன்னார். அதற்குப் பதில் வெளியேயும் சொல்லலாம். நீங்கள் பேசும்போதும் சொல்லலாம்.

பல உறுப்பினர்கள் புதிதாக வந்திருக்கிறார்கள். அவருடைய பிரசென்டேஷன் அப்படி இருக்கிறது. போகப்போக கொஞ்ச நாட்களில் எல்லாம் சரியாகிவிடும். அவர் அப்படி கேள்வி கேட்டது முறையாகாது.

**திரு. கு. ரமணி :** கேட்டது முறையானது என்று சொன்னால், சரி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை (2—4—1985) காலை 9-00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

**பின்னர் பேரவை பிற்பகல் 1-39 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.**



## 6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

### (அ) சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

146. தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனத்தினரால் விற்கப்படும் காகிதங்களுக்கு விற்பனை வரியிலிருந்து விலக்களிப்பது குறித்து வணிக வரிகள்—சமய அறக் கட்டளைகள் துறையின் 15—11—1984 ஆம் நாளிட்ட 1247 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

147. தமிழ்நாடு 1951ஆம் ஆண்டு அமைச்சர்கள் பயணப்படி விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து பொதுத்துறையின் 13—10—1984 ஆம் நாளிட்ட 1750 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1951ஆம் ஆண்டு ஊதியம் வழங்கல் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 20/1951) 14 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

148. தமிழ்நாடு 1968ஆம் ஆண்டு மரக்கட்டை எடைமாறுபாட்டு விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து வனமீனளத் துறையின் 19—12—1934 ஆம் நாளிட்ட 1318 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1882ஆம் ஆண்டு வனச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 5/1882) 64-வ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

149. தமிழ்நாடு 1962ஆம் ஆண்டு வேளாண் விளைபொருள் அங்காடிகள் விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து வேளாண்மைத் துறையின் 11—2—1985ஆம் நாளிட்ட 227ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு வேளாண் விளைபொருள் அங்காடிகள் சட்டத்தின் (தமிழ் நாடு சட்டம் 23/1959) 29 (4) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

[1983 ஏப்ரல் 1

150 மதுரை பாண்டியன் பொறியியல் கழகத்தின 1983-84ஆம் ஆண்டுக்கான பத்தாம் ஆண்டறிக்கை [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

(ஆ) அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

எதுவுமில்லை.

தமிழ்நாடு ஆவணக்காப்பக நூலகம் சென்னை-600 008
136429

D
V211,31 N85
N85.4.5

தமிழ்நாடு ஆவணக்காப்பக நூலகம்,
எழும்பூர், சென்னை-600 008.

## தவணைத்தாள்.

சே எண் : ப. எண் :

| வழங்கிய நாள். (1) | திரும்பிய நாள். (2) | வழங்கிய நாள். (1) | திரும்பிய நாள். (2) |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

S.F. ?‘ \-6—1,00,000—30-1-84.